Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
ஏப்ரல்.02–08,1995 ரூபா 10/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 96

## சந்திரிக்காவின் இந்திய விஜயம்



இராஜதந்திரியின் அரசியல் அலசல்

பிரபா தெரிவித்த முக்கிய சமிக்ஞை!

எக்ஸ்ரே ரிப்போர்ட்



பெண்களுக்கு இளமையான தகவல்கள்

சினி விசிட்

நடிகைகளின் பேட்டியில் சுவையான சங்கதிகள்

# முரசம்

## மலையக மக்களின் சமத்துவம்

அன்புடன் உங்களுக்கு,
வணக்கம்:
மலையகத் தமிழ் மக்கள்
அனைவருக்கும்-
பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும்.
இந்த விடயத்தில்
இருவேறு கருத்துக்கு
இடமிருக்க முடியாது.

பிரஜாவுரிமை வழங்கப்பட்ட
மலையக தமிழர்கள் கூட
நடைமுறையில்-
பல்வேறு சங்கடங்களை
எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மலையக தமிழ் மக்களை
அந்நியர்களாக கருதும் போக்கு
பல்வேறு மட்டங்களிலும்
தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுகிறது.

மலையக தமிழர்களுக்கு
வழங்கப்பட்ட பிரஜாவுரிமை
அனுதாபத்தால் பெறப்பட்ட சலுகையல்ல.
பிரஜாவுரிமை என்பது
மலையக மக்களுக்குள்ள உரிமை.

இனவாத அரசியல் அதிகாரத்தால்
மறுக்கப்பட்ட, பறிக்கப்பட்ட
அந்த உரிமையை
இரத்தம் சிந்தும் போராட்டம் இல்லாமல்
வழங்க முன்வந்தவர்களை
பாராட்டலாம்.
வள்ளல்கள் என்று வாழ்த்த முடியாது.

கிடைக்க வேண்டியது தானே
கிடைத்தது. அதனைக்
கொடை என்று நினைக்கக் கூடாது.
இன்னமும் கிடைக்க வேண்டியிருக்கிறது.
பிரஜாவுரிமை மட்டுமல்ல
மலையக மக்கள்
இந்த நாட்டின் சமத்துவமான
குடிமக்கள்-அவர்கள் வாழும்
பகுதிகள் அவர்களுக்குச் சொந்தமானவை.

இவற்றை-இந்த ஜீவாதார உரிமைகளை
எழுத்திலோ-
வெறும் சொற்பதத்திலோ அல்லாமல்
நடைமுறையில் அங்கீகரிக்கும்
செயற்பாடுகளே முக்கியமாகும்.

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி
விடயத்தில் கூட
இழுபறி நிலை தீரவில்லை.

மலையக தமிழ் மக்கள் சார்பாக
இரண்டு அமைச்சர்கள் இருக்கின்றனர்.

அவர்களும் எடுத்துச் சொல்லி
இயன்றவரை முயல்கின்றனர்.
தீர்வு மட்டும்-
கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலை!

மலையக தமிழ் மக்களது
நியாயமான அபிலாசைகளுக்காக
வடக்கு-கிழக்கு தமிழ் கட்சிகளும்
இணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

'தமிழ் பேசும் பாராளுமன்ற
உறுப்பினர்களது ஒன்றியம்'
என்னும் அமைப்பு இருக்கிறது.

தற்போதைய நிலையில்
தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள்
எண்ணிக்கை பலமான அம்சம்.
விரும்பியோ-விரும்பாமலோ
ஆளும் கட்சியும்
எதிர்க்கட்சியும்
கௌரவம் கொடுத்தேயாக வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தை
சரிவரப் பயன்படுத்தி
பொதுப் பிரச்சனைகளில் ஒருமித்து
குரல் கொடுப்பது
காலத்தின் கட்டாய அவசியம்!

வடக்கு-கிழக்கு-
தமிழ் கட்சிகளுக்கு ஒரு பொறுப்புண்டு.
மலையகத் தமிழர்களது
குடியுரிமை பறிக்கப்பட்டபோது
வடக்கு-கிழக்கு தமிழ் பிரதிநிதிகள்
உரிய எதிர்ப்பை
தெரிவிக்கத் தவறியிருந்தனர்.

தந்தை செல்வா மாத்திரமே
எதிர்த்துக் குரல் கொடுத்தார்.
கடந்த காலம் போல் அல்லாது
தமிழ் பேசும் மக்கள் என்றவகையில்
செந்தமிழால் ஒன்றுபட்டு
பொதுப் பிரச்சனைகளில்
ஒருவருக்கொருவர் அனுசரணையாக
செயற்பட வேண்டியது முக்கியம்.

வடக்கு-கிழக்கு பிரச்சனையிலும்
தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே
முரண்பாடுகளை மூட்டிவிட்டு
வேடிக்கை பார்க்க
இனவாத விஷமிகள்
நிரம்ப அக்கறைப்படுகிறார்கள்.

பிரித்தாளும் சூழ்ச்சி
இனிச் செல்லாது என்பதை
தமிழ்-முஸ்லிம் அரசியல் தலைவர்கள்
தம் ஒற்றுமையால் உணர்த்த வேண்டும்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## என்றும் புகழ் பாடுவோம்

ஜெபித்தல் அல்லது பிரார்த்தனை செய்தல் என்பது மனித வாழ்வில் முக்கியமானதொன்று. காலையில் எழுந்தவுடன் மனதைத் தூய்மையாக்கிக் கடவுளை வணங்குவது எண்ணங்களைப் பரிசுத்தமாக்கிக் கொள்வதற்கும், எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை உண்மையாக்கிக் கொள்வதற்கும் மிகவும் உதவியானது.

"ஆண்டவரே உம்மை வேண்டுகிறேன். காலையில் என் குரலைக் கேட்டருள்வீர்; காலையில் என் மன்றாட்டுக்களை உம்மிடம் எடுத்துச் சொல்லி உதவியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன்" (சங்: 5:3)


ஆம். காலையிலேயே, நமக்குக் கிடைத்த நல்லவைகளுக்காக அந்த நல்லவனை வணங்கி, துதித்து, நன்றிகூறிப் பின் இன்றைய பொழுதும் எல்லாம் நல்லவைகளாக அமைய வேண்டும் என்று மன்றாடுவோம். இது அன்றைய பொழுதை நல்ல பொழுதாகக் கழிப்பதற்கு நமக்கு ஒரு தெம்பையும் தெளிவையும் தரும்.

எனவே, தேவ ஆவியில் நிறைவு பெறுங்கள்; தேவ ஆவி ஏவிய சங்கீதங்கள், புகழ்ப்பாக்கள், பாடல்கள் இவற்றைக் கொண்டு உரையாடி ஆண்டவருக்கு உளமார இசை பாடிப் புகழுங்கள். (எபி.5:19)

அக, உலக வாழ்க்கையில் ஈடுபடும் பொழுதே செய்பவை எல்லாவற்றையும் அவனுடைய பாதங்களுக்கு காணிக்கையாக்கி அவனைப் புகழ்ந்து வாழ்ந்தால் நம் வாழ்வு ஒளி பெறும், நன்மை வந்து சேரும்.

ஏ.பி.வி.கோமஸ்

# ஆன்மீகம்



## நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொன்மொழிகள்

கடன்பட்ட மனிதரின் ஜனாஸாவை நபி(ஸல்) அவர்களின் சமூகத்திற்கு (தொழவைப்பதற்காக கொண்டு வரப்பட்டால், "தனது கடனை நிறைவேற்றும் அளவுக்கு ஏதும் சொத்துக்களை இவர் விட்டுச் சென்றுள்ளாரா?"

என்று கேட்டார்கள். "கடனை அடைக்கும் அளவுக்கு செல்வத்தை விட்டுச் சென்றுள்ளார்" என்று அறிவிக்கப்பட்டால் (அவர்களே) தொழவைப்பார்கள். இல்லையெனில் முஸ்லிம் சகோதரர்களிடம் "உங்கள் தோழர்களுக்கு நீங்களே தொழவைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி (ஒதுங்கிக்கொண்டு) விடுவார்கள். இஸ்லாமிற்கு வெற்றிக்கு மேல் வெற்றியை அல்லாஹ் அருள் புரிந்து கனீமத்து பொருட்கள் கிடைக்க ஆரம்பித்ததும் மக்களை அழைத்து அவர்களுக்கு மத்தியில் எழுந்து நின்று

"மூஃமீன்களுக்கு அவர்களின் ஆத்மாவைக்காண நான் உயர்வானவராக இருக்கிறேன். ஆகவே மூமீன்களில் யாரேனும் கடனுள்ள நிலையில் இறந்துவிட்டால் அதை நிறைவேற்றுவது எமது பொறுப்பாகும். அவர் ஏதும் பொருட் (செல்வங்)களை விட்டுச் சென்றால் அதை அவரின் உறவுக்காரர்கள் அடைந்து கொள்ளட்டும் (எனக்கோ கடன் அடைப்பதற்கோ அது தேவையில்லை)" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஜே-ஹபீப்-குவைத்.

## கவிதைப்போட்டி இல-93

### பரிசுக்குரிய கவிதை

### பார்வை

'மழுங்கியது 'கத்தி'யுந்தன் கூர்மை!
அதை-
விழுங்கியது கன்னியுந்தன் பார்வை!'

பானுரமீஸ்-மஹபாகே, இராகம.

### விழி வீச்சு

முழுமதி
வெட்கி நிற்கும்
உன் முகம்
கண்ட பின்னர்.
குறு வாளும்....
தோற்றுப் போகும்-உன்
விழி வீச்சின்
ஆழம் கண்டு!

ஏ.அஹமது ஜுனைது
ஏறாவூர்-06.

### எது தேவை

அப்பிள் கன்னத்தை
அறுத்து சுவைக்க
கத்தி எதற்கு?

க.மாலா-அக்கரைப்பற்று-08.

### புத்தியுள்ள பெண்ணடி நீ!

கத்தி விழியாலென்னை
குத்தி விட்டு; என்னிடமே
'கத்திகூரா?' என்று கேட்கும்
புத்தியுள்ள பெண்ணடி நீ!

செ.குணரத்தினம்-மட்டக்களப்பு.

### நந்தலாலா

காதலெனும் தீவினிலே நந்தலாலா!
கன்னிக்கணை (கத்தி) தொடுத்தால்
நந்தலாலா!
புத்தி பிசகாதார் நந்தலாலா!
புவியினில் யாருளர் நந்தலாலா!

நா.ஜெயபாலன்-பிபிலை.

### எச்சரிக்கை!

அர்த்தம் புரியாமல்
அத்துமீறினால்
அழகிக்(ற்)குள்
ஆபத்து
காத்திருக்கிறது.

தீபன்-பண்டாரவளை.

### "அழிவு வரும்"

அபாயச் சின்னமாம் அழகுக் கன்னியும், கத்தியும்
அவதான பாவிப்பில் அமைதி தரும்
அவசர செயல் பாட்டில் அழிவு வரும்.

வாழையூர் வைரமுத்து.

### வேல் வேண்டும்

கனியுண்ணும் தருணமல்ல
கத்திக்கு விடையைக் கொடு
களம் வெல்ல வேல் வேண்டும்
கன்னியே,
கொஞ்சம் இரவல் கொடு.

எஸ்.பி.முத்து-கொலன்னாவ.



### மூ வாள்!....

'கரத்தினில்...!
ஒரு வாள்..!
முகத்தினில்....
இரு வாள்!!'

வாஹிட்ஏ.குத்தூஸ்-பதுளை.

### கோடி கவி பிறக்கும்

கூர்வாளின் குணமதுவோ
கொடுமைசெய்து உயிர்பறிக்கும்-உன்
குறும்பான பார்வையதோ
கோடி கவி பிறக்க வைக்கும்.

ச.மகாலிங்கம்-வெலிமடை.

### தீர்வு

கத்தியின் கூர்மை
கன்னியின் பார்வை
கட்டலாம் தீர்வை
எட்டுமோ போர்வை.

ஜி.மஹாவசம்-கொழும்பு-15.

### மிரட்டல்

முழுமதி தோற்றது உன்
முகத்தில்
வானவில் தோற்றது உன் வளை
புருவத்தில்
கருவண்டு தோற்றது உன்
கருவிழியில்
கொவ்வைப்பழம் தோற்றது உன்
செவ்விதழில்
ஒப்புக்கொண்டு விட்டேனே
இன்னும்
ஏன் இந்த மிரட்டல்?

கவிநாதன்-கொழும்பு-04.

### விழிவீச்சிலும்....

வாள் வீச்சில் மட்டுமல்ல
காதலி விழி வீச்சிலும்
வன்முறை குடியிருக்கிறது!

அ.குமணன்-பாண்டியூர்-01.

### கூர்மை

'அதிக கூர்மை கத்தியிலா?
அல்லது, உன் கருவிழிகளிலா?
என்ற சந்தேகம் வந்துவிட்டதோ
இந்த ஆய்வாளர் முரசாருக்கு.'

வடிவேல் மரிய அகிலா-சிலாபம்.

### இனியும் தொடாதே

இதயம் போகுதென
இவளை நீயும் தொடாதே
காவலென கத்தியேந்தும்
கன்னியுடன் மோதாதே


தெ.லோஜனா-கொழும்பு-15.

### யாருக்குக் குறி

காரிகை விழியே
கத்தியாய் நெஞ்சைக்
குத்தித் துளைக்கக்
கூரிய கத்திகாட்டிக்
குறிவைத்தல் ஏதுக்கு?

ஏ.சீ.அப்துல் றகுமான்
ஏறாவூர்-06

## கவிதைப் போட்டி இல-96



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 08.04.95

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 96
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

### புத்தி

கத்தியோடு உலாவுகிறாள்
புத்தியுள்ள பூவையிவள்.

என்.ஏ.புவனேஸ்வரி-பசறை.

### எங்கே?

ஆண்மை வீரமென்றால்
பெண்மை தெய்வமென்று
வெறும் சாகச வார்த்தைகளால்
சமாதியை கட்டியவன்
எங்கே?
இருந்தால் இவளிடம்
வரட்டும்.

பன்னீர் புஸ்பா-கொழும்பு.

### ஆயுதம்

கத்தியொன்று தேவையில்லை கன்னியே!
சத்தியுண்டு உந்தனது கண்ணிலே!
கச்சிதமாய் வீசிவிடு பார்வையை!
மச்சினர்கள் வீழ்ந்திடுவர் பாரினில்!

வட்டவளை-உதயநிலா.

### தோல்வி

கன்னியின் பார்வை
கத்தியிலும் கூர்மை என
நிரூபிக்க வந்த நிலவுதேவதை
நிச்சயம் தோல்வி
உனது...பார்வைக்கு அல்ல....
கத்தியின் கூர்மைக்குத்தான்.

என்.சஹாப்தீன்-ஒட்டமாவடி

## வாசகர் சாலை

**பேச்சுவார்த்தை தொடர்பாக 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' துருவிச் சொன்ன விமர்சனங்கள் யாவும் உண்மையாகி வருகின்றனவே. எக்ஸ்ரே என்றால் எக்ஸ்ரேதான்** கே.வில்பிறட்-நீர்கொழும்பு

திகைக்கும் செய்திகள்
நயக்கும் வண்ணங்கள்!
முத்தாப்பாய் தலைப்புக்கள்
இரசிக்க பல கதைகள்!
சுதந்திரத்தின் வெளிப்பாடு.

இத்தைனயும் தன்னகத்தே கொண்டது தான் முரசு.

ராஜன் ராமன்-பொகவந்தலாவ.

□□

### வாரம் ஒரு நாடு

தினமுரசே நீ வாராவாரம் அறிவுக்கு ஏற்ற விடயங்களை அள்ளி வழங்குகின்றாய். நன்றி. 'பாப்பாமுரசு' என்னும் பகுதியில் 'வாரம் ஒரு நாடு' இடம் பெறுவது வரவேற்கத்தக்கது.

லே.டி.எஸ்.வெக்-மட்டக்களப்பு.

□□

### குடும்ப முரசு

தித்திக்கும் தீஞ்சுவைகளை எத்திக்கிற்கும் வாரிவழங்கும் தினமுரசு. என்றும் எம் குடும்ப முரசே.

எம்.சிவகுமாரன், எம்.சீலன்,
சதீஷ், ஜெயதீஷ்-காலி.

□□

நான் அறியாத எத்தனையோ விஷயங்களை அறிந்தேன். முரசே.. நீயொரு ஆசிரியன் என்று சொன்னால் மிகையாகாது. ஏனென்றால் நான் பாடசாலையில் கற்றறியாதவைகளை உன் மூலமாக கற்றேன். உலக அதிசயங்கள், அரசியல் செய்திகள், சினிமா துணுக்குகள் இன்னும் எத்தனையோ...'பாப்பா முரசு' பகுதியை பார்த்து அப்படியே ஒரு 15 வருடங்களுக்கு முன் சென்றதுபோல் ஓர் நினைப்பு.

எம்.என்.ரிஸ்வானுஸ்ஸமான்-தெமட்டகொடை.

□□

பிரியமிகு முரசே!

உன் அம்சங்களுள் என்னை மிகவும் கவர்ந்தவை மகாபாரதம், எக்ஸ்ரே ரிப்போட். தற்போது அற்புதன் எழுதும் அரசியல் தொடர் பேஷ் பேஷ். வடக்கே பிறந்த எமக்கே தெரியாத பல விடயங்களை படித்து பூரிப்படைகிறேன். நீ ஒரு நியாயத் தராசு.

சி.ஸ்ரீரவி-இரத்தினபுரி.

□□

### களஞ்சியம்

தாய் நாவல் மனிதர்களின் சிந்தனையை விரிவடையச் செய்யும் ஒரு களஞ்சியம்.

அ.குமணன்-பாண்டியூர்-01.

□□

வாரமொருமுறை மலர்ந்தாலும் எம் மனதில் தினமும் நிலைத்து நிற்கும் முரசே. நீ எங்கிருந்தாலும் உன் கண் கவர் வண்ணமும் முத்தான எழுத்துகளும் உன் முரசென பறைசாற்றிவிடும். அற்புதனின் அரசியல் தொடர் அற்புதமாகவே உள்ளது.

ஸ்ரீஹரி, சுதாகர்-இரத்தினபுரி.

எனது அன்பிற்கினிய தின முரசே.. உனது நீண்டநாள் அபிமானியாகிய நான் நீ சுமந்து வரும் அம்சங்களை கண்டு அளவில்லா ஆனந்தம் அடைகின்றேன். உன் தொடரில் அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை தொடர் அருமையாக வளர்ந்து வருகின்றது. உன் சேவை ஓங்கி வளர எனது நல்வாழ்த்துக்கள்.

ரெங்கசாமி ஜீவா-வெல்லம்பிடிய.

□□

**'மகா சூலம்' தொடர் உச்சக் கட்டத்தை எட்டிவிட்டது. இனியாவது மர்மத்தை உடைக்கலாமே?** மா.ஷோபனா-மாத்தளை.




நீ சுமந்து வரும் தாய், அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை, தேன் கிண்ணம், சினிமாப்பாகம், பாப்பா முரசு தூள்.அதிலும் அரசியல் அலசலில் உனக்கு நிகர் நீயே!

ஏ.எல்.நஜாத்-கிண்ணியா-03.

# பூநகரி கோரிக்கை-புலிகள் கைவிடுவார்களா?

## ஊகங்களை மறுக்கும் புலிகளது பிரசாரங்கள்!

## பாரிஸ் கூட்டத்தின் முன் உடன்பாடுகள் சாத்தியமில்லை

பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை புலிகள் கைவிடக்கூடும் என்று கொழும்பில் சில ஊகங்கள் வெளியாகியிருந்தன. யாழ்-குடாநாட்டில் புலிகளது பிரசார சாதனங்கள் வெளியிட்டு வரும் செய்திகள் அந்த ஊகங்களை மறுக்கும் வகையில் அமைந்துள்ளன.

"பொருளாதார தடையையும் கடல் வலய தடையையும் அரசு நீக்க வேண்டும். அவ்வாறு அரசு நீக்கினால் பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை புலிகள் கைவிடுவார்கள்" என்று 'ராவய' ஆசிரியர் கூறியிருந்தார்.

'ராவய' ஆசிரியர் திரு.விக்டர் ஐவன் சமீபத்தில் யாழ் சென்று திரும்பியவராவார். புலிகளது முக்கிய பிரமுகர்களையும் அவர் சந்தித்துப் பேசியிருந்தார்.

'ராவய' ஆசிரியர் அவ்வாறு தெரிவித்த கருத்தை புலிகள் உர்ஜிதம் செய்யவில்லை.

### பூநகரித்தளம்

பூநகரி இராணுவ முகாம் தற்போது பலப்படுத்தப்பட்டு வருவதாக கடந்த திங்கட்கிழமை-24.03.95 காலை 'புலிகளின் குரல்' வானொலி குற்றம் சாட்டியுள்ளது.

"பூநகரி-வெட்டுக்காடு கடற்பரப்பில் கடற்படையின் பாரிய விநியோக கப்பல் ஒன்று நான்கு நாட்களாக தரித்து நின்றது. படகுகள் மூலம் பெருமளவு இராணுவ தளபாடங்கள் இறக்கப்பட்டு வருகின்றன. இதற்காக இறங்குதுறையொன்றும் பூநகரி-வெட்டுக்காடு கடற்பரப்பில் அமைக்கப் பட்டுள்ளது.

"புலிகளின் கோரிக்கைக்கு எதிர்மாறாக பூநகரி தளம் பலப்படுத்தப்படுகின்றது." இவ்வாறு புலிகளின் குரல் குற்றம்சாட்டி யிருக்கிறது.

இச் செய்திக் குறிப்பை நோக்கும்போது பூநகரி இராணுவ முகாம் அகற்றுவது தொடர்பான தமது கோரிக்கையில் உள்ள நியாயத்தை புலிகள் மீண்டும் வலியுத்தி யுள்ளனர் என்று தெரிகிறது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து புலிகள் தொடர்ந்து சந்தேகம் தெரிவித்து வருகின்றனர்.

### சந்தேகக் கண்

ஜனாதிபதியின் இந்திய விஜயம் குறித்தும் புலிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். இந்தியா செல்லும் முடிவை ஜனாதிபதி மேற்கொண்ட பின்னரே அவருக்கு எதிரான கடுமையான பிரசாரங்களை புலிகளது பிரசார சாதனங்கள் மேற்கொள்ள ஆரம்பித்தன.

பதில் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த சமீபத்தில் ஜெர்மன் சென்று திரும்பியிருந்தார்.

வைத்திய சிகிச்சைக்காகவே அவர் ஜெர்மன் சென்றதாக தெரிவிக்கப்பட்டது. ஆயினும் 'புலிகளின் குரல்' 23.03.95 அன்று செய்திக் குறிப்பில் அவரது ஜெர்மன் விஜயம் குறித்து சந்தேகம் வெளியிட்டிருந்தது.

பதில் பாதுகாப்பு அமைச்சரின் படை முகாம் விஜயங்கள், படை அதிகாரிகளுடனான சந்திப்புக்கள், உரைகள் போன்ற சகல நடவடிக்கைகளும் புலிகளால் சந்தேகக் கண்ணோடு நோக்கப்பட்டு வருகின்றன.

அரசு யுத்த முஸ்தீபுகளில் ஈடுபடுகிறது என்ற தமது கருத்தை உறுதி செய்யும் விதத்தில் புலிகளது செய்திகள் அமைந்து வருகின்றன.

இவ்வாறான நிலையில் இராணுவ விவகாரத்தோடு கலந்த பூநகரி இராணுவ முகாம் கோரிக்கையை புலிகள் கைவிடுவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை.

### பாரிஸ் கூட்டம்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது கூட்டம் பிரான்சில் நடைபெறவுள்ளது. அக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு சாதகமான நிலை ஏற்படும் விதமாக புலிகள் நடக்கப் போவதில்லை என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

உதவி வழங்கும் நாடுகளது கூட்டம் ஏப்ரல் மாதம் 27,28ம் திகதிகளில் பாரிசில் நடைபெறவுள்ளது.

இந் நிலையில் தமது கோரிக்கை எதனையும் புலிகள் கைவிடப்போவதில்லை. அவ்வாறு கைவிட்டால் அரசுக்கும்- புலிகளுக்கும் இடையில் சுமுகமான நிலை ஏற்பட்டுவிட்டதாக கருதப்படும். அரசு அதிக உதவிகளைப் பெறுவதற்கு வாய்பாகிவிடும் என்று புலிகள் நினைப்பர்.

எனவே-பாரிசில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது கூட்டத்தின் முன்பாக அரசுக்கும்- புலிகளுக்கும் இடையே உடன்பாடுகள் எதுவும் சாத்தியம் இல்லை என்றே தெரிகிறது.

சமீபத்தில் யாழ் சென்ற உதவி வழங்கும் நாடுகளது பிரதிநிதிகளிடமும் அரசுமீது புலிகளது அதிருப்தி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### ஜனாதிபதி பதில்

மார்ச் 28ம் திகதி 'காலக் கெடு' விதித்து புலிகளின் தலைவர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திற்கு ஜனாதிபதி பதில் கடிதம் அனுப்பியுள்ளார்

மார்ச் 24ம் திகதி ஜனாதிபதியின் கடிதம் புலிகளுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதற்கான பதில் கடிதம் புலிகளால் தயாரிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 28ற்கு முன் தனது கடிதத்திற்கு பதில் எழுதவேண்டும் என்ற பிரபாகரனின் 'காலக்கெடுவை' கருத்தில் கொண்டே மார்ச் 24ல் ஜனாதிபதி-பதில் அனுப்பியிருந்தார்.

# ஜனாதிபதிமீது புலிகள் கடும் குற்றச்சாட்டு!

## நியாயப்படுத்துவோர் மீதும் பாய்ச்சல்!

புலிகள் அமைப்பினர் உத்தியோக பூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்', ஜனாதிபதி சந்திரிக்கா இராணுவ அழுத்தத்திற்கு பணிந்து விட்டதாக குறிப்பிட்டுள்ளது.

மார்ச் மாதத்திற்கான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அப் பத்திரிகையில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது:

"தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை தீர்ப்பதானது தமது தேசிய பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கும்" என்று சிறீலங்கா ஜனாதிபதி கூறியுள்ளார்.

"இக் கூற்றானது தமிழர்கள், சிங்கள இனத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளனர் என்னும் பேரினவாத சித்தாந்தத்தை நியாயப்படுத்துவது போல அமைந்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்கா இதுவரை அணிந்திருந்த முற்போக்கு முலாம் பூசப்பட்ட சமாதான முகமூடி கழன்று விழுந்துவிட்டது.

"இராணுவ அணுகுமுறைதான் தமிழர் இனப்பிரச்சனைக்குரிய மாற்று என்பதை சந்திக்கா சொல்லாமல் சொல்லியுள்ளார்.

"இராணுவ தலைமையின் அழுத்தத்தில் இருந்து தப்புவதற்காக கடுமையான நிலைப்பாட்டை சந்திரிக்கா எடுத்துள்ளார் என்று தென்னிலங்கை பிரமுகர்கள் நியாயம் கூற முற்படுகின்றனர். இது சிறுபிள்ளைத் தனமான ஒரு நியாயம் என்பதுடன், இந்த நியாயப்படுத்தல்களின் பின்னால் பேரினவாத சித்தாந்தத்தின் செல்வாக்கு நிலவுகிறது.

"இராணுவத் தளபதிகளை கடுமையாக விமர்சித்து, முப்படை தளபதிகளை பதவியில் இருந்து விரட்டி, முன்னாள் தளபதிகள் மீது விசாரணை நடத்துகிறார் சந்திரிக்கா. அவர் தமிழர்களது அன்றாடப் பிரச்சனைகளை தீர்க்க முயலும் போது மட்டும் இராணுவத்தைக் கண்டு அஞ்சுகிறார் என்று சொல்வதை எவரும் நம்பமாட்டார்கள்.

தமிழரது மொழியுரிமை மீது அவரது தந்தையார் கைவைத்தது போல-தமிழரின் கல்வி-வேலை வாய்ப்பு உரிமை மீது அவரது தாயார் கைவைத்தது போல-தமிழரின் வாழ்வுரிமை மீது கைவைக்க சந்திரிக்கா குமாரதுங்கா முடிவு செய்துள்ளார்."

இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

# பாவாடை மலிந்தால் சுதந்திரம் வருமோ?

## புலிகளது ஆஸ்தான கவிஞர் கேட்கிறார்

பொருளாதாரத் தடை விலகி பொருட்களின் விலை குறைந்து போனால் போதும் என்று நினைப்பவர்களை புலிகளது கவிஞர் சாடியுள்ளார். புலிகள் அமைப்பின் ஆஸ்தான கவிஞர் என்று அழைக்கப்படும் புதுவை இரத்தினதுரை சமீபத்தில் எழுதியுள்ள கவிதை ஒன்றில் சாட்டை வீசப்பட்டிருக்கிறது.

அக் கவிதையில் இருந்து சில பகுதிகள்:

மின்சாரம்-நெடுஞ்சாலை
'சம்சாரம்' விரும்பும் சில சாமான்கள்
இந்தளவுமே போதும் சுதந்திரம் எதற்கு?
சுட்டுக் கடிக்கவா?
பாவாடை மலியும்
பாத்திரங்கள் விலை குறையும்
பெற்றோல் வந்தால் புதுக்கார் வாங்கலாம்
தண்டவாளங்கள் இணைந்தால்
றெயிலேறிச் சாமான்கள் வரும்
அடிக்கடி கொழும்பில் அலுவல்கள் பார்க்கலாம்.
யாழ்தேவி தமிழரைச் சுமந்து செல்லும்
திரும்பி வரும்போது 'சகோதரங்களை' அழைத்து வரும்.
நாகவிஹாரை வளவுக்குள்
தூபியுடன் கூடிய புத்த கோவிலில்
தாமரைத் தட்டேந்திச் சிங்களப் பெண்கள் சிரிப்பர்.

'காமினிரீறும்' கதவுகள் திறக்கும்.
கற்பனையே எத்தனை அற்புதம்!

"சும்மா வராது சுதந்திரம்" என்று
'சூரியத் தலைவர்' சொன்னதை மறந்தார்.
இன்னுயிர் இழந்து மண்ணுள்ளே புதைந்த
கண்ணின் மணிகளின் கல்லறை மறந்தார்.
மறப்பது எங்கள் மரபென ஆனதால்
கிடைப்பதில் மகிழ்வதே விடுதலை என்றார்.

அஞ்சற்க வேங்கை அசையாது.
அனல் மூண்டு
பிஞ்செல்லாம் அதில் வீழ்ந்து பொசுங்கிடினும்
கல்லறையில்
கண் துஞ்சும் வீரர் கனவு நனவாகும்.
அஞ்சற்க வேங்கை அசையாது."

இவ்வாறு புலிகளது கவிஞர் கூறியுள்ளார். புதுவை இரத்தினதுரை புலிகளது கலை, பண்பாட்டுக் கழக தலைவருமாவார்.

# யாழில் அகதிகள் பரிதவிப்பு!

## யூ.என்.எச்.சி.ஆரும் கை விரிப்பு!

(வர்மா)

இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகள் வவுனியாவில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். 62 குடும்பங்களைச் சேர்ந்த 185பேர் அவ்வாறு தங்கியிருந்தனர்.

கடந்த 24.03.95 அன்று 185 பேரும் 12 படகுகள் மூலம் கிளாலி பாதையூடாக யாழ் சென்றனர்.

யூ.என்.எச்.சி.ஆர்.அதிகாரிகள் இருவர் அவர்களை அழைத்துச் சென்றனர்.

காலை உணவை வழங்கிய யாழ் செயலக திட்டப் பணிப்பாளர், அகதிகள் சொந்த இடம் செல்ல போக்குவரத்து வசதி செய்ய மறுத்துவிட்டார்.

இதனால் தெருவில் நின்று மக்கள் அங்கலாய்த்துக்கொண்டிருந்தனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய (யூ.என்.எச்.சி.ஆர்) அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், அகதிகளை வீடுகளுக்கு அழைத்துச் செல்வதோ, உணவு வழங்குவதோ தமது பொறுப்பல்ல என்று கூறிவிட்டனர்.

குடும்பம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் மட்டுமே யூ.என்.எச்.சி.ஆர்.வழங்கியது.

தமக்கு தகுந்த ஒழுங்குகள் செய்யப்படாதது குறித்து அகதிகள் கவலை தெரிவித்தனர்.

# 'தமிழீழ மருத்துவக் கல்லூரி'

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினரால் 'தமிழீழ மருத்துவக் கல்லூரி' நடாத்தப்பட்டு வருகின்றது.

இக் கல்லூரியின் உதவி மருத்துவ சேவையாளர் பயிற்சிநெறி அனுமதிக்கான பரீட்சை கடந்த 25.03.95 அன்று நடைபெற்றது.

யாழ் குடாநாட்டை சேர்ந்தவர்களுக்கு யாழ்-இந்துக் கல்லூரியிலும், வன்னி மாணவர்களுக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

# "கச்சதீவை மெத்தனமாய் இழந்தோம்"

## தமிழக மீன்வள அமைச்சர் கவலை

"கச்சதீவை இலங்கையிடம் மெத்தனப் போக்கால் இழந்துவிட்டோம்" என்று தமிழக மீன்வள அமைச்சர் ஜெயக்குமார் கவலை தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் உரையாற்றிய அமைச்சர் ஜெயக்குமார் கூறியதாவது; "1974ம் ஆண்டு பதவியில் இருந்த தி.மு.க அரசின் மெத்தனப் போக்கால் கச்சதீவை பறிகொடுத்தோம். இப்போது நமது மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினரின் தாக்குதல் ஒரு புறமும், பாதுகாப்பு என்ற பெயரில் இந்திய கடற்படையினரின் தொந்தரவும் இருக்கிறது." என்று தெரிவித்தார்.

மீனவர்களது சிரமங்களை குறைக்க 1½ இலட்சம் தமிழக மீனவர்களுக்கு தமிழக அரசின் செலவில் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

# அதிரடிப்படை முகாம் விஸ்தரிப்பு

அம்பாறை-திருக்கோயில் மருத்துவமனையில் விசேஷ அதிரடிப்படையினர் முகாமிட்டுள்ளனர். இந்த முகாமை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. எனினும், முகாம் தொடர்ந்தும் மருத்துவமனையில் இயங்கிவருகிறது. தற்போது குறிப்பிட்ட முகாம் பாதுகாப்பு நடவடிக்கைகள் கருதி மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

# கிளிநொச்சியில் புலிகளின் பங்கர்கள்!

கிளிநொச்சிப் பகுதியில் புலிகள் அமைப்பினர் பங்கர்கள் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த இரு வாரங்களாக பொதுமக்கள் மூலமாக பங்கர் வெட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பரந்தன் சந்தியிலிருந்து பூநகரிக்கு செல்லும் பாதையெங்கும் புதிய பங்கர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பூநகரி இராணுவத்தளம் பலப்படுத்தப் படுவதாக கூறிவரும் புலிகள் அமைப்பினர் பங்கர் அமைக்கும் வேலைகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர்.

ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களும் பங்கர் வெட்டும் வேலைகளுக்கு அழைக்கப் பட்டனர்.

# புலிகளுக்கு புகழாரம்

இலண்டனில் இருந்து வெளிவரும் 'இண்டிபெண்டன்ற்' என்னும் பத்திரிகை புலிகளையும், அதன் தலைவர் பிரபாகரனையும் புகழ்ந்துள்ளது.

சிறீலங்காவின் முப்படைகளையும் 12 வருடங்களாக எதிர்த்து போராடுகிறார்கள் புலிகள். புலிகளும், தமிழர்களும் தங்களுக்கென தமிழீழம் என்னும் தாயகத்தை அமைத்துக்கொண்டு விட்டனர். பல வருட கால போராட்ட அனுபவம் காரணமாக பிரபாகரன்-மாசேதுங், சேகுவேரா போன்றவர்களுக்கு இணையாக இருக்கின்றார், என்று அப்பத்திரிகை வெளியிட்டுள்ள கட்டுரை தெரிவிக்கிறது.

யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் வண பிதா இமானுவேல் அப்பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளார்.

"இயேசு கிறிஸ்துவைப் போல விடுதலைப் புலிகளும் ஒரு மாபெரும் இலட்சியத்துக்காக தம்மை அர்ப்பணித்துள்ளனர்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# திருமலை நகரில் போதைப் பொருள் பரவல்!

## தகுந்த நடவடிக்கை உடனே தேவை!

திரு மலை நிருபர்

திருக்கோணமலை நகரையும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் கசிப்பு, கஞ்சா போதைப் பொருள் வியாபாரிகள் தொல்லை பெருகிவிட்டது.

இவ் வியாபாரிகளின் பெருக்கத்தால் சண்டை சச்சரவு, சிறு திருட்டுக்கள் போன்ற சமூகக் கேடுகளும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. மக்கள் நடமாட்டம் குறைவான பகுதிகளில் தனித்துப் பெண்கள் செல்ல அஞ்சுமளவுக்கு போதைப் பொருள் பாவனையாளர்கள் குறிப்பாக 'குடு' உபயோகிக்கும் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இத்தகைய சமூக விரோதப் பொருட்களை விற்பனை செய்பவர்கள் விவகாரத்தில் பொலிசார் எவ்வளவுதான் விழிப்பாக நடந்து கொள்கின்ற போதிலும் இவ் வியாபாரிகள் பொலிசாரையும் நீதிமன்றத்தையும் ஒரே வேளையில் ஏமாற்றி விடுகிறார்களாம்.

குறிப்பாக பாலையூற்றுப் பகுதியில் பொலிசார் பலதடவைகள் வேட்டை நடத்திய போதிலும் உண்மையான வியாபாரிகள் எவருமே பிடிபடுவதில்லை என மக்கள் வருந்துகிறார்கள். மேற்படி வியாபாரிகளால் கூலிக்கு அமர்த்தப் படுபவர்களே பொலிசார் கையில் சிக்கி நீதிமன்றம் வருகிறார்களாம்.

உண்மையான வியாபாரிகளைத் தேடிப் பிடித்து நடவடிக்கை எடுத்தால்தான் இவர்களை ஒழிக்க முடியும் என்கிறார்கள் இப் பகுதி மக்கள்.

# காதோடு காது



## எதைத்தேடுகிறார்கள் கண்டுபிடியுங்கள்.

'பொடியனுகள்' வீதியில் சாதாரணமாக நடமாடும் போது வீடுகளில் சோதனை நடைபெறுகிறது. பகுதி பகுதியாக 'றவுண்டப்' தேடுதல். பாதுகாப்புப் படையினர் எதைத் தேடுகிறார்கள் என்றால் அதுதான் அவர்களுக்கே தெரியவில்லை?

*உதாரா* ——————————

### சொத்து சேர்க்கிறார்

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாவட்டமொன்றின் முன்னாள் அரச அதிபர் சொத்துச் சேர்ப்பதில் சமர்த்தராம். மட்டக்களப்பின் மையப் பகுதியொன்றில்-பேர்ச் நாற்பத்தையாயிரம் கொடுத்து காணி வாங்கி மகளின் பேரில் எழுதியுள்ளாராம். இவருக்கு இவ்வளவு பணம் ஏது என்று ஸ்ரீமான் பொதுஜனம் தலையில் கையை வைக்கிறாராம். ஏன் தலையில் சும்மா கையை வைக்க வேண்டும். சாமி வரம் கிடைத்தால் காணி என்ன வீடே வாங்கி விடலாம் கொழும்பில் என்கிறார். உள் விடயம் அறிந்த பேர்வழி.

### சமூக மேம்பாடு

பகைமைத் தவிர்ப்பு வந்ததும், வந்தது. பலருக்கு நரிப்பயம் ஏற்பட்டுள்ளது. எல்.ரி.ரி.பொடியனுகள் சும்மாயிருக்க மாட்டார்கள்தானே -வாவிக்கு மேற்குப்புறக் கிராமமொன்றில் 'வடி' வியாபாரம் செய்த ஒருவரைப் பிடித்து-வடிப்பானை கழுத்தில் கட்டித் தொங்கவிட்டு ஊர்வலம் நடாத்தியிருக்கிறார்கள். 'சமூகத்தைக் கெடுக்கும் கேவலமான இந்தப் புழைப்பை இனி நான் செய்யமாட்டேன்' என்று வடிப்பானைப் பேர்வழி ஓலம் விட்டு நடந்ததை ஊர்மக்கள் பார்த்து-'நல்ல தண்டனை' என சொல்லித் திரிந்தார்களாம்.

### பொலிசில் பசுந்தளிர்

மட்டக்களப்பு-பிரதான பொலிஸ் நிலைய நுழைவாயிலில் ஒரு பெரிய சென்றி. மண் மூடை இப்படி. ஒரு விசேடம் என்னவென்றால்- நகரின் மையப்பகுதியிலான இந்த சென்றி ஏற்பாடு பச்சைப் பசேலென்று காட்சிதருகிறது. நிதமும் தண்ணீர் ஊற்றி வளர்ப்பதால் பார்க்க கண்ணைப் பறிக்கும் பசுந்தளிராகவிருக்கிறது.

### எழும்புங்கள் மேயர்

மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற பிஐஆர்ஆர்பி கூட்டமொன்றில் மேயர் தன் பரிவாரங்களோடு மண்முனை வடக்கு பிரதேச கட்டிடத்திலிருந்து இடம்மாறித்தான் ஆக வேண்டும். முடிவை மாற்ற முடியாது என்று சொன்னதாம். புடரியில் கண் இருப்பவர்கள்தான் இப்படி முடிவு எடுப்பார்கள் என்று மேயர் சொல்லுகிறாராம்.

### கொந்துறாத்துக் காரர் தலையில் கை

போயும் போயும் கொந்துறாத்து வேலைகளை நாம் எடுத்தால்தானே இந்தச் சீரழிவு என்று காதோடு காதாகப் பேசிக்கொள்கிறார்களாம். மட்டக்களப்புப் பகுதியில் கொந்தறாத்து வேலை செய்வோர் கணக்கைச் சரியாகப் பார்த்து- 'பேர்சன்ரேஜ்' கேட்டுள்ளனராம் பொடியனுகள்.

### சந்திரோதயம் மீதிலே 'செக்:'

மட்டுநகர் பஸ் டிப்போவுக்குள் சேவையிலீடுபடும் பஸ் வண்டிகள் திடுதிப்பென்று உட்புக முடியாதாம். பஸ்வண்டிகளெல்லாம் உடையல், கீறல் ஏதும் இருக்கிறதா? என 'செக்' பண்ணித்தானாம் உள்எடுப்பர். சந்திரோதயம் மீதிலே காணுவதும் சந்திரோதய முகம்தானே?

### இலவச வகுப்பு தொடரும்

கல்லடி-விவேகானந்தா மகளிர் பாடசாலையில் நடைபெறும் 'இலவச' உயர் வகுப்புப் படிப்பினைத் தொடரும்படி 'பொடியனுகள்' உத்தரவாதம். பெற்றோர் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

### பாதுகாப்புப் படை உஷார்

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள பாதுகாப்புப் படையினர் உற்சாகமாகப் பயிற்சி பெறுகிறார்கள். குழப்பினால் கூத்தாடுவதற்கு பயிற்சி வேண்டுந்தானே என்று பொதுமக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

# வன்செயலால் தரைமட்டமான தொழில் நிறுவனங்கள்! புனரமைத்தால் கிழக்கில் பலருக்கு வேலைவாய்ப்பு!

(ஏறாவூர் நிருபர்)

தென் ஆசியாவின் பெரிய அரிசி ஆலை எனக் கருதப்பட்ட முறக்கொட்டாஞ்சேனை அரிசிஆலை, கும்புறுமூலை அரச அச்சகக் கூட்டுத்தாபனம், இலுப்படிச்சேனை ஓட்டுத்தொழிற்சாலை கரடியனாறு விவசாயப் பண்ணை இது போன்ற பல நூறு கோடி ரூபாய் பெறுமதியான பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய பல தொழில் நிறுவனங்கள் வன்முறைச் சம்பவங்களின் போது தகர்க்கப்பட்டு தரைமட்டமான நிலையில் இன்று காடுமண்டிக் கிடக்கின்றன.

இந்த அரிசிஆலை, அச்சகம், விவசாயப் பண்ணை, ஓட்டுத் தொழிற்சாலை என்பன செயற்பட்டிருந் தால் பல்லாயிரக் கணக்கான எமது பகுதி மக்கள் இன்று வேலை வாய்ப்புப் பெற்று நல்ல நிலையிலிருப்பார்கள்.

எனினும் கிழக்கில் சுமுகநிலை திரும்பியுள்ள இப்பகுதிகளில் மேற்படி அழிக்கப்பட்டுள்ள அரிசிஆலை உட்பட அரச கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள், தொழிற்சாலைகள் என்பனவற்றைப் புனரமைக்க கிழக்கிலிருந்து அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பா.உ.களோ மற்றும் கிழக்கைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஏனைய கட்சிப் பிரதிநிதிகளோ ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை.

வடக்கிற்கான அபிவிருத்திப் பணிகள், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் அதே வேளை சுமுக நிலைக்குத் திரும்பியுள்ள கிழக்கிலும் அழிக்கப்பட்டுள்ள கட்டிடங்களைப் புனரமைத்தால் வேலைவாய்ப்பற்றிருக்கும் பல்லாயிரக்கணக்கானோர் தொழில் வாய்ப்புப் பெறவும் அதன்மூலம் நலி வடைந்துள்ள எமது பகுதிப் பொருளாதாரம் வளர்ச்சி காணவும் வழியேற்படும். புனரமைப்புக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரும் கிழக்கைச் சேர்ந்தவராக இருப்பதால் இத்தகைய நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது அவசியமாகும் எனப் பாதிக்கப்பட்டுள்ள எமது தமிழ்- முஸ்லிம் மக்கள் வலியுறுத்துகிறார்கள்.

# தமிழ்ச்சங்க கலை விழா

நீண்ட காலத்திற்குப் பின் கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் கலை விழா ஒன்றை மிகச் சிறப்பாக நடத்தியது.

இவ் வைபவத்திற்கு பிரதம அதிதியாக, துறைமுகங்கள் கப்பல்துறை புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. அன்டன் அல்பிரட் கலந்துகொண்டார்.

தமிழ்ச் சங்க பெரும்பொருளாளர் திரு.கே.கஜேந்திரா (விரிவுரையாளர்) உரையாற்றும் போது தமிழ்ச்சங்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு விரிவுரையாளர்கள் சார்பாக எல்லா உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் மாணவர்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கலை விழா நிகழ்ச்சியில் இடம்பெற்ற 'ஓ.....ஓ....' என்ற நாடகம் (இதில் நடித்த அனைவரும் தமது பங்களிப்பைத் திறம்படச் செய்திருந்தனர்), இசை விருந்து உட்பட அனைத்து நிகழ்ச்சிகளும் சிறப்பாக அமைந்திருந்தன.

எஸ்.ஏ.சீ.எம்.பரீனின் தலைமையிலான கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இத்தகைய ஒரு கலை விழாவை ஒழுங்கு செய்து நடத்தியது பாராட்டுக்குரியதாகும்.

# போக்குவரத்தில் பலவித சிரமங்கள்!

(ஏறாவூர் நிருபர்)

வாழைச்சேனை பெற்றோல் நிலையச் சந்தியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் வாழைச்சேனை-மட்டக்களப்பு பிரதான வீதியால் செல்ல முன்னர் அனுமதித்திருந்தனர். ஆனால் கடந்த சில நாட்களாக இப்பிரதான வீதிபோக்குவரத்திற்கு மூடப்பட்டு புழுதி படிந்த தூசு நிறைந்த உப பாதையால் செல்லவே அனுமதிக்கப்படுகிறது. மழை பெய்தாலும் இவ்வீதி சேறு நிறைந்து பயணம் செய்ய முடியாதிருக்கும். இதனால் பயணிகள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக வெள்ளைச் சீருடையணிந்த மாணவர்கள் இவ்வீதியைக் கடந்து செல்லும்போது புழுதி படிந்த காவி உடையுடன் செல்கின்றனர்.

இதேவேளை 'சின்னக் கிளாலி' என அழைக்கப்படும் கொம்மாதுறை முகாமைச் சுற்றிச் செல்ல அமைக்கப்பட்ட உபபாதை தற்சமயம் நீக்கப்பட்டு பிரதான வீதியால் முகாமுக்கூடாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. பிரதான வீதியால் செல்ல அனுமதி வழங்கப்படுவதும், அனுமதி மறுக்கப்படுவதும் வானிலை மாற்றம்போல் இங்கு அடிக்கடி நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

இனிமேல் மக்கள்; மனிதன் உண்டாக்கும் தொல்லைகளிலிருந்து கஷ்டமில்லாமல் வாழலாமென்பது மலையேறிவிட்டது போல் தெரிகிறது என்கிறார்கள் சலித்துக்கொண்ட முதியோர்கள்.

# இங்குமா இப்படி

சிங்களத்துடன் தமிழும் அரசகரும மொழி. இப்படி எழுத்தளவில் இருந்தும் நடைமுறையில் இல்லாமை பற்றி பத்திரிகைகளில் சுட்டிக் காட்டப்பட்டும் அவை கவனத்தில் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

அண்மையில் அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பற்றிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 06/95ஐ நோக்கும்போது அது ஏனோ தானோ என்ற முறையில் வெளியிடப்பட்டுள்ளதாக நினைக்கத் தோன்றுகிறது.

ஒரு பக்கத்தைக் கொண்ட அச்சுற்றறிக்கையில் இருபதுக்கும் மேற்பட்ட சொற்பிழைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

இனிமேலாவது இவ்வாறு ஏற்படாதிருக்க வழிவகை செய்யப்படுமா?


## அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28



## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 505/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 258/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 132/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

| | |
|---|---|
| தினமுரசு வாரமலர் | THINAMURASU VAARAMALAR |
| த.பெ.இல:1772 | P.O.BOX: 1772 |
| கொழும்பு | COLOMBO |

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


# கொள்வனவில் சுருட்டும் அதிகாரிகள்!

வட கிழக்கு மாகாண சபையின் தேவைகளுக்கு பொருட்கள் கொள்வனவு (பேர்ச்சஸிங்) செய்வது என்றால் அதிகாரமுள்ள சில அதிகாரிகளுக்கு மகா சந்தோசம். நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு "பிக் அப்" பையும் எடுத்துக் கொண்டு கொழும்புக்குப் புறப்படுவார்கள். ஒரு முறை பேர்ச்சஸிங் செய்தால் ஒரு தொகை கமிசனாகக் கிடைக்கும். அதைச் சம்பந்தப் பட்டவர்கள் தங்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டாலும் கையில் சுழையாக ஒரு தொகை மிஞ்சும். இதை மற்ற அதிகாரிகள் செய்யும் போது மிக்க கவனமாக விடயம் "லீக்" ஆகாமல் செய்வர்கள். ஆனால் எமது டி.ஜி.எம் மட்டும் திறந்த மனதுடன் வெளிப்படையாகவே விடயத்தைச் சொல்லிடுவார்.

அடுத்ததாக வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் (சேவிஸ் கனெக்சன்) எடுப்பது என்றால் உறுதி இல்லாத காணிகளுக்கு வேலை மதிப்பீட்டைவிட (எஸ்ரிமேற்) ரூபா 2000/- மேலதிகமாகக் கட்ட வேண்டும் என்பது நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தீர்மானமாகும். ஆனால் மேலே உள்ளவருக்கு சந்தோசமாகவும் கொஞ்சம் மேலதிகம் கொடுத்தால் தான் வேலை நடக்கும். இல்லையேல் கிராமசேவகரின் கடிதம் கொண்டுவா. பிரதேச செயலாளரின் கடிதம் கொண்டுவா. இல்லையென்றால் வேறு ஏதாவது கொண்டுவா எனக் கேட்டு இழுத்தடிப்பார்கள்.விபரம் தெரிந்தவர்கள் வென்றுவிடுவார்கள். உறுதிக்காணி என்றால் அவ்வாறு இழுத்தடிக்க முடியாது. பணம் கறக்கவும் முடியாது. இருப்பினும் அவ்வாறான வேலைகளை இழுத்தடிப்பதற்கு கையில் வைத்திருக்கும் ஆயுதம், "எங்களுக்கு ஊழியர் பற்றாக்குறை வேலை கொஞ்சம் தாமதமாகும்" குறிப்பிட்ட அதிகாரியின் அகராதிப்படி தாமதம் என்பது கையில் சந்தோசம் கிடைக்கும் காலம் வரை என்பதாகும்.

பி.கு: குறிப்பிட்ட அதிகாரி இவ்வளவு வெளிப்படையாகச் சந்தோசம் பெறுகிறார் என வியந்து விசாரித்தோம். இவர் விரைவில் வெளிநாடு செல்லவுள்ளதாகவும், அதனால் இங்கு இருக்கும் வரை சேர்ப்பதைச் சேர்த்து விடுவோம் என்ற தோரணையில் அவ்வாறு நடக்கிறாராம்.

ஊழியர் பற்றாக்குறை பற்றி விசாரித்தோம். பொறுப்பு வாய்ந்த இரு பொறியியலாளர்களும் சம்பளம் வாங்க மட்டும் இங்கு வருகின்றார்களாம். மற்றைய நாட்களில் கொழும்பில் தங்கியிருந்து மேல் படிப்பு படிக்கிறார்களாம்.

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்வது" கெட்டிக்காரத் தனம்தான். இருந்தாலும் சனத்துக்கும் கொஞ்சம் சேவை செய்தால் நல்லதுதானே.


## டாக்டர் தேவை

R.M.P/ A.M.P/ D.A.M&S

நேரில் வரவும்.
35,டொக்யார்ட் வீதி
திருக்கோணமலை.
T.P.026—22736 ADVT



## வெளிவந்துவிட்டது..........................

*1995 ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்கட்கான..........*

☆ ஆரம்ப பொது விவேகம்
(செயல் முறை பயிற்சி) - ரூபா 60.00

☆ பொது விவேகம், பொது அறிவு
சுற்றாடல், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், கணிதம், கட்டுரை, மாதிரி வினா விடை தொகுப்பு - ரூபா 100.00

☆ ஆரம்ப பொது விவேகம்
ஆண்டு 4.5 ஆண்டுக்குரியது பூரண பொது விவேக பயிற்சியும் விளக்கமும் கொண்ட பாடநூல் - ரூபா 75.00

இவற்றோடு

**BRIGHT TRAINING CENTRE** ன் புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி பயிற்சி 100 வெகுமதி திட்டமும் தபால் முலம் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

**V.P.P.** உண்டு **V.P.P.** யில் பெற விரும்புவோர் 20/- முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

BRIGHT TRAINING CENTRE

**BRIGHT BOOK CENTRE**
S-27, FIRST FLOOR, P.O.BOX. 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLMBO -11. T.P. 434770

Mercantile Ads.


# சிங்கள நாடகங்கள் மொழி மாற்றப்படுமா?

## மறு ஒளிபரப்புக்கள் நிறுத்தப்படுமா?

இன்று நம் நாட்டில் பல தொலைக்காட்சி அலை வரிசைகள் இருந்தாலும் நம் நாட்டு மக்கள் விரும்பிப் பார்ப்பதும், தெளிவாகத் தெரிவதும் ரூபவாஹினி மட்டுமே. தமிழ் நிகழ்ச்சிகளின் பஞ்சம் இன்று நேற்றல்ல ஆரம்ப காலம் தொட்டே நிலவிவருகிறது. சிங்கள நிகழ்ச்சிகளுக்கும், நாடகங்களுக்கும் ஆதரவும் அனுசரனையும் அதிகம். இது உண்மை, நாடகங்களும் இசை நிகழ்ச்சிகளும் நிரம்பி வழியும் நிலையில் அண்டை நாட்டு ஆங்கில, இந்தி, சீன மொழி நிகழ்ச்சிகளையும் கூட விட்டு வைக்காமல். சிங்கள மொழி மாற்றம் செய்து ஒளி பரப்புகிறார்கள் அவற்றையாவது தமிழில் மொழிமாற்றம் செய்யக் கூடாதா? அதே போல் இரவு 8.30 நிகழ்ச்சி பெரும்பான்மை இனத்திற்கு மட்டுமே சொந்தம் போல் தெரிகின்றது. அதில் ஒரு நாளை மட்டுமாவது தமிழ் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கித் தரக் கூடாதா? பிற நாட்டு நிகழ்ச்சிகள் போகட்டும். ரூபவாஹினியில் ஒளி ஒலிபரப்பான ஒலிபரப்பாகும் சிங்கள நாடகங்கள் தமிழ் மக்களால் மிகவும் விரும்பிப் பார்க்கப்படுவது அனைவரும் அறிந்தது. ஆகவே முன்னர் ஒலிஒளிபரப்பான சிங்கள நாடகங்களையாவது தமிழ் மொழிமாற்றம் செய்து வெளியிட்டால் என்ன? தற்போது முன்னர் திரையிட்ட நாடகங்களையே மறு ஒளிபரப்பு செய்வதை விட இது சிறந்ததாக இருக்கும் தமிழ் மக்களும் விரும்பிப் பார்ப்பார்கள் நாட்டு நடப்பிற்கும் பல வழிகளில் உதவும்.

ரோஜா ஆனந்த ராஜா - பதுளை.

## ●●● எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பிரபா தெரிவித்த மறைமுக எதிர்ப்பு

**நாரதர்**

"புலிகள் காலக்கெடு எதுவும் விதிக்கவில்லை" என்று நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியதாக அரச பத்திரிகை ஒன்று தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது.

அப்படி அவர் கூறியிருந்தால் அதில் உள்ள அர்த்தம் இதுதான்; புலிகளோடு நடத்தும் பேச்சில் ஏற்படும் நெருக்கடிகளை தற்போதைக்கு வெளியுலகம் அறிந்துகொள்வதை அரசு விரும்பவில்லை.

இது தவிர வேறு காரணம் இருக்க முடியாதுதான்.

ஆனால், பிரபாவின் கடிதத்தில் காலக்கெடு குறிக்கப்பட்டிருந்தது மட்டும் உண்மை.

17.03.95 அன்று பிரபாவின் கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

பிரபாவின் கையொப்பத்தோடு ஆங்கில மொழியில் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

மார்ச் 28ம் திகதிக்கு முன்னர் தனது கடிதத்தில் உள்ள விடயங்கள் தொடர்பாக பதில் தரவேண்டும் என்றும், இல்லாது போனால் பேச்சுவார்த்தை தொடர்பாக வேதனையான முடிவுகளுக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்படுவோம் என்றும் பிரபா கடிதத்தின் இறுதிப் பகுதியில் குறிப்பிட்டிருந்தார்.

காலக்கெடு என்ற வார்த்தை இல்லையே தவிர, காலக்கெடு என்பதை தெளிவுபடுத்தும் விதமான வாக்கியங்கள் கடிதத்தில் இருந்தன.

பி.பி.சிக்கு தமிழ் செல்வன் அளித்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டார்;

**"மார்ச் 28ற்கு முன் அரசு சாதகமாக பதிலளிக்காவிட்டால் தமிழ் மக்கள் இந்த நாட்டு மக்களில்லை என்ற நிலைப் பாட்டுக்கு அரசாங்கம் தள்ளப்படுகின்றது என்ற கருத்தையே நாம் எடுப்போம்."**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவீரர் உருவப்பட திரைநீக்க நிகழ்வொன்றில் கடற்புலிகள் தளபதி சூசை உரையாற்றினார்.

**"மார்ச் 28 வரை எமது கோரிக்கைகளை நிறைவேற்ற அரசுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது."**

என்று சூசை மக்களிடம் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகளது பிரசார சாதனங்களும் அரசுக்கு 'தமிழீழ தேசியத் தலைவர் காலக்கெடு' என்றுதான் செய்தி வெளியிட்டிருந்தன.

'காலக்கெடு' விதிக்கவில்லை என்று அமைச்சர் சொன்னாலும் கூட, மார்ச் 28ஐ மறக்காமல் அரசு புலிகளுக்கு பதில் கடிதம் போட்டுவிட்டது.

ஆக, விதிக்கப்பட்ட காலக்கெடு உண்மை. காலக்கெடு விதிக்க மார்ச் 28ஐ பிரபா தேர்ந்தெடுத்தது ஏன்?

17.03.95 அன்றுதான் கடிதம் அனுப்பப்பட்டது. குறைந்தது ஒரு மாதகால அவகாசம் கூட அரசுக்கு வழங்கப்படவில்லை.

சரி போனால் போகட்டும் என்று மார்ச் மாதம் 31ம் திகதிவரை அவகாசம் கொடுக்கவும் புலிகள் நினைக்கவில்லை. இது ஏன்?

அது என்ன மார்ச் 28இல் உள்ள விசேஷம்?

காரணம் மிகத் தெளிவானது. ஜனாதிபதி சந்திரிக்காவின் இந்திய விஜய நிகழ்ச்சி நிரல்படி மார்ச் 28 வரை அவர் இந்தியாவில் தங்கி இருப்பார். இது முன்னரே தெரிவிக்கப் பட்ட நிகழ்ச்சி நிரல்.

சந்திரிக்காவின் இந்திய விஜயம் புலிகளுக்கு சற்றும் பிடித்தமில்லாத ஒன்று.

ஏற்கெனவே வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கு சென்ற போது புலிகள் கடும் சந்தேகங்களை கிளப்பியிருந்தனர்.

இப்போது ஜனாதிபதியே நேரடியாக இந்தியா செல்கிறார்.

இனப்பிரச்சனை விவகாரமும், புலிகளது விவகாரமும் அங்கு பேசப்படும். வெளியில் என்ன சொல்லப்பட்டாலும் இந்தியா புலிகள் குறித்து நல்ல அபிப் பிராயத்தை ஜனாதிபதியிடம் தெரிவிக்கப் போவதில்லை.

இலங்கையில் புலிகளது பலம் மேலோங்குவதை இந்தியா ரசித்து நோக்கும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

போர் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுவில் இந்தியாவை புலிகள் தூரவிலக்கியபோது இந்தியா பகிரங்கமாக கருத்துச் சொல்ல வில்லை. ஆனால், இந்தியாவுக்கு அது ஒரு காயம்தான். இன்னொரு விதத்தில் புலிகளின் சவாலும் கூட.

இந்தியாவின் தலையீடு எவ்விதத்திலும் தமக்கு சாதகமாக அமையாது என்பதில் புலிகள் திட்டவட்டமான முடிவில் உள்ளனர்.

இலங்கை அரசு இனப்பிரச்சனை விடயத்தில் இந்தியாவிடம் வாய் திறந்து பேசுவதையே புலிகள் விரும்பவில்லை.

இலங்கை அரசுக்கு ஒரு சங்கடத்தை ஏற்படுத்தும் விதத்திலேதான் போர் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுவில் இந்தியாவை தவிர்த்து வேறு நாடுகளை புலிகள் இடம்பெறச் செய்தனர்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிக்கா புத்தி சாலித்தனமாக கருத்து வெளியிட்டார்; "இந்தியாவை எமது நட்பு நாடாக நாம் கருதுகிறோம். ஆனால் மறு தரப்பு அப்படிக் கருதவில்லையே" என்றார்.

இதுவும் கூட புலிகளுக்கு கசப்பான ஒரு கருத்துத்தான்.

இந்திய அமைதிப்படையை பிரேமதாசாவையும் சேர்த்துக் கொண்டு புலிகள் வெளியேற்றினார்கள்.

'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற தந்திரம் அப்போது பலித்தது.

பிரேமாவையும் சேர்த்துக் கொண்டு இந்தியாவுக்கு எதிரான இராஜதந்திர நடவடிக்கைகளை தமது இயக்கம் வெற்றிகரமாக முன்னெடுத்தது என்று திரு. அன்ரன் பாலசிங்கமும் முன்பு கூறியிருந்தார்.

ஆனால், இப்போது சந்திரிக்கா அரசையும் சேர்த்துக் கொண்டு இந்தியாவை தூரவிலக்கும் உத்தியில் புலிகளால் வெற்றி பெற முடியவில்லை.

இந்தியாவோடு முன்பைவிட வலுவான உறவை ஏற்படுத்தும் விடயத்தில் சந்திரிக்கா அரசு உறுதியாகவே இருக்கிறது.

இந்த விடயத்தில் புலிகள் என்ன நினைப்பார்கள் என்பதையிட்டு தனக்கு கவலை இல்லை என்பதுபோலவே அரசு நடந்துகொள்கிறது.

அரசின் இந்த நடவடிக்கையை பகிரங்கமாகக் குற்றம்சாட்ட புலிகளால் முடியாது.

மறைமுகமான வழிகளில் தமது எதிர்ப்பைக் காட்டத்தான் முடியும்.

**அவ்வாறான எதிர்ப்பின் ஒரு வெளிப் பாடுதான் மார்ச் 28ம் திகதி என்று குறிக்கப்பட்ட காலக்கெடு.**

4ம் கட்டப் பேச்சுக்கு திகதி குறிக்கப் படவில்லை. புலிகளது உடனடிப் பிரச் சனை பற்றிய கோரிக்கைகள் சிலவற்றையும் ஜனாதிபதி நிராகரித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் அவர் இந்தியா செல்ல திட்டமிட்டு சுற்றுப்பயண திட்டமும் வெளியானவுடன் பிரபா பொறுமை இழந்து விட்டதையே அவரது கடிதம் பிரதிபலித்தது.

இந்தியா சென்று வந்து அதன் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று ஜனாதிபதி நினைக்கிறாரோ என்று பிரபாவுக்கு கோபம் வந்திருக்க வேண்டும்.

முதலில் எங்களுக்கு பதில் சொல்லி விட்டுச் செல்லுங்கள்.

இந்தியாவைவிட நாங்கள்தான் பிரதானம். என்பவற்றை உணர்த்தும் நோக்குடன் தான் பிரபா கடிதம் அனுப்பினார்.

தம்மை அலட்சியம் செய்துவிட்டு தமது எதிரியிடம் சென்று ஆலோசனை கேட்பதா என்றரீதியில்தான் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை புலிகள் நோக்கியிருக்கிறார்கள்.

ஆனால், அரசாங்கமும் நிதானத்தைக் கைவிடாமல் 'காலக்கெடு' விதிப்பை கையாண்டதால் நெருக்கடி நிலை தற்காலிகமாகத் தணிந்துள்ளது.

தற்காலிகம் என்று கூறுவதற்குக் காரணம், இரு தரப்பின் மத்தியிலும் நீறு பூத்த நெருப்பாக சந்தேகங்களும், அதிருப்திகளும் காணப்படுகின்றன.

மூடியிருக்கும் சாம்பலை ஊதிவிட்டு நெருப்பை வெளிப்படுத்தாமல் அரசு நடந்து கொள்கிறது.

ஆனால், புலிகள் மிக கடுமையாக அரசு மீது கண்டனச் சாட்டை வீசி வருகிறார்கள். மார்ச் மாதத்திற்குரிய புலிகளது உத்தியோக பூர்வ பத்திரிகையான 'விடுதலை புலிகள்' ஜனாதிபதி சந்திரிக்கா மீது மிகப் பலமான நம்பிக்கையீனத்தை மக்களிடம் எடுத்துச் சென்றுள்ளது.

பேச்சுவார்த்தையின் தற்போதைய கட்டம் காத்திரமான நகர்வுகளை தெரியப்படுத்த வில்லை. கண்ணாமூச்சி ஆட்டம் போலவே தெரிகிறது.

□□

தமிழ் கட்சிகள் சில புத்திசாலித்தனம் என்று நினைத்து புதுவிதமான அரசியலில் ஈடுபட்டுள்ளன.

பொருளாதாரத் தடை, கடல் வலயத் தடை என்பதெல்லாம் இன்று- நேற்று ஏற்பட்ட பிரச்சனைகள் அல்ல.

இவற்றை நீக்க வேண்டும் என்று புலிகள் கோரியதும் இன்று- நேற்று ஏற்பட்டதல்ல.

சமீபத்தில் சில தமிழ் கட்சிகள் புலிகள் கேட்பதில் நியாயம் உண்டு. பொருளாதாரத் தடை, கடல்வலயத் தடை என்பவற்றை நீக்கலாம்தானே என்று அறிக்கை விடுத்துள்ளன.

பொதுப் பிரச்சனையில் இவ்வாறு ஒன்றுபட்டுக் கருத்துத் தெரிவிப்பது நல்ல விசயம்தான். வரவேற்கலாம்.

ஆனால், பிரபாகரன் 'காலக்கெடு' விதிக்கும் கடிதம் அனுப்பிய பின்னர்தான் சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு பொருளாதார தடையும், கடல்வலயத் தடையும் நீக்கப் படுவது நியாயம் என்று தெரிய வந்ததோ?

அக் கட்சிகள் இதுவரை தாமாக முன்வந்து அக் கோரிக்கைகளுக்காக போராடியிருக்கலாம். அரசாங்கத்திடம் வாதாடியிருக்கலாம். செய்யவில்லை.

எமது கோரிக்கைகளும் அதுதான் என்று கூறுவது அரசியல் துணிச்சல்.


புலிகள் கேட்கிறார்கள். அதனைச் செய்யுங்கள் என்று கூறுவது புலிகளது பலத்தில் குளிர்காயும் போக்கு.

குழந்தைகளுக்கு பூச்சாண்டி காட்டி அம்மா சோறூட்டுவது, தான் சொன்னால் குழந்தை கேட்காது என்பதற்காகத்தான்.

தமிழ் கட்சிகள் சில அரசுக்கு புலிகளை காட்டித்தான் கோரிக்கைகளைப் பற்றிப் பேசுகின்றன. தாம் நேரடியாகச் சொன்னால் அரசு கேட்காது என்பது காரணமா? அல்லது நேரடியாகச் சொல்லி அரசிடம் அதிருப்தியைச் சம்பாதிப்பானேன் என்ற புத்திசாலித்தனமா?

ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பின் மட்டக் களப்பு அமைப்பாளர் ஒரு படி மேலே போய்விட்டார்.

"புலிகளின் கோரிக்கையின் அடிப் படையில் தமிழ் மக்களுக்கு நீதியான- நியாயமான தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்."



என்று அவர் திருமலையில் பத்திரிகை யாளர் மாநாட்டில் கூறியிருக்கிறார்.

அப்படியானால் தமது அமைப்பு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டமெல்லாம் ஒரு பொருட்டேயல்ல என்று அவர் நினைக்கிறார் என்று மட்டும் தெரிகிறது.

தமது கோரிக்கைகளுக்காக போராடும், வாதாடும் திறன் புலிகளுக்கு இருக்கிறது. புலிகள் விரும்பாமலேயே புலிகளது உத்தியோக பூர்வமற்ற பேச்சாளர்களாக சில தமிழ் கட்சிகள் நடந்து கொள்கின்றன.

இத்தனைக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தனது அமைப்புப் பத்திரிகையில் "புலிகளோடு மட்டுமே பேசவேண்டும்" என்று கூறும் திரு. ஜோசப் பரராஜசிங்கம் பா.உ. மீது பாய்ந்திருக்கிறது.

ரெலோ வன்னி அமைப்பாளர் புலிகள் கேட்பது நியாயம் என்று அறிக்கை விடுகிறார்.

அது அவரது சொந்தக்கருத்து என்று மறுநாள் ரெலோ பதில் அறிக்கை விடுகிறது, தாங்களும் குழம்பி மக்களையும் குழப்புகிறார்கள்.

தமது அமைப்புக்களுக்குள் ஒருமித்த கருத்தையே ஏற்படுத்த முடியாத அமைப் புக்கள் பொதுக் கருத்துக்காக எப்போது- எப்படிப் போராடப் போகின்றன.

ஏனைய தமிழ் அமைப்புக்கள் தமிழ் பேசும் மக்கள் சார்பாக பேச முடியாது என்று புலிகள் சொல்வதிலும் ஒருவகையில் நியாயம் உண்டுபோல் தோன்றுகிறது.

ஏனெனில், தமிழ் அமைப்புக்கள் சில புலிகளின் சார்பில்தானே பேசுகின்றன.

அப்படி வேண்டாம். நாங்களே எங்கள் சார்பில் பேசிக்கொள்கிறோம் என்று புலிகள் சொல்வது நியாயம்தான்.

புலிகளை நாம் ஒன்றும் எதிர்க்க வில்லை என்று தமிழ் மக்களுக்கு தெரிவிக்க விரும்பும் தமிழ் கட்சிகள் ஒரு விடயத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்.

தம்மைவிட தமிழ் மக்கள் மத்தியில் புலிகளுக்கு செல்வாக்கு உண்டு என்பது தான் அது.

இப்போது தமிழ் கட்சிகள் சில புலிகளது உறுப்பினர்கள் சிலர் தம்மை சந்தித்துப் பேசினால் அதனை ஊரறியச் சொல்லி பூரிக்கும் நிலையில்தான் உள்ளன.

புலிகளது சில உறுப்பினர்கள் மட்டக்களப்பில் சகல தமிழ் அமைப்பு உறுப்பினர்களோடும் நட்பு ரீதியாகப் பேசியுள்ளனர். தேநீர் அருந்தியுள்ளனர். பிரசுரங்களைப் பரிமாறியுள்ளனர்.

இது. ஏனைய தமிழ் கட்சிகளை புலிகள் அங்கீகரித்துள்ளனர் என்பதன் அடையாளமல்ல.

அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ் கட்சிகள் 'தேசவிரோதமானவை' என்ற கருத்தை புலிகள் மாற்றிக் கொள்ள வில்லை.

புலிகள் தம்மை சந்தித்தனர் என்று பூரிப்பாகச் சொல்லும் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்கள் கூட புலிகளது கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளுக்கு சென்று வர முடியாது. அப்படிச் சென்று வர முடிந்தால்தான் அது நட்பின் அடையாளம்.

இராணுவத்தினரைப் பார்த்தும் புலிகள் புன்னகைத்துக் கைகாட்டி விட்டுத்தான் செல்லுகிறார்கள். அதன் அர்த்தம் இராணுவத்தினரை புலிகள் நண்பர்களாக ஏற்றுக் கொண்டதாகாது.

புலிகள் தமது நிலைப்பாடுகளில் எப்போதும் உறுதியாகவே இருந்து வருகிறார்கள்.

ஏனைய தமிழ் கட்சிகள் புலிகள்ளப் பொறுத்தவரை தேவையற்ற அமைப் புக்கள்தான்.

ஆனால்-சில தமிழ் கட்சிகள் புலிகளது பலத்தில் குளிர்காய நினைப்பதும், அதனை புலிகள் அனுமதிக்காதபோது 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' கதையாக வசையாடுவதும் நடக்கத்தான் போகின்றன. ■

---

## அதிரடி அய்யாத்துரை



தாய் நாட்டைப் பார்த்த சந்தோசத்திலை திருவான மலையிலை வந்திறங்கின அகதிகள் சிலர் உற்சாகமான உஷாரிலை ஆடின வையாம். அதிலை ஒரு விசேஷம் என்னவென்றால், ஒரு இயக்கத்தின் உறுப்பினர்கள் எண்டு வந்தவைதான் துணி மறந்து ஆடினதிலை ஒரு கலக்குக் கலங்கினவையாம். விரைவில் தேனகம் சென்று மிகுதி ஆட்டத்தை தொடரப் போகினமாம். பாவம் மக்கள்.

கப்பலில் வந்த அகதிகளில் சிலரது புகைப்படங்களைக் காட்டி இவரைக் கண்டனீங்களோ, அவரைக் கண்டனீங்களோ எண்டு சிலர் வலை வீசித் தேடிக்கொண்டிருந்தவையாம். விசயம் என்னவென்று விசாரிச்சதில் கிடைத்த தகவல், பல ஆயிரம் ரூபாய்களுக்கு பொருட்கள் கொடுத்து விட்டவையாம். பொருட்களோடு சிலர் மாயமாம். நல்லா வேணும். உப்பிடித்தான் செய்யவேணும். அகதிகளைக் குதிரையள் ஆக்குறது பிழைதானே?

கனடாவிலை ஒரு இயக்கக்காரர் பிரசுரம் அடிச்சு விட்டிருக்கினம். ரெண்டு எழுத்தாரை நேரடியாக கண்டிக்கப் பயந்து தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டிருக்கினமாம். கால் இழந்த உறுப்பினருக்கு பதிலாக எங்கடை உறுப்பினர்களை அந்த இயக்கம் கொலை செய்தது எண்ட மாதிரி எழுதியிருக்கினம். உதைவிடப் பிரசுரம் அடிக்காமல் இருந்திருக்கலாம். மீண்டும் ஒரு முறை தங்கடை தோழர்களை தாங்களும் சாகவைச்சுப் போட்டினம் முன்னாள் வடக்கு-கிழக்கு அதிகார அணியினர்.

நம்மூர் தொலைக்காட்சி நிலையங்களுக்குள்ளே ஒரு விசயத்திலை மட்டும் நல்ல ஒற்றுமை இருக்கிறமாதிரித் தெரியுது. அதாவது தமிழ்பட வீடியோ கசட்டுகளை ஒரு உதவி மாதிரி தமக்குள்ளே பரிமாறிக்கொள்ளுகினமோ எண்டு எனக்கு சந்தேகமாய் கிடக்கு. ஏன் தெரியுமோ? ஒரே படத்தைத்தான் மாறி மாறி ஒவ்வொரு நிலையத்தாரும் போட்டு அறுக்கினம். போடாததைப் போட்டா என்ன குறைஞ்சோ போகும்.

திருவான அதிகார ஏஜண்ட் இனத்துவேச விடயத்தில் கொடிகட்டிப் பறக்கிறார் எண்டு கதை. பைபிள் மீது சத்தியம் செய் எண்டும் ஒரு அகதியை மிரட்டினாராம். இந்த அரசாங்கம் உங்களுக்கு எல்லாம் செய்யுதுதானே வேறை என்ன பிரச்சனை எண்டமாதிரியும் கடு கடு முகத்தோடை ஏறிவிழுகிறாராம். எதுக்கும் உது நல்லதில்லை.

பக்கத்து நாட்டு விசத்தியலை ரெண்டு எழுத்தார் கொதிப்பாத்தான் இருக்கினம். தேனக பூபதியார் நினைவுநாளை ஒரு மாத நிகழ்ச்சியாக அறிவிச்சிருப்பதும் பக்கத்து நாட்டைஒரு பிடி பிடிக்கத்தானாம். பூட்டிய கதவம் திறந்து போன விடயத்திலை பக்கத்து நாடும் ரெண்டு எழுத்தாரிலை எரிச்சலின் உச்சத்திலைதான் இருக்குதாம்.

ரெண்டு எழுத்து தலைவரை தரச்சொல்லி கேட்டதாக பக்கத்து நாட்டு பத்திரிகைகள் பத்தி பத்தியாக செய்தி போட்டவை. எங்கடை அதிகார தரப்பு அப்படிக் கேட்கேல்லை எண்டு மறுத்திருக்கு. கேட்டினமோ கேட்கேல்லையோ கொடுக்க கூடிய நிலையிலையோ இருக்கினம். கொடுக்கிறது எண்டா தலைவர் எழுதின கடிதத்திலை இருக்கிற கையொப்பத்தைத்தான் கொடுக்க வேணும். ஏன் எண்டால் எங்கடை அதிகார தரப்பாரும் கையொப்பத்தை மட்டுமே அறிவார்கள். கையொப்பம் போடுபவரின் இருப்பிடம் அறியார்கள் அன்றோ.


தந்தி அனுப்பும் பயிற்சிக்கு 200 பேரை எடுத்திருக்கினம். அதிலை ஒருத்தர் மட்டுமே தமிழ் பேசும் ஆளாம். இனவிகிதாசாரம் எண்டால் என்ன? உங்களுக்குத் தெரிஞ்சா சொல்லுங்கோ.

சித்தர் பாடல் படிச்சு நீண்டநாளாகுது. இப்பவொரு சித்தர் பாடல்.

> "ஆனந்தம் பொங்கி அறிவோடு இருப்பார்க்கு
> ஞானந்தான் ஏதுக்கடி-குதம்பாய்
> ஞானந்தான் ஏதுக்கடி.
> கண்டாரை நோக்கி காந்தோடு இருப்பார்க்கு
> கொண்டாட்டம் ஏதுக்கடி-குதம்பாய்
> கொண்டாட்டம் ஏதுக்கடி."

இதை எழுதியவர் குதம்பைச் சித்தர்.

# சிறைக்குள் சிந்திய புனித இரத்தம்!



குட்டிமணி

## அரசியல் கைதிகள்

ஜூலை 25ம் திகதி வெலிக்கடை சிறையில் ஒரு திட்டம் உருவானது.

சோபாலலோகேனயா, சந்திரே போன்ற கிரிமினல் குற்றவாளிகள் ஏனைய சிங்களக் கைதிகளோடு சேர்ந்து இரகசியமாக போட்ட திட்டம் அது.

இந்தத் திட்டம் பற்றி சிறைக்காவலர்கள் சிலருக்கும் தெரிந்திருந்தது என்று நம்பப்படுகிறது.

வெலிக்கடை சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் 73 பேர் வரை இருந்தனர்.

குட்டிமணி, தங்கதுரை, ஜெகன், தேவன், டக்ளஸ் தேவானந்தா, மாணிக்கம் தாசன், றொபேட், வணபிதா சிங்கராஜர், டாக்டர் தர்மலிங்கம், கோவை மகேசன், பரந்தன் ராஜன், டாக்டர் இராஜசுந்தரம், பனாகொடை மஹேஸ்வரன், டேவிட் ஐயா, நடேசுதாசன், பாஸ்கரன், தேவகுமார், சிவபாதம் மாஸ்டர், வணபிதா சின்னராசா, ஜெயதிலகராஜா, ஜெயகுல ராஜா, ஜெயக்கொடி ஆகியோர் உட்பட 71 தமிழ் கைதிகள் வரை சிறையில் இருந்தனர்.







அற்புதன் எழுதுவது

சிறையில் இருந்த போதும் 73 அரசியல் கைதிகளும் சிறைக்காவலர்களோடு அரசியல் கைதிகளுக்கான உரிமைகளுக்காக அடிக்கடி போராடிக் கொண்டிருந்தார்கள்.

அதே சமயம் சிங்களக் கைதிகள் பலரோடு தமிழ் அரசியல் கைதிகள் நட்பாகவே இருந்தனர்.

பயங்கரமான கிரிமினல் குற்றவாளிகளான சிங்களக் கைதிகள்தான் வெலிக்கடைச் சிறையில் இருந்தனர்.

உணவு கொண்டுவந்து கொடுப்பது போன்ற காரியங்களை சிங்களக் கைதிகள் சிலரே கவனித்து வந்தனர்.

அவ்வாறு கவனித்து வந்த கைதிகளில் ஒருவர் அசப்பில் பிரபாகரன் மாதிரி இருப்பார்.

இதனால் அவரை குட்டிமணி 'தம்பி' என்று அழைக்கத் தொடங்கினார். ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் 'தம்பி' என்றே அழைக்கத் தொடங்கினார்கள்.

அவர் மீது தனிப்பிரியத்தோடும் நடந்துகொண்டார்கள். தங்களில் ஒருவராகவே அந்தக் கைதியைக் கருதினார்கள்.

## மதியம் 2 மணி

ஜூலை 25ம் திகதி மதியம் 2 மணிக்கு சிறைக்குள் திடீரென்று ஒரே கூச்சல்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் 73 பேரும் தனியான சிறைக் கூண்டுகளுக்குள் இருந்தார்கள்.

அரசியல் கைதிகளை அவர்களுக்குரிய கூண்டுகளுக்குள் மதிய நேரத்திலும் பூட்டியே வைத்திருப்பது வழக்கம்.

கிரிமினல் கைதிகளை மாலை நேரம் வரை வெளியே நடமாட அனுமதித்திருந்தார்கள்.

அவர்கள் அனைவரும் திரண்டுதான் வெட்டடா, குத்தடா என்று கூச்சல் போட்டுக் கொண்டு தமிழ் கைதிகளது கூண்டுகளை நோக்கி ஓடிவந்தார்கள்.

கூண்டுகளின் சாவிக் கொத்து சிறைக் காவலர்களிடம்தான் இருக்கும். சாவிக் கொத்துகளில் சில கூச்சல் போட்டுக் கொண்டுவந்த கைதிகளிடம் இருந்தது.

எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் சாவிக்கொத்துக்களை காவலர்கள் கொடுத்துவிட்டார்கள்.

குட்டிமணி- தங்கதுரை- ஜெகன், தேவன் ஆகியோர் இருந்த சிறைத் தொகுதிதான் முதலில் தாக்குதலுக்கு உள்ளானது.

கோடாலிகள், இரும்பு சட்டங்கள், பொல்லுகள் சகிதம் சிங்களக் கைதிகள் கூண்டுகளுக்குள் புகுந்தனர்.

குட்டிமணி போன்றவர்கள் எங்கே அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று துல்லியமாக வழிகாட்டிக் கொண்டிருந்தார் ஒருவர்.

அவர் வேறு யாருமல்ல. 'தம்பி' என்று குட்டிமணியால் பிரியமாகப் பெயர் சூட்டப்பட்ட கைதியே தான்.

எதிர்பாராத தாக்குதல். நிராயுதபாணிகளான நிலை. தாக்குதல் நடத்த வந்தவர்கள் தொகையோ அதிகம். குறுகலான சிறைக் கூண்டு. எதிர்த்துப் போராட வசதியில்லை.

சில தமிழ் கைதிகள் தனித் தனியே அடைக்கப்பட்டிருந்தனர்.

## இறுதிவரை எதிர்த்தனர்

கூண்டுகள் உடைத்து திறக்கப்பட்ட போது குட்டிமணி- தேவன் ஆகியோர் வெறுங்கைகளால் காடையர்களை எதிர்த்து தாக்கினார்கள்.

குட்டிமணி பலசாலி. குத்துச் சண்டை மல்யுத்தம் போன்றவற்றை தெரிந்து வைத்திருந்தவர். இறுதிவரை சளைக்காமல் எதிர்த்து தாக்கினார்.

ஆனாலும்-ஆட்பலமும், ஆயுதங்களும் காடையர் தரப்பில் அதிகம். அவர்கள் கைகளே மேலோங்கின.

குட்டிமணி வெட்டிச் சாய்க்கப்பட்டார். தொடர்ந்து அந்த சிறைத் தொகுதிக்குள் இருந்த 35 பேர் காடையர்களால் கொல்லப்பட்டனர்.

சிறைக்காவலர்கள் வேடிக்கை பார்க்க சிறைக் காடையர்கள் நடத்திய வேட்டையில் 35 போராளிகள் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

குட்டிமணியின் கண்கள் தோண்டி எடுக்கப்பட்ட கோரமும் அன்றுதான் நடந்தது.

"இன்று இது போதும் மிகுதியை நாளை பார்த்துக் கொள்ளலாம்" என்று சிறைக் காவலர் ஒருவர் வேட்டையர்களை அழைத்துச் சென்றார் என்றும் தகவல்கள் வெளியாகின.

சிலுவை வடிவில் அமைந்த சிறைத் தொகுதிகளைக் கொண்டது வெலிக்கடை சிறை. 25ம் திகதி சிலுவை வடிவத்தில் ஒரு பகுதியில் இருந்த சிறைத் தொகுதியில்தான் வேட்டை நடந்தது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த குட்டிமணி, தங்கதுரை, ஜெகன், தேவன், சிவபாதம் மாஸ்டர், நடேசுதாசன் போன்றவர்கள் உட்பட 35 பேர் பலியானார்கள்.

ஏனைய சிறைத் தொகுதிகளுக்கும் செய்தி பரவியது.

## எச்சரிக்கை

அடுத்தது தாங்கள் தான் என்று அவர்கள் நினைத்தார்கள்.

சாப்பாட்டு கோப்பைகளை உடைத்தும் வளைத்தும் ஆயுதமாக்கிக் கொண்டார்கள் மீதியிருந்த தமிழ் கைதிகள்.

மறுநாள் 26ம் திகதி ஏனைய தமிழ் கைதிகள் மிரட்டப்பட்டார்கள்.

யார் தாக்குதல் நடத்தியது என்று சாட்சி சொல்லக்கூடாது. சொன்னால் உங்கள் கதையும் முடிந்துவிடும் என்று சிங்களக் கைதிகள் எச்சரித்தனர்.

தமிழ் கைதிகள் அஞ்சவில்லை. பார்வையிட வந்த உயரதிகாரிகளிடம் தாக்குதல் பற்றி விபரித்தனர். அடையாளம் காட்ட முடியும் என்று தெரிவித்தனர்.

26ம் திகதி எதுவும் நடக்கவில்லை.

சிறைக்காவலர்கள் நினைத்திருந்தால் மீதியிருந்த தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் ஒரே இடத்தில் ஒன்றாக வைத்திருந்திருக்கலாம்.

ஆனால் அவர்களோ வழக்கம்போல தனித்தனி கூண்டுகளுக்குள் பூட்டினார்கள்.

ஒன்று அல்லது மூன்று, ஐந்து என்று ஒற்றை எண் வரக்கூடியதாகத்தான் ஒரு கூண்டுக்குள் கைதிகள் விடப்படுவார்கள். அதுதான் சிறை விதி.

உயிருக்கே உத்தரவாதமளிக்க முடியாத நிலையில் விதிகளை மட்டும் கடைப்பிடித்து பயன் என்ன?

## ஜூலை 27

ஜூலை 27ம் திகதி-மதியம் 2 மணி, மீண்டும் கூச்சல்கள்.

கொலைகார ஆயுதங்களோடு காடையர்கள் தமிழ் கைதிகளது கூண்டுகளை நோக்கி ஓடி வந்தனர்.

ஒரு சிறைக்காவலர் சிறந்த புத்திசாலி. தனது கைகளை பின்புறமாகக் கட்டிக் கொண்டு நின்றார். கையில் சாவிக் கொத்து. ஓடி வந்தவர்களுக்கு அது மிக வசதியாக இருந்தது. அவர்கள் சாவிக் கொத்தை அவரிடமிருந்து எடுத்துக் கொண்டனர்.

அதற்காகவேதான் அவர் அப்படி நின்றிருந்தார். வேலியே பயிரை மேய அனுமதி கொடுத்த காட்சிதான் அது.

சாவிக் கொத்துகளோடு வந்து கூண்டுகளை திறக்க முற்பட்ட காடையர்களை தமிழ் கைதிகள் தாக்கினார்கள்.

டக்ளஸ் தேவானந்தா, மாணிக்கம் தாசன், பாஸ்கரன், தேவகுமார், றொபேட், ஜெயக்கொடி ஆகியோர் உட்பட பல தமிழ் அரசியல் கைதிகள் துணிச்சலோடு எதிர்த்தாக்குதல் நடத்தினார்கள்.

சாப்பாட்டு கோப்பை மூலம் தயாரான ஆயுதங்களால் கூண்டுக் கதவில் கைவைத்தவர்கள் மீது தாக்கினார்கள்.

## முதிர்ந்தோர் ஆயினும்

இதே சமயம் டாக்டர் தர்மலிங்கம், டாக்டர் இராஜசுந்தரம், வணபிதா சிங்கராஜர், கோவை மகேசன், டேவிட் ஐயா போன்றவர்கள் ஒரே தொகுதியில் ஒன்றாக வைக்கப்பட்டிருந்தனர்.

வயது முதிர்ந்தவர்கள், ஆபத்தில்லாதவர்கள் என்ற காரணத்தினால் அவர்களை ஒன்றாக இருக்க அனுமதித்திருந்தனர்.

அவர்களும் பொல்லுகள் சகிதம் தயாராக இருந்தனர்.

அவர்கள் இருந்த சிறைத் தொகுதியை நோக்கி ஒரு கும்பல் பாய்ந்து சென்றது.

அப்போது காந்தியம் அமைப்பைச் சேர்ந்த டாக்டர் இராஜசுந்தரம் கும்பலை நோக்கி முன்னே சென்றார்.

"நாங்கள் காந்தியவாதிகள். எங்களை தாக்குவது முறையல்ல."

என்றார் டாக்டர் இராஜசுந்தரம். காட்டுமிராண்டித்தனத்திடம் காந்தியம் செல்லுமோ?

ஒரு காடையன் தனது பொல்லால் டாக்டர் இராஜசுந்தரத்தின் தலையில் ஓங்கி அடித்தான்.

இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து காந்தியவாதி தனது கடைசி மூச்சை இழந்தார்.

அவரை சாய்த்துவிட்டு சிறைத்தொகுதியை நோக்கி பாய்ந்தது கும்பல்.

முதியவர்கள் என்ற போதும் அவர்கள் கும்பலை எதிர்த்து தாக்கினார்கள். கும்பல் பின்வாங்கியது.

அதில் சிலரை பிடித்து தமது சிறைத் தொகுதிக்குள் கொண்டுவந்து முழங்காலில் இருத்தி வைத்தனர் அந்த மூத்தோரான தமிழ் கைதிகள்.

தமிழ் கைதிகள் அனைவரையும் ஒரே இடத்தில் வைத்திருந்தால் ஜூலை 25-27இல் தாக்குதல் நடத்திய கும்பல் காணாமல் போயிருக்கும்.

குறைந்த பட்சம் முதல் தாக்குதல் நடத்த பின்பாவது தமிழ் கைதிகளை ஒன்றாக வைத்திருந்திருக்கலாம்.

## 18 பேர் பலி

ஆனால் செய்யவில்லை. ஜூலை 27ல் நடந்த வெறியாட்டத்தில் 18 தமிழ் அரசியல் கைதிகள் பலியானார்கள்.



ஆயுதப் போருக்கு நெய் வார்த்த 1983 ஜூலை

பலத்த எதிர்தாக்குதல் நடத்தியதால் 18 பேரோடு பலியெடுப்பு நின்றது.

றொபேட், டாக்டர் இராஜசுந்தரம், தேவகுமார், பாஸ்கரன் உட்பட 18 பேர் ஜூலை 27 அன்று இரத்தம் சிந்தி இன்னுயிர் இழந்தனர். இரண்டு நாளிலும் 53 பேர் பலியானார்கள்.

அதன்பின்னர் தான் இராணுவம் வந்து நிலமையைக் கட்டுப்படுத்தியது.

**தர்மிஸ்டர் ஆட்சியில் வெறித்தனம் தர்மிஸ்டப்படி வேட்டை நடத்தியது.**

சிறைக்குள் தமிழ் கைதிகள் செத்துக் கொண்டிருந்த போது, வெளியேயும் தமிழர்கள் கலவரத் தீயில் கருகிக் கொண்டிருந்தனர்.

**"என் கண்களை பார்வையற்ற தமிழ் மகன் ஒருவருக்கு கொடுங்கள். மலரப் போகும் தமிழீழத்தை அந்தக் கண்கள் மூலம் காண்கிறேன்"**

என்று நீதிமன்றத்தில் சொன்னவர் போராளி குட்டிமணி.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குட்டிமணிக்கு வட்டுக்கோட்டை தொகுதி எம்.பி.பதவி தருவதாகக் கூறியது கூட்டணி.

குட்டிமணி அதனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

அந்த தியாகப் போராளி வெலிக்கடை சிறையில் இரத்த சாட்சியானார்.


## சிறை மாற்றம்

ஜூலை 27ம் திகதி மாலையில் வெலிக்கடை சிறையில் மீதியிருந்த தமிழ் கைதிகள் இடம் மாற்றப்பட்டனர். மட்டக்களப்பு சிறைச் சாலைக்கு தமிழ் கைதிகள் கொண்டு செல்லப்பட்டனர்.

தென்னிலங்கையில் வேறு சிறைகளில் இருந்த தமிழ்கைதிகளும் பாதுகாப்பு கருதி மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டனர்.

மகர சிறையில் இருந்த பரமதேவாவும் அவ்வாறு மாற்றப்பட்டவர்களில் ஒருவர்.

சிறையில் கூட தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது என்பதை அரசாங்கமே மறைமுகமாக ஒப்புக்கொண்டதின் அடையாளம்தான் சிறை மாற்றம்.



ஜெகன்

சிறையில் போராளிகள் படுகொலையான செய்தி உலகெங்கும் அதிர்ச்சியோடு நோக்கப்பட்டது.

ஜே.ஆரின் தர்மிஸ்ட முகமூடி கிழிந்து போனது. தாக்குதல் நடத்தியவர்களை அடையாளம் காட்ட தப்பிய போராளிகள் தயாராகவே இருந்தனர்.

நேர்மையான விசாரணை மூலம் கொலையாளிகளையும், அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்களையும் தண்டிக்க அரசு முன்வரவேயில்லை.

வெலிக்கடை வேட்டைக்கு தலைமை தாங்கியவர்களில் ஒருவர் சேபால. இவர்தான் பின்னர் ஒரு விமானக் கடத்தலில் ஈடுபட்டார். மனநோயாளி என்று கூறப்பட்டார்.

## காட்டுத் தீ

83 ஜூலைப் படுகொலைகள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஈழப் போராட்டம் மீதான ஆழமான பிடிப்பை ஏற்படுத்தியது.

இனியும் ஒற்றையாட்சியின் கீழ் சேர்ந்து வாழ முடியாது என்று முடிவு திட்டவட்டமாக ஏற்பட்டது.

மாணவர்கள்-இளைஞர்கள் மத்தியில் ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற கருத்து காட்டுத் தீயாகப் பற்றிக்கொண்டது.

இந்திய அரசுக்கும் நெருக்கடி ஏற்பட்டது. தமிழகம் கொந்தளித்தது.

தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர் மாநில அரசின் சார்பாக பொது வேலை நிறுத்தம் அறிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தலைவர் கலைஞர் கருணாநிதியும் இலங்கை அரசு மீது கண்டனங்களைத் தொடுத்தனர்.

இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி ஒரு முடிவுக்கு வந்தார்.

எடுத்துச் சொன்னால் ஜே. ஆர் அரசு கேட்கப் போவதில்லை.

போராளி இயக்கங்கள் மூலமாக அடித்துச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று இந்தியப் பிரதமர் தீர்மானித்தார்.

## ஆயுதப் பயிற்சி

போராளி அமைப்புக்களில் முக்கியமானவற்றுக்கு ஆயுதப் பயிற்சி வழங்க இந்தியா முன்வந்தது.

இயக்கங்களோடு தொடர்பு கொள்ளும் பொறுப்பை இந்திய ஆய்வு பகுப்பாய்வு பிரிவு என்று அழைக்கப்படும் 'றோ' ஏற்றுக்கொண்டது.

தமிழ் நாட்டில் அப்போது எம்.ஜி. ஆரின் ஆதரவோடு செயற்பட்டுக் கொண்டிருந்தது 'புளொட்' அமைப்பு.

எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் செல்வாக்குள்ள அமைச்சராக இருந்தவர் எஸ்.டி.சோமசுந்தரம். சுருக்கமாக எஸ்.டி.எஸ்.என்று அவரை அழைப்பார்கள். எஸ்.டி.எஸ். உமா மகேஸ்வரனுக்கு நெருக்கம்.

புலிகளுக்கு ஆதரவாக இருந்தவர் காமராஜர் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த நெடுமாறன்.

கலைஞர் கருணாநிதி ரெலோ அமைப்புக்கு ஆதரவாக இருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தமிழ் நாட்டில் உள்ள 'நக்சலைட்' என்று அழைக்கப்படும் குழுக்களோடு உறவாக இருந்தது.

இவற்றில் எந்த அமைப்பை தெரிவு செய்வது என்பதில் 'றோ' வுக்கு குழப்பம்.

(தொடர்ந்து வரும்)

# விஷமப் பிரசாரங்களுக்கு ஆப்புவைக்கும் சந்திரிகாவின் இந்திய விஜயம்!

## அலசுவது – இராஜதந்திரி

## இனப்பிரச்னைத் தீர்வின் மூலம் இலங்கையின் அபிவிருத்தியைச் சகிக்க முடியாத வெளிச்சக்திகள்

இந்தியாவுக்கு ஜனாதிபதி என்ற ரீதியில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த வாரம் முதல் தடவையாக விஜயஞ் செய்திருந்தார்.

இலங்கை, இந்திய உறவுகள் கடந்த சிலவருடங்களாக குறிப்பிடத்தக்க நிலையில் இருந்திருக்கவில்லை.



அன்னை இந்திரா

1983ம் ஆண்டில் இலங்கையில் வெடித்த இனக்கலவரம், அதனையடுத்து தோற்றம் பெற்ற அரசியல் சூழ்நிலைகள் யாவும் இலங்கை, இந்திய உறவில் பாதிப்புக்களைத் தோற்றுவித்திருந்தன.

கடந்த ஒரு தசாப்தகாலத்தில் இலங்கை இனப்பிரச்னை குறித்த விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகவே காணப்படுகின்றது.

1983ம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் வெடித்து தமிழர்களின் உயிர், உடமைகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டபோது, இந்தியா உடன் செயலில் இறங்கியதை எவரும் இலகுவில் மறந்து விட முடியாது. அன்று இந்தியப் பிரதமராக திருமதி இந்திரா காந்தி இருந்தார். இன்றைய பிரதமரான திரு.பி.வி.நரசிம்மராவ் இந்திரா அரசின் வெளிநாட்டமைச்சராகப் பணிபுரிந்திருந்தார்.

83 ஜுலை இனக்கலவரத்தினால் கொழும்பு மாநகர் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்த போது மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தமது விஷேட பிரதிநிதியாக அன்று திரு.பி.வி. நரசிம்மராவை இலங்கை நிலவரத்தை அறிந்து வர கொழும்புக்கு அனுப்பிவைத்திருந்தார்.

திரு.நரசிம்மராவ் அன்றைய இலங்கை வெளிநாட்டமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத், மற்றும் ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன ஆகியோரைச் சந்தித்து நிலமைகளைக் கேட்டறிந்திருந்தார்.

திரு.நரசிம்மராவ் நாடு திரும்பியதும், இந்தியா– ஆடம்பரப் பயணிகள் கப்பலான 'எம்.வி.சிதம்பரத்தை' கொழும்புக்கு அனுப்பி வைத்து அகதிகளாகப் பாதிக்கப்பட்ட தமிழ்" மக்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கு உதவியிருந்தது. கூடவே அகதிகளின் நலன் கருதிப் பல்வேறு உதவிகளையும் மேற்கொண்டிருந்தது.

83 இனக்கலவரத்தையடுத்து இலங்கையின் தமிழ் அரசியல்வாதிகள் பலரும் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தனர்.

இது தவிர இலட்சக்கணக்கில் வடக்கு, கிழக்குப் பிரதேச தமிழ் மக்களும் இலங்கையின் யுத்த நிலவரங்களுக்கு முகங் கொடுக்க முடியாதவர்களாக தமிழ் நாட்டில் தஞ்சம்புகுந்தனர்.

அப்போது இந்தியத் தலைவர்கள் நீட்டிய அபயக்கரம், அவர்களின் அரவணைப்பு என்பன மிக உன்னதமானவையாகவே இருந்தன.

அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இலங்கை இனப்பிரச்னை குறித்த அரசியல் நடவடிக்கைகளை மிகக் கவனமாகவும், இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்கும் விதத்திலும் மேற்கொண்டிருந்தார்.

தமிழ்நாட்டிலும் இலங்கைத் தமிழர்களுக்கு அன்றைய தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையிலான தமிழக மாநில அரசு பிரமாண்டமான முறையில் ஆதரவை வழங்கியிருந்தது.

மிதவாத தமிழ் அரசியலாளர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் தீவிரவாத அமைப்புகளுக்கும் தமிழக அரசு புகலிடமளித்து அவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டியிருந்தது.

எனவே இலங்கை இனப்பிரச்னை குறித்த விடயத்தில் மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் காலப்பகுதியில் இலங்கைத் தமிழர்களுக்கு அபரிமிதமான ஆதரவு வழங்கப்பட்டதை எவரும் இலகுவில் மறந்துவிடமுடியாது.

இருந்த போதிலும் இந்திராவின் அகால மறைவு, இலங்கை இனப்பிரச்னை குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்து.

மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியினால் இலங்கை இனப்பிரச்னை அணுகப்பட்ட விதத்தில் காணப்பட்ட பக்குவமும், ராஜதந்திரமும் இந்திராவின் புதல்வர் ராஜீவ் காந்தியின் அரசாங்கத்திடம் காணப்படவில்லை.

இந்தியாவின் பஞ்சாப் சீக்கிய தீவிரவாதப்பிரச்னை இந்திரா காந்தியைக் கொடூரமாகப் பலியெடுத்து விட்டிருந்தது. பஞ்சாப்பின் அமிர்தஸரஸ் பொற்கோயிலுக்குள் இந்திய இராணுவம் நடத்திய அதிரடித்தாக்குதலுக்குப் பழிவாங்கும் விதத்தில் இந்திரா காந்தியை சீக்கிய தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றிருந்தனர்.

பஞ்சாப் சீக்கியப்பிரச்னை இந்திய அரசுக்கு ஒரு பெரும்சவாலாகவே இருந்தது. இந்திராவுக்குப் பின்னர் இந்தியாவின் ஆட்சியைப் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி பஞ்சாப் பிரச்சனைக்கு ஒரு தீர்வைக் காண வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தார்.

வட இந்தியாவில் பஞ்சாப் பிரச்னை தீவிரமடைந்திருந்த காலத்திலேயே தென்னிந்தியாவில் இலங்கை இனப்பிரச்னை குறித்த நடவடிக்கைகளும் சூடுபிடிக்க ஆரம்பித்தன.

எனவே இந்தியாவில் ஏக காலத்தில் பஞ்சாப் பிரச்னையும், இலங்கை இனப்பிரச்னையும் அரசியல் ரீதியாகப் பெரிதும் முக்கியம் பெற்றிருந்தன.

இந்திராவுக்குப் பின்னர் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பையேற்ற ராஜீவ் காந்தி பஞ்சாப் பிரச்னைத் தீர்வில் அதீத அக்கறை காட்டினார்.

அப்பிரச்னையைத் தமக்கும் ஒரு தலையிடியாக வைத்திருக்க அவர் விரும்பியிருக்கவில்லை.

இதனையடுத்து பஞ்சாப் பிரச்னைக்குத் தீர்வுகாணும் வகையில் தீர்வுத் திட்டமொன்று ராஜீவ் காந்தி அரசினால் கொண்டு வரப்பட்டது.

சீக்கிய தீவிரவாதிகள் முன்வைத்த 'காலிஸ்தான், தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றீடாக அத்தீர்வுத்திட்டம் கொண்டு வரப்பட்டது.

பஞ்சாப் தீர்வுத்திட்டத்தைக் கொண்டு வந்த பாணியிலேயே இலங்கை இனப்பிரச்னையையும் தீர்த்து வைப்பதில் ராஜீவ் அரசாங்கம் அக்கறைகாட்டியிருந்தது.

ராஜீவ் இந்தியப் பிரதமராக இருந்த தருணத்தில் தமிழகத்தில் இலங்கைத் தமிழ் விவகாரம் மிகவும் சூடுபிடித்திருந்தது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசம் ஒரு யுத்தவலயமாகவே மாற்றமடைய ஆரம்பித்தது.

ஆயிரக்கணக்கில் படையினரும், நவீன படைக்கலங்களுமாக இலங்கையின் ஆட்சியாளர்கள் முழு அளவிலான யுத்த நடவடிக்கைகளை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் முடுக்கி விட்டிருந்தனர்.

இதன்காரணமாக நாளுக்கு நாள் பாக்கு நீரிணையைத் தாண்டி தமிழகத்திற்குள் தஞ்சமடையும் இலங்கைத் தமிழ் அகதிகளின் தொகை பல்கிப் பெருகியது.

இதேவேளை இலங்கையின் ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கமும், ராஜீவ் இந்திய அரசும் தென் ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு (SARC) அமைப்பு என்ற அடிப்படையில் தம்மிடையே நெருங்கிய உறவுகளை வைத்துக்கொள்ள ஆரம்பித்தன.

ராஜீவை தம்பக்கம் ஈர்த்து தனது நிலைப்பாட்டைப் பலப்படுத்திக் கொள்வதில் திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தன வெற்றி கண்டிருந்தார்.

இலங்கை இனப்பிரச்னையின் ஆழ-அகலத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாது இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்ற அடிப்படையில் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரச்னைக்கு ஓர் அரைகுறைத் தீர்வுத் திட்டமொன்றை திணிப்பதில் ஜே.ஆர்.ஜயவர்த்தனவும், ராஜீவ் காந்தியும் தீவிரமாக இருந்தனர்.

இந்த ஒப்பந்த அமுலாக்கத்தை மேற்கொள்ளும் பொருட்டு அமைதிப் படையினர் என்ற ரீதியில் இந்தியப் படையினர் பெருமளவில் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தை ஆக்கிரமித்திருந்தனர்.

இந்தியப் படையினரின் வடக்கு, கிழக்குப் பிரதேச ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இந்தியப் படையினருக்குமிடையே மோதல்களை உண்டு பண்ணியிருந்தன.

இந்தியப் படையினர் அமைதிப்பணி என்று கூறிக்கொண்டு வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை முற்றுகையிட்டிருந்த போதிலும் அவர்களது நடவடிக்கைகளில் எந்தவொரு விதத்திலும் அமைதிப் பணியின் சாயலைக் காணமுடியவில்லை.

1987ம் ஆண்டு முதல் 1990ம் ஆண்டு வரை இந்தியப் படையினர் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் பிரசன்னமாகியிருந்தனர். அவர்களது இப்பிரசன்னத்தையும், அவர்களது ஆளணிகள், படைக்கலன்கள் என்பவற்றை அவதானித்த போது அவர்கள் முழு அளவில் ஒரு யுத்தத்துக்குத் தயாராக வந்ததையே அறிந்து கொள்ள முடிந்தது.

இலங்கையில் இந்தியப் படையினர் நிலை கொண்டிருந்த காலப்பகுயில் இந்தியப் படையின் பிரதம தளபதியாக ஜெனரல் கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜி என்பவரே இருந்தார்; ஜெனரல் சுந்தர்ஜி ஒரு தமிழர்.

கூடவே இந்திய இராணுவத்தை முழு அளவிலான ஒரு நவீன இராணுவமாக மாற்ற வேண்டுமென்பதும், சந்தர்ப்பங் கிடைக்கும் போதெல்லாம் இந்திய இராணுவத்தை செயலில் இறக்கிவிடுவதுமே இவரது நடவடிக்கையாக இருந்து வந்தது.

பஞ்சாப் அமிர்தஸரஸ் பொற்கோவிலுக்குள் இந்திய இராணுவம் நுழைந்து சீக்கிய தீவிரவாதிகளுக்கு எதிராக அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. 'ஒப்ரேஷன் புளுஸ்டார்' (Operation Bluestar) என்ற அந்த அதிரடி நடவடிக்கையின் சூத்திரதாரியாகவும் ஜெனரல் சுந்தர்ஜியே இருந்தார்.

இந்த இராணுவ நடவடிக்கை தவிர ஜெனரல் சுந்தர்ஜி தமது காலப் பகுதியில் இந்திய-பாகிஸ்தான் எல்லையில் கூட ஒப்பரேஷன் பிராஸ்டக் (Operation Brasstack) என்ற மாபெரும் இராணுவ ஒத்திகையொன்றையும் நிகழ்த்தியிருந்தார்.

இந்த இராணுவ ஒப்பரேஷன் நடவடிக்கை பாகிஸ்தானுடன் ஏறத்தாள ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பது போன்றே காணப்பட்டது.

எனவே ஜெனரல் சுந்தர்ஜியின் தலைமையின் கீழ் இந்திய இராணுவம் தனக்குக் கிடைக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் நன்கு பயன்படுத்தி தனது ஆளணிகளை முழு அளவில் பயன்படுத்தியிருந்தது.

இலங்கையில்கூட இந்திய இராணுவம் ஆரம்பித்த 'ஒப்பரேஷன் பவான்' (Operation Bawan) என்ற இராணுவ நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு விரிவான யுத்தத்துக்கே வழிவகுத்திருந்தது.

இறுதியாக இலங்கையில் இருந்த இருவருட காலப்பகுதியில் எதுவித வெற்றியையும் பெறமுடியாத நிலையிலேயே இந்திய இராணுவம் நாடு திரும்பியது.

எனவே இலங்கை, இந்திய அரசுகளின் உறவில் மட்டுமல்லாது வடக்கு, கிழக்குவாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்னையில் கூட ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்துவதாகவே இலங்கை- இந்திய ஒப்பந்தம், அதனை அமுலாக்குவதில் இந்தியப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் விளங்கியிருந்தன.

காலப்போக்கில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைக் கொண்டுவருவதில் அக்கறை காட்டிய முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் தமிழகத்தில் 1991ம் ஆண்டு குண்டு வெடிப்பொன்றில் கொல்லப்பட்ட நிலையில், அக்குண்டு வெடிப்புக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே சூத்திரதாரிகள் என்று இந்திய புலனாய்வாளர்கள் தமது ஆதாரங்களை வைத்துக் குற்றம்சாட்டியிருந்தனர்.

ஆனால் ராஜீவின் காலப்பகுதியில் அவருக்கு நெருக்குதல்களைக் கொடுக்கக் கூடிய பல்வேறு சூழ்நிலைகளும் இந்தியாவில் தோற்றம் பெற்றிருந்தன.

சீக்கிய தீவிரவாதிகளின் கொலைப்பட்டியலில் இந்திரா காந்தியின் முழுக்குடும்பமுமே இடம்பெற்றிருந்தது. இது தவிர இந்தியா சுவீடனிடம் இருந்து பெற்ற 'போபர்ஸ்' (Bofors) பீரங்கி தொடர்பான விவகாரத்திலும் ராஜீவ் காந்தி ஊழலில் ஈடுபட்டிருந்ததாக குற்றஞ்சாட்டப் பட்டிருந்தார்.

இந்நிலையில் ராஜீவ் காந்தி பல்வேறு கோணங்களிலும் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளுக்கே முகம் கொடுத்திருக்கக் காணப்பட்டார்.

ஆனால் இந்தியப் புலனாய்வாளர்கள் ராஜீவ் கொலை தொடர்பாக இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகளையே குற்றஞ்சாட்டியிருந்தனர்.


தமிழீழ விடுதலைப் புலிகள் இக் குற்றச்சாட்டை மறுத்ததுடன் தமக்கு இவ்விவகாரத்தில் எதுவித தொடர்புமில்லை என்று தெரிவித்திருக்கக் காணப்படுகின்றனர்.

இன்று இலங்கை-இந்திய அரசியல் நிலவரங்களை எடுத்து நோக்குகையில் இருதரப்பிலும் புது முகங்களே ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கக் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயம் இலங்கை, இந்திய உறவுகள் விடயத்தில் மிக முக்கியமானதொன்றாகவே விளங்குகின்றது.

இலங்கையில் இன்று வடக்கு, கிழக்குப் பிரச்னை ஒரு கெடுபிடியாகவே இருந்து வருகின்றது. இப்பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதில் சந்திரிகா அரசு அக்கறை காட்டிவருகின்றது.

இந்திய அரசாங்கம் கூட



ராஜீவ் காந்தி

இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்களுக்கு இனப் பிரச்னைத் தீர்வு விடயத்தில் தனது ஆதரவைத்தெரிவித்துள்ளது.

இருந்தபோதிலும் இலங்கையின் சமாதான- சகவாழ்வு, மற்றும் அபிவிருத்தி என்பனவற்றைப் பொறுத்துக் கொள்ளமுடியாத விஷமசக்திகளே இலங்கையின் இனப்பிரச்னைகுறித்த சமாதான முயற்சிகளுக்குப் பங்கம் விளைவிப்பதில் தீவிரமாக இருக்கின்றன.

இலங்கையின் பிரதான ஆயுதப் போராட்ட இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இருந்து வருகின்றனர். ஜனாதிபதி சந்திரிகா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமரசத்தை ஏற்படுத்துவதில் எடுத்துவரும் முயற்சிகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் இலங்கை தென் ஆசியப் பிராந்தியத்தில் பொருளாதார ரீதியாக சிறப்பிடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையின் சுபீட்சத்தை மழுங்கடிக்க வேண்டும்மென்ற வெளிச்சக்திகள் இனப்பிரச்னைத் தீர்வு குறித்து இலங்கை எடுக்கும் முயற்சிகளைப் பாழாக்குவதில் மும்முரமாக இருக்கின்றன.

இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளை ஆரம்பித்துள்ள இத்தருணத்தில் ராஜீவ் கொலை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனை இந்திய அரசு கைது செய்ய ஆயத்தமாகின்றது என்ற விஷமத்தனமான பிரசாரத்தையும், விஷமிகள் கட்டவிழ்த்துவிட ஆரம்பித்துள்ளனர்.

ஆனால் இந்தியப் பிரதமரோ அல்லது, அவரது அரசாங்கமோ திரு. பிரபாகரன் குறித்து அத்தகைய நிலைப்பாடுகள் எதனையும் முன்வைக்காதிருக்கக் காணப்படுகின்றது.

அண்மைக் காலங்களில் இலங்கை, இனப்பிரச்னைத் தீர்வு குறித்த நடவடிக்கைகளில் இந்தியா தனது பூரண ஆதரவையே தெரிவித்து வந்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயம் இந்த நல்லாதரவை மேலும் பெருக்கிக் கொள்வதாகவும் விஷமப் பிரசாரங்களுக்கு ஆப்புவைப்பதாகவுமே அமையும் என்று கருதிக்கொள்ள முடியும்.



ஜோன் எஃப் கென்னடி

# ருசிகரமான உண்மைகள்



ஹிட்லரோடு இங்கா

## காதல் மன்னன் ஜோன் எஃப். கென்னடி

தருவது ரசிகன்



அமெரிக்க ஜனாதிபதிகளில் உலகப் புகழ் பெற்ற கில்லாடியான ஜனாதிபதி கென்னடி இளமையானவர். அழகானவர். துணிச்சலானவர். துடிப்பானவர்.

அரசியலில் மட்டுமல்ல அழகான பெண்கள் விடயத்திலும் கென்னடிக்கு ஆர்வம் சொஞ்சம் அதிகம்.

ஆட்சிக் கட்டிலில் ஏற முன்னரே ஆரம்பித்த கென்னடியின் காதல் விளையாட்டுக்கள் பதவிக்கு வந்த பின்னரும் தொடர்ந்தன.

காதல் மன்னன் கென்னடியை இப்போது சந்திக்கலாமா? லாம்!

□□

ஜெர்மன் தலைநகரம் மியூனிச். 1936ம் ஆண்டு.

ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள சென்றாள் இங்கா அர்வாத்.

இங்கா அர்வாத் பிறந்தது டென்மார்க்கில். குடியேறியது அமெரிக்காவில். ஒலிம்பிக்கில் கலந்து கொண்டது அமெரிக்கா சார்பில்.

வயது 16. இளமை தேனாறு. ஒரே வார்த்தையில் சொல்வதானால் பேரழகி. பார்வையாளர்கள் அவள் திறமைகளை விட அவளின் இளமையை வியந்து இரசித்தார்கள்.

அவ்வாறு இரசித்தவர்களில் ஒருவர் ஹிட்லர். ஜெர்மன் சர்வாதிகாரிக்கு இங்காவின் சமீபம் தேவைப்பட்டது.

போட்டிகளில் பங்கேற்று விருதுபெற வந்தவளை விருந்துக்கு அழைத்தார் ஹிட்லர்.

"இங்கா நீ அதிகம் அழகாக இருக்கிறாய்."

குட்டி மீசை ஹிட்லர் குறும்பாக சொல்லிக் கொண்டு அவள் பின்புறங்களில் லேசாகத் தட்டினான்.

இங்காவுக்கு ஹிட்லரைப் பிடித்திருந்தது. ஹிட்லரை விட அவனை அனுசரித்துப் பேசினால் கிடைக்கும் வசதிகள் பிடித்தது.

ஒலிம்பிக் போட்டி முடிந்த பின்பும் இங்கா ஜெர்மனில் தாமதித்தாள்.

ராஜ உபசாரம். ஹிட்டலரின் உத்தரவு.

'இங்கேயே இருந்து விடலாமே. ஹிட்லரே காலடியில் விழுந்துவிட்டால் உல்லாசத்தின் உச்சிக்கே சென்றுவிடலாம்.'

என்று நினைத்தாள் இங்கா. ஹிட்லரோ முப்பது நாள் மோகம் தீர்ந்தபின், "இனி நீ போகலாம்" என்று விட்டான்.

இங்காவின் கனவு கலைந்தது. அமெரிக்கா திரும்பினாள்.

அமெரிக்கா உளவு நிறுவனத்திற்கு இங்கா-ஹிட்லர் உறவு தெரிந்திருந்தது.

இங்காவை ஜெர்மனில் மோப்பம் பிடித்து திரிந்த அமெரிக்க உளவு நிறுவனம் இரகசிய புகைப்படங்களை வாஷிங்டனுக்கு அனுப்பி வைத்தது.

புகைப்படங்களில் இங்கா ஹிட்லரோடு நெருக்கமாய் இருந்தாள்.

'நாடு திரும்பியுள்ள இங்கா கவனிக்கப் பட வேண்டியவள்!

ஹிட்லர் உளவறிய தன்னோடு உறவாடியவளை அனுப்பிவைத்திருக்கலாம் என்று சந்தேகம் வந்தது.

அமெரிக்க உளவு நிறுவம் எஃப்.பி.ஐ இங்காவை நிழல்போல தொடர ஆரம்பித்தது.

இங்கா 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை ஆசிரியரை சந்தித்தாள்.

"நிருபராக விரும்புகிறேன். முடியுமா?"

"இந்த நிறுவனத்தையே உன் அழகுக்கு தரலாம். நிருபர் பதவிதானே கேட்கிறாய். ஓ.கே!"

நிருபர் பதவி அவள் அமெரிக்காவின் பிரபலங்களோடு நெருக்கமாக வசதியாக அமைந்தது.

□□

"இங்கா கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள் அல்லவா?" கேட்டவர் எஃப்.பி.ஐ. இயக்குநர்.

"நிச்சயமாக! அவள் வாடகைக்கு எடுத்துள்ள வீட்டில் இரகசிய கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன."

"பொருத்த வேண்டிய பொருத்தமான இடத்தில் பொருத்திவிட்டீர்களா?"

"யெஸ்! இங்காவின் படுக்கை அறையிலும் ஒரு கமரா ஒளித்திருக்கிறது."

"குட். வெரி குட்."

இங்காவின் இல்லத்தில்; உடலை சகல பரிமாணங்களோடும் வெளிப்படுத்தும் மெல்லிய, குட்டையான உடையில் இருந்த இங்கா.

"வெல்கம் லெப்டினன்ட்" என்றாள். கைகுலுக்கும் போதே விரல்களால் விரல்களோடு சில்மிஷம் செய்தாள்.

லெப்டினன்ட் பெயர் ஜோன் எஃப் கென்னடி. அமெரிக்க கடற்படையின் இளம் லெப்டினன்ட்.

இருவரும் மது அருந்தினார்கள்.

மது அருந்தி முடித்துவிட்டு இங்காவின் இதழ்களை நனைத்தார் கென்னடி.

"உள்ளே போகலாமா?"

"அவசரமா லெப்டினன்ட்?"

"ஆர்வம்!"

இளம் புன்னகையோடு அவரை ஆழமாய் பார்த்தாள் இங்கா.

இருவரும் இங்காவின் கட்டில் அறைக்குள் நுழைய, ஒளித்திருந்த கமரா இருவரையும் வெட்கமில்லாமல்- விலாவரியாகக் கவனித்துக் கொண்டிருந்தது.

□□

எஃப்.பி.ஐ. இயக்குநர் முகத்தில் கோபம் குடியிருந்தது.

"கடற்படை இரகசியங்களை கட்டிலில் வைத்து கறந்துவிடப் போகிறாள். உடனே நடவடிக்கை தேவை."

உரிய இடங்களுக்கு தகவல் போனது. கடற்படை லெப்டினன்ட் கென்னடி மீது நடவடிக்கை எடுக்க நினைத்தார்கள்.

கென்னடியின் அப்பா ஜோசப் கென்னடிக்கு உயரதிகாரிகளிடம் நல்ல செல்வாக்கு.

அப்பாவைத் தெரியும் என்பதால் மகனை கடற்படையை விட்டு துரத்தாமல் இடமாற்றம் செய்தார்கள்.

வாஷிங்டனில் இருந்து பசுபிக் பிராந்தியத்திற்கு இடமாற்றப்பட்டார் லெப்டினன்ட் கென்னடி.

□□

பசுபிக் பிராந்தியம் சென்ற கென்னடியால் இங்காவை, இங்காவின் இளமையை மறக்க முடியவில்லை.

விருந்தொன்றுக்கு சென்றார் கென்னடி. அங்கே வந்தாள் அலிசியா.

அலிசியா போலாந்து நாட்டைச் சேர்ந்தவள். யூத இனத்தவள்.

துரு துருவென்று இருந்தாள். முதல் பார்வையிலேயே கென்னடிக்கு மோகத்தை கொடுத்தது.

கென்னடி இங்காவை மறந்தார். அலிசியா அந்த இடத்தைப் பிடித்துக் கொள்டாள்.

"அலிசியா! வர்ணத் தேவதையே! நீ இல்லாமல் எனக்கு சுவாசிக்கக் கூட முடியாது. சுத்தமாய் என்னை உனக்கேயாக்கினேன்."

காதல் கடிதங்கள் பரிமாறப்பட்டன.

தனிமையான சந்திப்புக்கள். அலிசியாவின் வனப்பான உடலில் கென்னடி ஆராய்ச்சியாளரானார்.

விசயம் ஜோசப் கென்னடியின் காதுகளுக்கு சென்றது.

"என் மகன் எதிர்காலத்தில் பெரிய ஆளாக வரவேண்டியவன். அலிசியா அவனுக்கு பொருத்தமாக மாட்டாள்."

ஜோசப் கென்னடி முடிவு செய்தார்.

கென்னடி-அலிசியா பிரிக்கப்பட்டனர். அலிசியா நேராக நீதிமன்றத்துக்குப் போனாள்.

"கென்னடி உன்னை விரும்பியதற்கும் உன்னை நெருங்கியதற்கும் ஆதாரம் உண்டா அலிசியா?" நீதிபதி கேட்டார்.

"உண்டு. தாராளமாய் உண்டு."

காதல் கடிதங்கள், கட்டியணைப்பு காட்சிகள் அடங்கிய புகைப்படங்கள் எல்லாம் அலிசியாவிடம் இருந்தது.

சங்கதி அறிந்த கென்னடியின் தந்தை ஜோசப் கென்னடி அலிசியாவைத் தேடி புறப்பட்டார். (தொடர்ந்து வரும்.)

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## கர்ப்பிணிகளுக்கு ஒரு முக்கிய தகவல்



உடல் உறுப்புக்களின் செயற்பாடுகளை துல்லியமாக பரிசோதிப்பதற்கு இன்றைய நவீன மருத்துவ உலகில் 'அல்ட்ரா சௌவுன்ட் ஸ்கெனின்' சாதன முறையே பெரிதும் விரும்பப்பட்டு வருகிறது.

ஒலியை செலுத்தி ஒளிவடிவமாக பதியவைத்து ஆராய்ந்து அறியும் இப்பரிசோதனை முறைக்கு ஏனைய நோயாளிகளை விட கர்ப்பினித் தாய்மார்களே அதிகளவில் மேற்கொண்டு வருவதாக கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

சமீபகாலத்தில் 2834 கர்ப்பினித் தாய்மார்களைக் கொண்டு மேற்கொண்ட பரிசோதனையின் போது அதிகமான தடவைகள் 'ஸ்கெனின்' பரிசோதனைக்கு உட்பட்டிருந்த கர்ப்பிணித் தாய்மார்களின் குழந்தைகள் வயிற்றினுள்ளேயே வளர்ச்சி குன்றிய நிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 'ஸ்கெனின்' பரிசோதனை அறவே கூடாதென்று கூறவில்லை. எனினும் அவற்றை அடிக்கடி மேற்கொள்வதுதான் கூடாதென்று பிரிட்டனின் தாய் சேய் நலம் பேணும் மருத்துவ துறையினர் கூறுகின்றனர்.

## மண்டையோடு ஆய்வியல்

ஒருவரது மண்டை ஓட்டை வைத்துக் கொண்டு அவர் இன்ன குணத்துடன் தான் வாழ்ந்திருப்பார், அவரது நடிவடிக்கைகள் இப்படியெல்லாம் இருந்திருக்கும் என்று சொல்லி விடலாம். இந்த ஆராய்ச்சிக்கு "மண்டையோடு ஆய்வியல்" என்று பெயர் ஆங்கிலத்தில் கூறுகின்றனர்.

இப்படியொரு முறை இருக்கிறது என்பது இன்றளவும்கூட நிறைய பேருக்கு தெரியாமல் இருக்கிறது. ஆனால் இந்த ஆராய்ச்சி முறை மிகவும் தொன்மையானது. 1800ம் ஆண்டு ஆஸ்திரியா நாட்டைச்சேர்ந்த டாக்டர் பிரான்ஸ் ஜோசப் இதை கண்டு பிடித்தார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இது உலகம் முழுக்க பரவி இன்று அது பல்வேறு ஆராய்ச்சிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் உதவியாக இருந்து



கொண்டிருக்கிறது.

மண்டையோட்டு எலும்புகளின் அமைப்பை வைத்து அவர் குணத்தை கண்டு பிடித்து விடலாமாம் இன்னொரு சிறப்பு என்னவெனில் மண்டையோடு மூலம்..... அந்த மண்டையோட்டுக்குரியவர் பாடகராக இல்லை... திருடரா என்று சொல்லி விடலாமாம். மண்டையோடு பெரிதாக 'டூம்' போல இருந்தால் அவர் படு புத்திசாலியாக இருந்திருப்பாராம். சின்ன மண்டையோடாக இருந்தால் அவர் மக்காக இருந்திருப்பாராம்.

இந்த ஆராய்ச்சி முறையை அறிவியல் விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ள மறுத்து வருகின்றார்கள். மண்டையோடு என்பது அவரவர் பாரம்பரியவளர்ச்சியே தவிர அதற்கும் குணத்திற்கும் சம்பந்தமே இல்லை என்கிறார்கள். அதற்கு இன்னமும் முடிவு வந்த பாடில்லை.

## இரத்தத்தை சுத்தம் செய்யும் மண்ணீரல்

நம் உடல் உறுப்புகளில் கொஞ்சம் மென்மையானது மிருதுவானது மண்ணீரல் தான். இது ஒவ்வொரு உடம்பிலும் வயிற்றின் இடது பக்கத்தில் அமைந்திருக்கிறது.

ரத்தத்தை சுத்தம் செய்யும் நம் உடல் உறுப்புகளில் இது தான் முதன்மையானது. முக்கியமானதும் கூட. இரத்தத்தில் கலந்திருக்கும் பாக்டீரியாக்களை அகற்றும் உன்னதமான பணியை இது செய்கிறது. அது மட்டுமல்ல, பழுதடைந்த செல்களையும் கூட அகற்றிவிட்டு இது புதியவற்றை உண்டாக்கிவிடுகிறது. சராசரி 200 கிராம் எடையுடன் இருக்கும் மண்ணீரல்கள் நாம் சுகவீனம் அடைந்தால் 2 கிலோ எடையாக அதிகரித்துவிடும். அந்த சமயத்தில் வயிற்றில் அடிபட்டால் மண்ணீரல் பாதிக்கப்படும்.

அந்த சமயத்தில் டாக்டர்கள் அறுவை சிகிச்சை செய்து மண்ணீரலை அகற்றி



விடுவதுண்டு. இதனால் மண்ணீரல் செய்யும் ரத்தத்தை தூய்மையாக்கும் பணியை இதர சுரப்பிகள் கவனித்துக்கொள்ளும். என்றாலும், இளைஞர்களுக்கு மண்ணீரலை அகற்றினால் பாக்டீரியாக்கள் மூலம் எளிதில் நோய் பரவிவிடும்.

எனவே மண்ணீரலை கவனித்துக் கொள்ளும் விஷயத்தில் மிக கவனம் வேண்டும்.

## சந்தனம்

சந்தனம் வாசனைக்கு மட்டுமல்ல அதில் பல மருத்துவ குணங்களும் உள்ளது. நமைச்சல், சொறிசிரங்கு, அக்கி, படர்தாமரை, வீக்கம் இவற்றின் மேல் சந்தனக் கட்டையை எலுமிச்சம் சாறு விட்டு அரைத்து பூசினால் விரைவில் குணம் கிடைக்கும்.

தலைவலி குணமாகவேண்டுமா?. சந்தனக் கட்டையை தேன் விட்டு அரைத்து நெற்றியில் பற்று போட்டால் போதும். சில நிமிடங்களில் தலைவலி பறந்து விடும்.

முகத்தில் பருக்கள் அதிகமாக இருப்பவர்கள் சந்தன கட்டையை அரைத்து பன்னீரில் கலந்து இரவில் முகத்தில் பூசி வர பருக்கள் மறையும். முகம் பளபளப்பாக மாறிவிடும்.

# தகவல் பெட்டி

## கலக்குது பார் இந்த ரயிலு

பங்களா தேஷ் தலைநகரான டாக்காவில் இருந்து புறப்பட்ட ரயில்தான் இது. பயணிகள் மொய்த்திருக்கிறார்கள். டாக்காவில் நடந்த விழாவொன்றுக்கு பல் ஆயிரம் மக்கள் திரண்டு வந்தனர். திரும்பிச் செல்ல ரயில் நிலையம் வந்தவர்கள் எட்டாயிரம் பேர்? வண்டிக்குள் திணிக்கப்பட்டவர்கள் போக மீதியிருந்தோர் வண்டியில் தோரணங்களாக தொற்றிக் கொண்டனர். அந்த அரிய காட்சிதான் இது.





## சீண்டியதால் வந்த சினம்

இங்கிலாந்திலுள்ள ரொபேர்ட் பிரதர்ஸ் சர்க்கஸ் குழுவில் இந்த யானையும், குட்டி நாயாரும் உறுப்பினர்கள். ஆனால் இது சர்க்கஸ் காட்சியல்ல. ஓய்வு நேரத்தில் யானை மீது புரண்டு விளையாடியிருக்கிறார் குட்டி நாயார். கோபம் வந்த யானையார் தனது தும்பிக்கையால் மடக்கிப் பிடித்த போது கிளிக்...கிளிக்.

## வளமும் வறட்சியும்

வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வு என்பது 'தலை எழுத்து' என்று சிலர் சொல்லுவார்கள். அந்த தலையில் ஏற்றத் தாழ்வு என்றால் என்ன சொல்லுவதூ? சுத்தமாக முடியே இல்லாத வறட்சி இவர் தலையில். நளினமான முடி வளம் அவள் தலையில். சுவாரசியமான காட்சிதானே இது.



## வீட்டுக்கு காயம். ஆளுக்கு சேதமில்லை.




வெளிநாடுகள் பலவற்றில் நம்மூரில் மாதிரி, விமானங்களும் தாராளமாக வாடகைக்கு கிடைக்கும். பவுன் மார்க்கோ என்னும் மாணவனுக்கு விமானம் செலுத்த ஆசை வந்தது. விமானம் ஒன்றை வாடகைக்கு எடுத்துச் சென்று பழகிய போது திடீர் கோளாறு. மாணவன் அசரவேயில்லை. வீடொன்றின் மீது பத்திரமாக இறக்கிவிட்டார். வீட்டுக்கு மட்டும் காயம். மாணவன் நல்ல சுகம். அமெரிக்காவில் அலஸ்கா மாநிலத்தில் ருஸ்காலோசா என்னும் ஊரில் நடந்த சம்பவம் இது.

...டர்ந்து நடிப்பேன்!'

...றார் பிரபு.

...யாடு 19 படங்களில் இணைந்து ...இன்னும் நூறு படங்களில் ...' என்கிறார் பிரபு. ...ன்விகள் அதற்கு பிரபுவின்

...படத்தில் நடிக்கிறீர்களாமே? ...லாபாணி' என்ற மலையாளப் ...முதல் முறையாக நடிக்கும்

மீண்டும் குஷ்புவுடன் நடிப்பது பற்றி?

குஷ்புவுடன் ஏற்கெனவே பத்து படங்களில் நடித்துள்ளேன். அவர் நல்ல நடிகை. இடையில் ஆறு-ஏழு படங்களில் இருவரும் இணைந்து நடிக்கவில்லை. 'மறவன்' படத்திற்குப் பிறகு 'சின்ன வாத்தியார்' படத்தில் நடிக்கிறேன். தொடர்ந்து அவருடன் நடிப்பேன்.

இரண்டு ஹீரோக்கள் படத்தில் மீண்டும் நடிப்பீர்களா?

50 சதவீதம் கதையை ஒரு ஹீரோவுக்கு, மற்றொரு 50 சதவீதம் கதையை மற்றொரு ஹீரோவுக்கும் பிரித்து தயாரிக்க வேண்டும். அப்படியானால் நடிக்கலாம்.



பிரபு-ரஞ்சிதா
படம் சின்ன வாத்தியார்

...ரியா

# மினி சினி

- கே.விஸ்வநாத் இயக்கும் தெலுங்குப் படத்திலும், 'இந்தியன்' படத்திலும் நடித்து வரும் கமல், இவ்விரு படங்களும் முடிவடைந்த பின்னர் கே.பாலசந்தரின் படத்தில் நடிக்கவிருக்கிறார்.
- சத்தியராஜ் முதன்முறையாக இயக்கி நடிக்கும் 'வில்லாதி வில்லன்' படத்தில் வயதான பிராமணர், மந்திரி மணிவண்ணனின் அடியாள் பூவண்ணன், எடிசன் என மூன்று வித்தியாசமான வேடங்களில் நடித்துவருகிறார்.
- தமிழில் வாய்ப்புக்கள் இல்லாத கௌதமி தெலுங்கிலும், பானுப்பிரியா கன்னடத்திலும், சுகன்யா மலையாளத்திலும் சில படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளனர்.
- 'பசும்பொன்' படத்தை இயக்கி வரும் பாரதிராஜா, அடுத்து விஜயகாந்த் நடிக்க 'வாக்கப்பட்ட பொண்ணு' என்ற படத்தை இயக்கவுள்ளார். இதில் சௌந்தர்யா கதாநாயகியாக நடிக்கவிருக்கிறார்.
- 'கடல்புறா' படத்தை அடுத்து பாபுகணேஷ் கதை-திரைக்கதை எழுதி இயக்கி நடிக்கும் புதிய படம் 'நான் ஒரு இந்தியன்'. இந்தப் படத்தில் ஒன்பது வேடங்களில் நடிக்கிறார் வடிவேலு.
- தமிழில் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருக்கும் நெப்போலியன் தெலுங்கில் வில்லனாக ஹீரோவாக ஒரு படத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தில் நெப்போலியனுக்கு ஜோடியாக விஜயசாந்தி நடிக்கிறார்.
- பிரதாப் போத்தன் இயக்கி வரும் 'லக்கிமேன்' படம் முடியும் தறுவாயில் உள்ளது. இது முடிவடைந்ததும் இவர் கே.டி.குஞ்சுமோன் தயாரிக்கும் படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தை 8 கோடி ரூபா செலவில் தயாரிக்க குஞ்சுமோன் திட்டமிட்டுள்ளார்.
- 'ஆத்தா உன் கோயிலிலே' படத்தில் ஜோடியாக நடித்த ரவிராகுல்-வினோதினி இருவரும் 'சின்ன அக்கா' என்ற புதிய படத்தின் மூலம் மீண்டும் இணைந்து நடிக்கவிருக்கின்றனர்.
- பிரபு தேவா நடிக்கும் 'மிஸ்டர் ரோமியோ' படத்தில் சுரேந்திரபால் என்ற இந்தி நடிகர் வில்லனாக நடிக்கிறார். இவர் மகாபாரதம் தொலைக்காட்சித் தொடரில் துரோணாச்சாரியாராக நடித்தவர்.
- மோகன்லால்-பிரபு இணைந்து நடிக்கும் 'காலாபாணி' (மலையாளம்) படத்தில் கதாநாயகியாக இந்தி நடிகை தபு நடிக்கவுள்ளார். தமிழ்-மலையாளம்-இந்தி ஆகிய மொழிகளில் வெளியாகும் இப்படம் சுதந்திரப் போராட்ட காலத்தில் நடைபெறும் கதையாகும்.



ராம்கி-ரஞ்சிதா
படம் தொட்டில் குழந்தை
(வெளிவந்துவிட்டது)

## கிசு-கிசு-நியூஸ்

### நடிகைகள் மோதல்

...மிழில் ஹீரோக்கள் விரும்பும் நடிகை வினிதா. குறைந்த சம்பளம், சகல ஹீரோக்களுடனும் சமமான நட்பு என்று பல சமாச்சாரங்கள் காரணமாக வினிதா விரும்பப்படுகிறார்.

...த்தில் ஒரு படப்பிடிப்பில் வினிதாவுக்கும் ரஞ்சித நடிகைக்கும் இடையில் ...ந்த வாய்ச் சண்டையாம். தனக்கு வரவிருந்த வாய்ப்புக்கள் சிலவற்றை ...ரிப்பாளர்களை மடக்கி வினிதா பறித்து விட்டதால் ரஞ்சித நடிகைக்கு கோபமாம்.

### சொந்தப் படம்

...நடிகை சொந்தப்படம் தயாரிக்கும் ஆசையில் இருக்கிறார். முன்னணி ஹீரோக்கள் சிலரை அணுகியிருக்கிறாராம்.

தமிழிலும் தெலுங்கிலும் மார்க்கெட் நல்ல நிலையில் இருப்பதால் ...போதே தூற்றிக்கொள்ள நினைக்கிறார். மீன் நடிகைக்காக உதவி ...ய பைனான்சியர்கள் சிலர் ஒற்றைக்காலில் நிற்கிறார்களாம்.

### மீண்டும் தெலுங்கில் மன்னன்

...ட்களை தயாரித்து ரஜினி காந்த்-விஜயசாந்தி நடித்த படம் மன்னன். தெலுங்கு பட ...கதையைத்தான் தமிழில் தயாரித்திருந்தார்கள். இப்போது 'மன்னன்' படத்தை ...' என்ற பெயரில் தெலுங்கில் மொழி மாற்றம் செய்து வெளியிட்டுள்ளனர்.

### டெலிபோனில் அறுவை ஜோக்

நடிகர்-நடிகைகளோடு டெலிபோனில் பேசும் ரசிகர்கள்-ரசிகைகள் அறுவை ஜோக் சொல்லி வெறுத்து வாங்கி விடுகிறார்களாம்.

கஸ்தூரி இப்போது ஓய்வாக வீட்டில் இருப்பதால் ஆண் ரசிகர்களது அறுவை ஜோக்களை ரசித்து கேட்கிறாராம். கஸ்தூரியும் தனது பங்குக்கு 'அறுவை ஜோக்குகளை' அள்ளி விடுவதுண்டாம்.

### அர்ஜுனுக்கு மவுசு

அர்ஜுன் நடிக்கும் தமிழ் படங்கள் தெலுங்கில் மொழிமாற்றப் படுகின்றன. தெலுங்கில் மொழி மாற்றும் உரிமைக்கு 10 இலட்சம் முன்னர் பெறப்பட்டது.

'ஜெய்ஹிந்த்' 'ஜென்டில்மேன்' படங்கள் தெலுங்கிலும் வெற்றிவாகை சூடியதால் அர்ஜுனின் மவுசு உயர்ந்து விட்டது. புதிய படமான கர்ணாவின் தெலுங்கு உரிமை 80 இலட்சமாக போகிருக்கிறது.

## வியக்கவைக்கும் விஜயசாந்தி.

விஜயசாந்தி நடிக்கும் தெலுங்குப் படங்களை வேறு மொழிகள் மாற்றப்படும் உரிமைக்கு எழுபது இலட்சம் கொடுக்க வேண்டும். ஆனால் சிரஞ்சீவி போன்ற நடிகர்களின் படங்களுக்கு அதிக பட்சம் இருபத்தைந்து இலட்சம் கொடுத்தால் போதும்.

தெலுங்கில் அதிக செலவில் தயாரிக்கப்படுவது விஜயசாந்தி படங்கள்தான். பட்ஜெட் 4 கோடி முதல் 5 கோடி வரை. ஆனால், தெலுங்கில் பிரபல ஹீரோக்கள் நடிக்கும் படங்களில் பட்ஜெட் மூன்று கோடியைத் தாண்டுவதில்லை.

தெலுங்கு படவுலகமும் ரசிகர்களும் விஜயசாந்தியை கதாநாயகியாக நினைப்பதில்லை. அவர்களது பார்வையில் விஜயசாந்தி கதாநாயகர்கள் பட்டியலில்தான் இருக்கிறார். அதுவும் முதலிடத்தில்.

விஜயசாந்தியின் படங்களுக்கு பெண்களின் வரவேற்பு அதிகம்.

சுந்தரத் தெலுங்குப் பெண்கள் கூட்டம் விஜயசாந்தியின் படங்கள் ஓடும் தியேட்டர்கள் முன் அலை மோதும். ரசிகர்களின் நாடித் துடிப்பை அறிந்து கவர்ச்சி கலந்து அடிதடிப் படங்களில் நடித்து வருகிறார்.

ஒரு கோடி ரூபாய் சம்பளம் வாங்கும் நடிகை என்று பந்தா கிடையாது.



முகப்பில்
யுவராணி-விக்னேஷ்
படம் செல்லக்கண்ணு
ரஞ்சிதா



அருண்பாண்டியன்-ஷோபனா
படம் துறைமுகம்

# அழகுபடுத்திக் கொள்ள அறிந்து கொள்ளுங்கள்

## லேடீஸ் ஸ்பெசல்

நீங்களும் தைக்கலாம்

## பவுண்டேஷன்



எண்ணெய் பசையுள்ள முகம் உடையவர்களுக்கு பவுண்டேஷன் தேவையில்லை. மற்றவர்கள் தங்கள் தோலின் நிறத்திற்கேற்ப பவுண்டேஷன் தேர்ந்தெடுத்து வாங்க வேண்டும். பகல் வேளையில்தான் வாங்கவேண்டும். பவுண்டேஷன் முகத்தில் பூசுவதற்கு ஈரப் பசையுள்ள 'ஸ்பொஞ்சைப்' பயன்படுத்தவும். இளம் பெண்கள் திரவ வடிவிலான பவுண்டேஷனை பாவிக்கவும்.

நீர்த் தன்மையுடைய பவுண்டேஷனையோ எண்ணெய் கலந்த பவுண்டேஷனையோ உப யோகிக்கலாம். இரண்டையும் இனம் பிரிப்பது கஷ்டம். துளி பவுண்டேஷனை எடுத்து நீர் நிறைந்த பாத்திரத்தில் விடவேண்டும். கரைந்தால் நீர்த் தன்மையுள்ள பவுண்டேஷன் எனவும் கரையாமல் இருந்தால் எண்ணெய் தன்மையுடையது எனவும் அறியலாம்.

### எப்படி போட வேண்டும்?

பவுண்டேஷன் கிறீமை முகத்தில் விரலால் பல இடங்களில் புள்ளிபோல வைக்கவும். மூக்கு, கன்னம், முகவாய், நெற்றி என்று எல்லா இடங்களிலும் கிறீமை தேய்க்கவேண்டும். விரல் நுனியாலோ, ஜலிசடோ பிரசாலோ மெதுவாக தேய்க்கவும். பவுண்டேஷன் போட்ட பிறகு முகப் பவுடரைப் போட்டுக்கொள்ளவும். ஒரே சீராக வரும்வரை பவுடரைப் பூசி

## கவர்ச்சிகரமான கண்களுக்கு



விட்டால் முகத்தை தொடும்போது பட்டுப் போல் மென்மையாக இருக்கும்.

முகத்தின் அழகுக்கு முக்கிய காரணமாக விளங்குவது கண்கள். கண் இமை ஓரங்களில் இருந்து நுனி வரை மஸ்காரா வினால் சீராக கோடு இழுக்கவும்.

இமை நுனிகளில் மஸ்காராவை இருமுறை தடவி ஆழ்ந்த வர்ணம் கொடுங்கள். இமை முடிகள் பிரவுண் நிறத்திலிருந்தால் மஸ்காராவும் அதே நிறத்தில் தேர்ந்தெடுக்கவும். பெரியதாகக் கண்கள் தோற்றமளிக்க வாஷ்கோம்பு எனப்படும் பிரஷ்ஷைக் கொண்டு இமை

## அழகிய உதடுகளுக்கு



முடிகளை நீவி விடுங்கள்.

முகத்தின் அழகை அதிகரிக்கும் உதடுகளுக் கேற்ற உதட்டுச் சாயத்தைத் தேர்ந்தெடுப்பது தான் அழகான உதடுகளைப் பெறும் சுலபமான வழி. உதட்டுச் சாயத்தை பூச துவங்குமுன் உதடுகளை இறுக மூடிக்கொள்ளவேண்டும். பின் உங்கள் உதடு களின் இயல்பான வடிவத்தினை கோடாக வரைந்து கொள்ளவும். பின்பு உதடுகளைப் பிரித்து வரைந்த அவுட் லைனுக்குள் பிசிறில்லாமல் ஆழ்ந்த வர்ணத்தைச் சீராக தடவவும். ற்றிசு பேப்பரால் மெதுவாக ஒற்றி மிகுதியை எடுக்கலாம்.

## ஹேர் கண்டிஷனர்

முட்டை- 01, விளக்கெண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன், வினிகர்- 1 டி ஸ்பூன், கிளிசரின் - 1 டி ஸ்பூன்.

முட்டையை நன்கு அடித்து அத்துடன் விளக்கெண்ணைய், வினிகர், கிளிசரின் மூன்றையும் கலந்து தலைமுடியில் அடிப்பாகம் வரை அழுத்தித் தேய்க்க வேண்டும். பிறகு தலைமுடியில் படும்படி ஆவி பிடியுங்கள். பின்பு தலையை முறையாக ஷாம்பு போட்டுச் சுத்தம் செய்யவும்.

## கோல்ட் கிரீம்

சென்ட் சில துளிகள், தோல்சீவிய துண்டுகளாக்கிய வெள்ளரிக்காய் சிறியது ஒன்று ஒரு பாத்திரத்தில் சுத்தமான மெழுகையும், சிறிது பாதாம் எண்ணெய்யையும் கலந்து இளம் சூட்டில் வைத்துக் கிளறுங்கள். பிறகு வெள்ளரிக்காய் துண்டுகளை அதில் போட்டு சுமார் ஒரு மணி நேரத்திற்கு குறையாமல் வேகவைக்கவும். வெந்து கூழான பிறகு அக்கலவையை அடுப்பிலிருந்து இறக்கி வைக்கவும். பிறகு ஆற விட்டு பாவிக்கவும்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### பீட்ரூட் சூப்

**தேவையான பொருட்கள்:**

பீட்ரூட் - 1/4 கிலோ
தக்காளி - 3
பெரிய வெங்காயம் - 1
வெண்ணெய் - 50 கிராம்
மிளகுத்தூள் - தேவையான அளவு
மசாலா தூள் - 1/4 தேக்கரண்டி
உப்புத் தூள் - தேவையான அளவு
கோதுமை மாவு - 2 தேக்கரண்டி

**செய்முறை:**

பீட்ரூட்டை தோல் சீவி, பொடிப் பொடியாக கரட் துருவியால் துருவிக் கொள்ளவும். தக்காளி, வெங்காயம் ஆகியவற்றைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். குக்கரில் 3 கப் தண்ணீர் வைத்து, நறுக்கிய வெங்காயம், தக்காளி மற்றும் பீட்ரூட் போன்றவைகளைப் போட்டு அத்துடன் மிளகுத்தூள், உப்பு, மசாலாத்தூள், வெண்ணெய் சேர்த்து வேக விடவும். வெந்ததும் மசித்து வடிகட்டிக் கொள்ளவும். அத்துடன் கோதுமை மாவை அரை டம்ளர் தண்ணீரில் கரைத்து வடிகட்டிய பீட்ரூட் சாற்றுடன் ஊற்றிக் கொதிக்கவிடவும்.

நெய்யில் வறுத்த பாண்துண்டுகளை சூடான சூப்பில் போட்டுப் பரிமாற சுவையாக இருக்கும்.

## குழந்தைகளை வளர்ப்பது எப்படி?

குழந்தைகளை நாட்டுப் பற்றுள்ளவர்களாக வளர்க்கவேண்டும். பெற்றோர்கள் ஆசிரியர்களாக மாறி நல்லவற்றைச் சொல்லிக் கொடுக்கவேண்டும். குழந்தைகளே நாட்டின் செல்வங்கள். குழந்தைகளுக்கு அதிக செல்லம் கொடுத்து வளர்க்கக் கூடாது.

பெற்றோர்கள் தங்கள் கவனிப்பிலேயே தங்கள் குழந்தைகளை வளர்க்க வேண்டும். தங்கள் பிள்ளைகள் எப்படிப் படிக்கிறார்கள் என்று ஆசிரியரிடம் அடிக்கடி கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

நல்லதைத்தான் செய்கிறார்கள் என்று தங்கள் மேல் நம்பிக்கை விழும்படி பெற்றோர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

கதை கேட்கும் ஆர்வத்தை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு எதிரில் தம் குழந்தைகளை இகழ்ந்து பேசக்கூடாது. படிக்கும் ஆர்வத்தை இளம்வயதிலேயே ஏற்படுத்தவேண்டும்.

குழந்தைகளை, நிறைய அனுபவங்கள் கிடைப்பதற்கான சூழ்நிலைகள் உருவாக்க வேண்டும்.

குழந்தைகள் முன்னேற எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். பணத்தை நல்ல முறையில் கையாளும் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். குழந்தைகள் கொண்டிருக்கும் நல்ல ஆசைகளை தூண்டி வளர்க்க வேண்டும். நல்ல உணர்ச்சிகளை வளர்க்கும் புத்தகங்களைப் படிக்கத் தூண்டவேண்டும். நல்ல நண்பர்களுடன் தான் பழக விடவேண்டும்.

## அலுவலகம் செல்லும் பெண்களுக்கு!

தேவைக்கு அதிகமான பணத்தை ஹான்ட் பாக்கில் எடுத்துக்கொள்ளாதீர்கள். அப்படித் தேவைப்பட்டாலோ அல்லது சம்பளப் பணத்தை வீட்டுக்குக் கொண்டு செல்லும்போதோ உங்களுடைய லஞ்ச் பொக்சில் (மாலை நேரங்களில் காலியாகத் தானே இருக்கும்) வைத்துக் கொண்டு செல்லுங்கள். இப்பொழுதெல்லாம் பெண்களிலும் பிட்பொக்கட்காரர்கள் உண்டு தெரியுமா? பெண்களே உஷார்.

## ருக்கா நாதன்

**முன்பக்க அளவு:**
மார்பளவு= 11+11 அங்குலம்
நீளம் = 21 அங்குலம்
**பின்பக்க அளவு**
முதுகு அளவு= 9+9 அங்குலம்
நீளம்= 21 அங்குலம்
**பாவாடையின் அளவுகள்:**
நீளம் =27 அங்குலம்
இடுப்பு அகலம்= 30 அங்குலம்

**வெட்டும் முறைகள்:**

முன்பக்க அளவிற்கென குறிப்பிட்டுள்ள 11+11 அங்குல அகலமும் 21 அங்குல நீளமுமான ஒரு சதுர துணியினை எடுத்து சமனாக மடித்து A,B,C,D அடையாளமிட்டுக் கொண்டு படம் 1இனை கவனத்திற் கொள்ளவும். A யிலிருந்து 2 அங்குலம் உள் நோக்கி அளந்து E எனவும், E யிலிருந்து 5 1/4 அங்குலம் உள்நோக்கி அளந்து Gஎனவும் குறிக்குக. படத்தில் உள்ளபடி GBH பகுதி முன் பக்க கழுத்துப் பகுதியாகும். அப்பகுதியை 3 அங்குல பதிவில் வெட்டவும். பட்டின் வைக்கப்படவேண்டிய பகுதிக்கு குறுக்கு நேர் துணியில் பிறிதோர் இரு துணியினை எடுத்து அப்பகுதிக்கு பொருத்தவும்.



படத்தில் காட்டியபடி மார்பில் பொக்கட் வைப்பதற்கு 1 அங்குல நீளமும் 3 1/4 அங்குல அகலமும் கொண்ட துணியினை எடுத்து சரிவாக அமைக்கவும். படம் 1இன்படி KJ பகுதியை 3 அங்குலம் கத்தரிக்கவும். கத்தரித்த Kபகுதியில் இருந்து வெளிப்புறம் நோக்கி 5 1/2 அங்குலம் கத்தரித்து I எனக் குறிக்கவும். இவ்வாறு முதுகுப்பக்கத்திற்கு வெட்டிக்கொண்டு அவ்விடத்திற்கு அகலமான வர்ணங்களிலான லாஸ்ரிக் வைத்து தைக்கவும்.

இவ்வாறு வெட்டிய பின்னர் தோள்புறம் உயரமாக இருப்பதற்கு 8 அங்குல அகலமும் 5 அங்குல நீளமுமான 4 துணியினை வெட்டி எடுத்துக்கொள்ளவும். வெட்டிய அத்துணியுடன்

எஸ்.எஸ்

## 18 வயது மங்கையருக்கான பாவாடை பிளவுஸ்


ஸ்பொஞ்ச் இரண்டினை எடுத்து படம் 3 அமைப்புப்போல் வெட்டி தோளின் உட் பகுதியுடன் இணைக்கவும்.


**கைப்பகுதியினை வெட்டும் முறை:**


15 அங்குல அகலமும் 9 அங்குல நீளமுமான சதுர வடிவான இரு துணியினை எடுத்துக் கொள்ளவும். படம் 4 இனை கவனத்திற் கொண்டு அகலப் பகுதியை மடித்து வளைவாக வெட்டவும். இவ்வாறு வெட்டிய பகுதியினை சட்டையின் கைப்பகுதியுடன் இணைக்கவும். இணைத்த பின்னர் படம் 5ல் காட்டியவாறு 5 அங்குல நீளமும் 1 1/2 அங்குல அகலமும் கொண்ட 4 துணியினை வெட்டி எடுத்து தோள்மூட்டுப் பகுதியின் மேல் வைத்து பட்டின் கட்டவும். பிளவுஸ் முற்று முழுதாகிவிட்டது.


**பாவாடையினை வெட்டும் முறை:**


27 அங்குல நீளமான இரு துணிகளை (1 1/2 யார்) எடுத்து சமனாக மடிக்கவும். மடித்த அப்பகுதியில் ABCD எனக் குறித்து படம் 5இனை கவனிக்குக. Bயிலிருந்து உள்நோக்கி 7 1/2 அங்குலம் Eஎனக் குறிக்குக. கீழ்ப்பக்கம் மீண்டும் Cயிலிருந்து 7 1/2 அங்குலம் உள்நோக்கி அளந்து F எனக் குறிக்குக. EF பகுதியை குறுக்காக வெட்டவும். வெட்டியதும் 4 துண்டுகள் தோன்றும். அத்துண்டுகளை பொருத்திக்கொண்டால் பாவாடை அமைப்புத் தோன்றும்.











## வித்தியாச விருந்து

# பிரமுகர் வீட்டு செருப்புக்குக்கூட பேட்டியளிக்கும் தகுதிகள் உண்டு.

தமிழக புதுக்கவிதை வித்தகர் மு.மேத்தா. அவரது வித்தியாசமான புதுக்கவிதை ஒன்று. செருப்போடு பேட்டி என்ற வடிவில் வருகிறது. செருப்புக்கும் ஒரு மதிப்பு இருக்கிறதல்லவா. கவிதையை படித்துப் பாருங்கள். சுவைக்கும். 'கண்ணீர் பூக்கள்' கவிதைத் தொகுதியிலிருந்து இது எடுத்துத் தரப்படுகிறது.

### செருப்புடன் ஒரு பேட்டி

**உங்கள் இனத்தைப் பற்றி நீயே ஏதேனும் உரைக்க முடியுமா?**

*உழைப்பதற் காகவே விலைக்கு வாங்கப்படும்*
*அடிமைகள் நாங்கள்! மனிதரின்*
*பாதங்களுக்குப் பயண வாகனங்கள்.*

*கடை வீதிகள் காட்டிக் கொடுக்கக்*
*'காலணி' ஆதிக்கத்தால் கைதுசெய்யப்*
*படுகிறோம்.*

*உள்ளே ஒருவர்*
*இருக்கிறாரா இல்லையா என்று அறிவிக்கும்*
*பித்தளை போர்டுகள் பின்னால் வந்தவை.*
*நாங்களோ*
*வெகு காலமாக அந்த வேலையைச் செய்கிறோம்!*

*காலடியில் மிதிபட்டுக் காலமெல்லாம்*
*உழைத்தாலும்*
*வாசலில் மட்டுமே வாசம் புரிகிறோம்...*
*உழைப்பதற் காகவே விலைக்கு வாங்கப்படும்*
*அடிமைகள் நாங்கள்!*

**காலில் மிதிபடுவதாய்க் கண்ணீர்**
**விடுகிறீர்களே உங்களைக்**
**கைகளில் தூக்கி நாங்கள்**
**கௌரவிப்ப தில்லையா?**

*சில சமயங்களில்....*
*கைகளில் தூக்கி காப்பற்றி வைப்பது*
*மீண்டும் எங்களை மிதிப்பதற்காகவே!*

**போகட்டும்....**
**ஒப்பற்ற உழைப்புக்கு உங்களைத் தானே**
**உவமானம் சொல்கிறோம்.**

*உவமானங்களால் மட்டுமே எங்கள்*
*அவமானங்கள் அழிந்து விடுவதில்லை.*
*அதோடு*
*இழிவு படுத்தவும் எங்களைத் தானே*
*'எடுத்து'க் காட்டுகிறீர்கள்....*

**சரி....சரி..**
**குறைகளைப் பற்றி உங்கள் இனத்தவர்**
**கூடிப் பேசிடலாமே...!**

*எவ்வித முன்னறிவிப்புமின்றி*
*எங்கள் கூட்டங்களைக்கூட நீங்களே*
*ஏற்பாடு செய்துவிட்டு*
*தீர்மானம் நிறைவேற்றும் முன்*
*திடீரென்று கலைத்துவிடுகிறீர்களே!*

**நீங்கள் கூட்டம் கூடும்போது**
**பார்வையாளர்கள் பங்கு கொள்வதுண்டா?**

*கோவில் வாசலில்.....வைபவ நெரிசலில்...*
*நாங்கள் கூட்டம் கூடும்போது*
*எங்களில் கன்னிமை கழியாத புதியவர்களை*
*சில கொள்ளைக்காரர்கள்*
*நோட்டம் போடுகிறார்கள்.*

**தனியாக உங்களுக்கென்று**
**தத்துவப் பார்வை உண்டா?**

*உண்டு.*
*சருகை மிதித்தால் சப்திக்கும் நாங்கள்*
*மலரை மிதிக்கும்போது மௌனம் சாதிக்கிறோம்.*

**வாங்கிய புதிதில் காலைக் கடிக்கும்**
**வழக்கம் எதற்காக?**

*எங்களுக்கும் ரோஷம்*
*இருக்கிற தென்பதைக் காட்டிக் கொள்ளவே*
*ஆரம்பத்தில் கொஞ்சம் கடித்துப் பார்க்கிறோம்*
*தொடர்ந்து போராடும் 'தோல்' வலிமையற்றதால்*
*பாதம் படப் படப் பணிந்து விடுகிறோம்!*

**திடீரென அறுந்து போய் நடுவீதியில்**
**எங்களைத் திண்டாட வைப்பது ஏன்?**

*நாங்கள்*
*ஒத்துழையாமை இயக்கம் தொடங்கும் போதுதான்*
*தெருவோரத் தொழிலாளியின்*
*வயிற்றுப் பாட்டுக்கு வழி பிறக்கிறது!*

**பழசாகிப் போனதெனும் காரணம் காட்டி**
**உங்களை நாங்கள் ஒதுக்கிவிடும் போது....?**

*உங்களால் ஒதுக்கப்பட்டவர்*
*எங்களை*
*உபயோகித்துக் கொள்வர்!*

**இனிய நினைவுகள் வாழ்வில் ஏதேனும்**

*நாணத்தில் கவிழும் தாமரைக் கண்கள்*
*உங்களைச் சந்திக்கும் முன்பாக*
*எங்களைத்தான் சந்திக்கின்றன!*

**தீவிரமாக எதைப்பற்றியாவது நீங்கள்**
**சிந்திப்பதுண்டா?**

*உண்டு.*
*சில தேசங்களையும்*
*சில ஆட்சிகளையும்*
*பார்க்கும்போது*
*மீண்டும் நாங்களே*
*சிம்மாசனம்*
*ஏறிவிடலாமா*
*என்று*
*யோசிப்பதுண்டு!*


பரிசுக் கூப்பன்
மகளிர் மட்டும்
இல 7

மகளிர் மட்டும்
—பரிசுப் போட்டி—

முதல் அதிஷ்டசாலிக்கு
தங்கநகை


- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.



# தேன் கிண்ணம்





## ஆழம்

நீ ஒரு
சின்ன நிலா
என்
வாழ்க்கை
வானத்தை
தொடாமல்
எங்கோ
ஒரு வெளியில்
தொலைத்துபோன
கருப்புநிலா!

•

என்
கரங்களின் சிறைக்குள்
வைத்து
கவிபாட
நினைத்திருந்தேன்
நீயோ
அந்திமக்கால
சூரியவர்ணம்போல்
கைகளில்
அகப்படாமல்
கண்சிமிட்டிச்சிமிட்டி
வழுக்கிக் கொண்டே
போகிறாய்.

•

கண்மணி
நான்
முக்காலத்திலும்
தூரிகை
இல்லாத
ஓவியனாகவா
இருக்கவிரும்புகிறாய்.
அருகில்வா
இன்னுமொரு
புன்னகை மொனாலிசாவை
உலகுக்கு
அறிமுகப்படுத்தி
காட்டுகிறேன்.

•

நீ...
ஒற்றை ரோஜாவில்
சிறகடிக்கும்
பட்டர்பிளையா
அல்லது
வாலில் நூல்கட்டப்படாத
செந்தூரத்தும்பியா
என்ன வென்றாலும்
எனக்கு
ஏராளமான ஆசைதான்
உனை
தோளில் சுமந்து!
என்
இதயச்சிறகுக்குள்
பட்டம்விட...

•

என்
பஞ்சுக்கனவுகளுக்கு
தீயினை ஊற்றி
பற்றவைத்து
பரவசிக்கவா பார்க்கிறாய்
பரவாயில்லை.
நீ
சொன்னால்
நான்
சாம்பலாகவும் தயார்
ஏனெனில்
உன்
கண்ணீர்க்கங்கையில் நான்
கரைந்து போவேனே!

•

இன்னுமா புரியவில்லை
இந்தக்காதலின்
ஆழத்தின் ரகசியம்
புரிந்தால்
புறப்படு.
எனைத்தூக்கி
எறிந்தால்
கனவுகள் தூங்கும்
என் கல்லறையில் நின்று
உருப்படு.

**கிண்ணியா-சபருள்ளா.**

## பூக்கள்

தென்றல
முகந்துடைக்கும்
துவாய்கள்!

□□

பனித்துளிகள்
படுத்துறங்கும்
பஞ்சணைகள்!

□□

நந்தவனத்தில்
நர்த்தனமிடும்
தேவதைகள்!

□□

வண்டுகள்
தேனீக்களின
அமுத சுரபிகள்!

□□

இறைவனுக்கும்
மனிதர்களுக்குமிடையே....
பூஜையறை
தூதர்கள்!

□□

காற்று(க்)
கைகுலுக்கும்
புனித ஸ்நேகதர்கள்!

□□

காதலர்கள்
பரிமாறும்
மென்மை இதயங்கள்!

□□

யாரோ...
ஒரு அழகியின்
உதடுகளென்ற...
புன்னகைகள்!

□□

காதலரின்
ஊடலை
கூடலாக்கும
காம பாணங்கள்!

□□

கன்னியரின்
கூந்தலென்ற...
இருள் வானத்தில
மின்னும்
நட்சத்திரங்கள்!

□□

இவை(த்)
தனிக்குடும்பமென்றால்...
பூ!
கூட்டுக்குடும்பமென்றால்
பூ மாலை!

□□

இதனை(க்)
காதலி முத்தமிட்டாள்...
காதல்?
அவள்
தூக்கியெறிந்தால்...
சாதல்!

□□

மணமேடைக்கும
பொதுவான..
சாட்சிகள்!

□□

கடவுளின்
ஆனந்த கண்ணீர(த்)
துளிகள்!

□□

வீட்டு முற்றத்தில
அழகு காட்டும்
தாவணிப் பெண்கள்!

**சோ. ஸ்ரீதரன்-பொகவந்தலாவ.**



## பகலின் நிலா!

நிலவை பிசைந்து
சமைத்திருக்க வேண்டும்
உன் முகத்தை.
அவ்வளவு
அழகாய் இருந்தது
அது..!

•

சா....!
என்ன மாதிரி
சிரித்தாய்
அந்த 'தலை கெழிப்பி'ல்,
'கிளின்ரன்' கூட
உன்னிடம்
சரணடைந்து விடுவார்.

•

உன்
உதடு துவட்டும்
ஈர நாவுக்கு
என் பெயரைக் கூட
இனிப்பாக்க முடிந்தது.

•

எனக்குப் புரியவில்லை
நட்ஷத்திரத்தை
பெயர்த்து,
உன் மூக்கின் மேல்
ஒட்டியது யாரென்று
புரியவில்லை.

•

இப்போது
உன்னை
நினைத்து விட்டு
எச்சிலைக் கூட
துப்பமுடியவில்லயே கண்மணி-
எவ்வளவு
இனிப்பாய் இருக்கிறது
உன் நினைவு.

•

உன்னை
பார்க்காத நாட்களில்
பகலில் கூட
நான்
இருட்டாய் இருக்கிறேன்.

•

உனக்கு
இதயம்
இருக்குமோ இல்லையோ
ஆனால்--
பலரின் இதயத்தை,
நீ
சும்மாவே திருடிக்கொள்கிறாய்.

**ஒட்டமாவடி-அறபாத்.**

## நேசம்

மலர்களை
நேசிக்கிறேன்
அவள் கூந்தல்
உறவாடுவதால்...!

••

விண்மீன்களை
நேசிக்கிறேன்
அவள் விழிகள்
மொழி பேசுவதால்..!

••

ஜன்னலை
நேசிக்கிறேன்
அவள் மின்னல் முகம்
தோன்றி மறைவதால்....!

••

புல் படுக்கையை
நேசிக்கிறேன்
அவள் பாதங்கள்
பதொட்டுப் போவதால்..!

••

முகில்களை
நேசிக்கிறேன்
அவள் முந்தானை
பட்டம் விடுவதால்....!

••

ஆவணியை
நேசிக்கிறேன்
அவள் தாவணி
பறப்பதால்...!

••

பனித்துளியை
நேசிக்கிறேன்
அவள் மூக்குநுனி
வேர்ப்பதால்...

••

கவிதையை
நேசிக்கிறேன்
அவள் காதலை
பிரசவிப்பதால்...!

**ஷஹிர்ஷா தாஸிம்**
**தர்கா நகர்.**



## அவள் ஒரு...!

அவள் ஒரு
அகால விபத்து!
ஏன்?
எழுமாற்றாய்
எனக்குள்
எய்தப்பட்டவள்!

□

அவள் ஒரு
அதிகாலை கனவு
என் இதயத்தில்
இடம் சதுக்கி-எனை
முடம் ஆக்கி,
இடம்பெயர்ந்தவள்!

□

அவள் ஒரு
அகோர நிலவு! என்னை
கூர்ய விழிகளால் வீழ்த்தி!
இப்போ..
சூர்யமுழிகளால்
சுட்டெரிப்பவள்!

□

அவள் ஒரு
அதீத திஷ்டாந்தம்!
கஷ்டமில்லாமல்
கவிதைதந்து-மீண்டும்
இஷ்டமில்லாமல்
கற்பனைகளைத்-
திருடிச்சென்றவ்ள்!

□

முடிவில்
அவள் ஒரு
எரிவெள்ளியும்...!
முடிவிலியில்...
நான் ஒரு,...
எரிகல்லுமாய்....!
அந்தரமாய் அலைகிறேன்...!

**எஸ்-முஸ்தாக் சுருநாகல்.**
**பாணகமுவ.**

## புதிய சித்தம்

நானும்தான்
பார்க்கிறேன்-
ஆயிரம் மாற்றங்கள்
செய்யும
இந்த அரசுகள்
ஆயுதத்தை மட்டும
அப்படியே
வைத்திருக்க
ஆசை படுவ தேனோ?

கேளுங்கள்
மனிதர்களே
கேளுங்கள்!

ஆயுதத்தின்
உயிர் எப்போது
அறுந்துபோகும்!

ஆயுதத்தின் மயிர் எப்போது
உதிர்ந்து போகும்!

யுத்தம் இல்லாமல்,
சத்தம் இல்லாமல,
ரத்தம் இல்லாமல்
இந்த மண்ணுக்கு
புதிய சித்தம்
என்று வரும்!

**பொகவந்தலாவ-மா. மேஹந்திரன்.**


## சுகபோகம் எமக்குத்தான்!

ஊரை ஏய்த்து 'உவர்மலை' தனிவோர்
உயர்நிலம் வாங்கிடவா? – உன்
பேரைச் சொல்லக் கிளியே உனக்கோர்,
பெருமனை கட்டிடவா?
காரை வாங்கிக் கதிர்கா மத்துக்
கந்தனைக் காட்டிடவா? – என்
ஊரை விற்றும் உன் கழுத்தினிலோர்,
உயர்கொடி கட்டிடவா?

பணத்தைக் கண்டால் வாயைத் திறக்கும்
பிணந்தான் அறிவாயா? – நாம்
பணத்தைச் சேர்ப்போம் பாரே எங்கள்
பக்கம் உணர்வாயா?
கணக்கு வழக்கில் கவனம் வேண்டும்
கண்ணே அறிவாய் நீ! – எமைப்
'பிணக்கில் மாட்டி விடவும் முயல்வார்'
பெண்ணே புரிவாய் நீ!

சித்தம் தெளிந்து சொல்வேன் நாளும்
செயலில் வித்தகிநீ! – தொடர்
எத்தனை பிறவி பெற்றால் ஏனும்
எந்தன் சொத்தடிநீ
கத்தி ஓசை எழுப்பும் அந்தக்-
கடல்வாழ் முத்தேகேள்! – இங்கு,
புத்தி இல்லார் வாழும்வரை'சுக
போகம் எமக்குத்தான்!'

**அ. கௌரிதாசன்-ஆலங்கேணி கிழக்கு.**






## இந்த வாரம் உங்கள் பலன்

(02.04.95 முதல் 08.04.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், புதன் |
| மேடம் | - கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - வெள்ளி, சனி |

★ சந்திரன்-மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நட்டம், வீண் தொல்லை. | பகல் 12 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, உயர்ந்தநிலை. | பி.ப. 1 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | காலை 9 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- | முயற்சி பலிதம், அந்நியர் உதவி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | தொழிலில் பிரச்சினை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | வீண் குறை கேட்டல், அந்நியரால் தொல்லை. | காலை 7 மணி |
| புதன்- | முயற்சி தடை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், உள்சுமை. | காலை 7 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- | காரியசித்தி, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, முயற்சி தடை. | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| புதன்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| வெள்ளி- | தனலாபம், காரியசித்தி. | பகல் 12 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, செல்வாக்கு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | கடன் சுமை, வெளியிட வாழ்க்கை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனத் தைரியம். | பகல் 12 மணி |
| புதன்- | உயர்ந்தநிலை, செல்வாக்கு மேன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | உறவினர் கலகம், மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |
| சனி- | வீண் சந்தேகம், செல்வாக்கு குறைவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, செல்வாக்கு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், உயர்ந்தநிலை. | பகல் 12 மணி |
| சனி- | அந்நியரால் தொல்லை, பொருள் இழப்பு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயில்யம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, செல்வாக்கு மேன்மை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, வீண் அலைச்சல். | காலை 9 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | தொழில் மந்தம், பூமியால் இலாபம். | காலை 7 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | முயற்சி பலிதம், பொருள் வரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், உறவினர் உபத்திரம். | காலை 7 மணி |
| புதன்- | புதிய முயற்சி, செல்வாக்கு மேன்மை. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | தொழில் விருத்தி, தெய்வானுகூலம். | காலை 9 மணி |
| வெள்ளி- | முயற்சி பலிதம், பணவரவு. | காலை 6 மணி |
| சனி- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, கௌரவநிலை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | தொழில் மந்தம், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| புதன்- | வீண் சந்தேகம், மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, உயர்ந்தநிலை. | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண் குறைகேட்டல், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| சனி- | துயர் அதிகம், செலவு மிகுதி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் குறை கேட்டல், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- | உறவினர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- | வீண் சந்தேகம், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, உயர்ந்தநிலை. | காலை 7 மணி |
| சனி- | முயற்சிகளில் வெற்றி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நட்டம், முயற்சிதடை. | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் அலைச்சல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உறவினர் இழப்பு, மனக் கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- | துன்பநிலை, பொருள் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, பயனற்ற செயல். | காலை 8 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், குடும்பப் பகை. | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக் கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| திங்கள்- | உயர்ந்தநிலை, செல்வாக்கு மேன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் சந்தேகம், கௌரவக் குறைவு. | காலை 6 மணி |
| புதன்- | தொழில் விருத்தி, செல்வாக்கு குறையும். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், மனத்தைரியம். | பி.ப. 2 மணி |
| சனி- | கடன் தொல்லை நீங்கும், உயர்ந்தநிலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | தொழில் கேடு, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வீண் குறை கேட்டல், மனத் தைரியம். | காலை 7 மணி |
| புதன்- | பயனற்ற செயல், உறவினர் பகை. | காலை 9 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, மனத் தைரியம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| சனி- | முயற்சிதடை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7





## சிட்டுக் குருவி

சிட்டுக்குருவி சிட்டுக்குருவி
சிறிய நல்ல சிட்டுக்குருவி.
பட்டுச் சிறகை விரித்து உயரப்
பறந்து செல்லும் சிட்டுக்குருவி

கையில் பிடித்து உன்னை மகிழ
ஆசையுண்டு சிட்டுக்குருவி-எங்கள்
குருந்த மரத்தில் கூடுகட்டி
குடியிருக்கும் சிட்டுக் குருவி.

அதிகாலை வேளை எழுந்து இரை
தேடப்போகும் சிட்டுக்குருவி.
அந்தி பட்டால் கூடு வந்து
குதூகலிக்கும் குட்டிக்குருவி.

இணை பிரியாமல் ஒன்று பட்டு
ஒற்றுமையாய் வாழும் சிட்டுக்குருவி.
கருணையோடு குஞ்சுக்கிரை
தேடிக் கொடுக்கும் சிட்டுக்குருவி.

அனுப்பியது: வடிவேல் சசிதரன் மட்/கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம்–வாழைச்சேனை.

"காவியம் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம், கொல்லருலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம், நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்"
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை



# வடிகட்டிய கஞ்சர்கள்

ஒரு ஊரில் கந்தன் என்ற கஞ்சன் வாழ்ந்தான். அவனைப் போன்ற ஒரு கஞ்சன் உலகத்திலேயே கிடையாது என்று மக்கள் பேசிக் கொள்ளும் அளவிற்கு அவன் மிகப் பெரிய கஞ்சனாக இருந்தான்.

அவன் சாப்பிடுவதே மிகவும் வேடிக்கையாக இருக்கும். சிறிது அரிசியைப் போட்டு அவன் மகள் தேவகி சோற்றைச் சமைத்து விடுவாள். அதற்குக் குழம்போ, இரசமோ செய்வது அவனுக்குப் பிடிக்காது. வெறும் சோற்றையே இருவரும் சாப்பிடுவார்கள்.

அவன் மகா கஞ்சனாக இருந்தபடியால் அவனிடம் ஏராளமான பணமும் நகைகளும் குவிந்து கிடந்தன. கந்தன் தன் மகளுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினான். தனக்குச் சம்பந்தியாக வரக்கூடியவர் தன்னை விடப் பெரிய கஞ்சனாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

அந்த ஊரில் தன்னை விடப் பெரிய கஞ்சன் யாரும் இல்லாததால், மாப்பிள்ளை தேடி வெளியூர் போக முடிவு செய்தான்.

கந்தன் வழிச் சாப்பாட்டிற்காக ஒரு துணியில் சிறிது அரிசி மாவைக் கொட்டி முடிந்து கொண்டு மாப்பிள்ளை தேடப் புறப்பட்டான். ஒரு காட்டின் வழியே வெகு தூரம் நடந்து சென்ற அவன், ஓய்வு எடுத்துக்கொள்வதற்காக ஒரு குளத்தின் அருகே இருந்த மரத்தடியில் தங்கினான்.

அப்பொழுது பொன்னன் என்பவன் வேறு ஒரு ஊரிலிருந்து புறப்பட்டு அந்த மரத்தடிக்கு வந்து சேர்ந்தான். பொன்னனும் ஒரு பெரிய கஞ்சனே. அவனது மகனுக்கு கந்தனின் ஊரில் பெண் பார்ப்பதற்காகவே வந்திருந்தான்.

கந்தனும், பொன்னனும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்ட போது, இருவரும் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர். அப்பொழுதுதான் தாம் இருவரும் ஒரே நோக்கத்திற்காகத்தான் சென்று கொண்டிருக்கின்றோம் என்று அவர்களுக்குப் புரிந்தது.

இருவருமே சம்பந்திகளாகி விட்டால் என்ன, என்ற எண்ணம் இருவருக்கும் தோன்றியது. உடனே அவர்கள் அதுபற்றிக் கலந்து பேசினார்கள். பெண்ணையும், மாப்பிள்ளையையும் விசாரித்து அறிந்தார்கள். இருவருக்குமே திருப்தியாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட நாளில் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று அங்கேயே பேசி முடிவெடுத்துக் கொண்டார்கள்.

அதன் பிறகு கந்தனும், பொன்னனும் தாங்கள் கொண்டு வந்த சாப்பாட்டைச் சாப்பிடும் நோக்கத்தில் குளத்தின் படிக்கட்டுக்களில் இறங்கினார்கள்.

பெண் வீட்டுக்காரனான கந்தன் எப்படிச் சாப்பிடுகிறான் என்பதைப் பார்க்க விரும்பினான் பொன்னன். கந்தன் தான் கொண்டு வந்திருந்த அரிசிமாவின் துணி முடிச்சை குளத்து நீரில் லேசாக அலசினான்.

அப்பொழுது துணிக்குள் இருந்த அரிசி மாவு துணி வழியே கரைந்து நீரில் கலந்தது. உடனே அவன் அந்த மாவு கலந்த நீரைக் கைகளால் அள்ளி அள்ளிக் குடித்தான்.

இதைப் பார்த்த பொன்னனுக்கு உடனே கோபம் வந்தது.

என்ன சம்பந்தியாரே! உமக்குச் சிக்கனம் என்பது சிறிது கூடத் தெரியாது போலிருக்கிறதே. உண்ணும் உணவை இப்படி நீரில் கரைத்து வீணாக்குகிறீரே. உமது மகளும் இப்படித்தான் ஊதாரியாக இருப்பாள் போலிருக்கிறதே. என்னைப் பாரும் நான் எப்படிச் சாப்பிடுகிறேன் என்று. இதை வைத்து நீர் எனது மகனின் சிக்கனத்தைத் தெரிந்து கொள்வீர் என்று சொன்ன பொன்னன். கந்தன் கொண்டு வந்த அரிசிமாவு முடிச்சை வாங்கி, அதை நீருக்குச் சற்று மேலே உயர்த்திப் பிடித்தான்.

தண்ணீரில் அந்த மாவு முடிச்சின் விம்பம் தெரிந்தது. அந்த இடத்தில் உள்ள நீரை மட்டும் ஒரு கையால் அள்ளி அள்ளிக் குடித்தான் பொன்னன்.

கந்தனுக்கு அது அதிசயமாக இருந்தது. தன்னை விட அவன் உயர்ந்த கஞ்சன் என்பதை உணர்ந்து, அவன் மகனை தனது மகளுக்கு மிகவும் பொருத்தமானவன் என்று நினைத்துப் பெரிதும் மகிழ்ந்தான்.

அதே சமயம் ஒரு கையால், உணவு முடிச்சைப் பிடித்துக்கொண்டு, இன்னொரு கையால் நீரை அள்ளிக் குடித்துக் கொண்டிருந்த பொன்னனின் மாவு முடிச்சு கையிலிருந்து நழுவி நீரில் விழுந்தது. உடனே அது மூழ்கத் தோடங்கியது.

இதைக் கண்ட கந்தன், "ஐயோ என் மாவு முடிச்சு," என்று கத்தியபடி, அதை எடுக்கக் குளத்தினுள் குதித்தான்.

அந்தக் குளமோ மிகவும் ஆழமானது. கந்தனுக்கோ நீச்சல் தெரியாது. தனது மாவு முடிச்சு போய் விட்டதே என்று அதை எடுக்கும் முயற்சியிலேயே அவன் கவனம் இருந்ததால், அவன் தன்னை மறந்தான். மாவு ஒன்றே அவனுக்குப் பெரிதாகத் தோன்றியது. ஆகவே, அவன் நீரில் மூழ்கினான். மூச்சுத் திணறல் ஏற்படவே கைகளையும், கால்களையும் உதைக்கத் தொடங்கினான்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பொன்னன் தனது அருமையான சம்பந்தியை இழந்து விடக் கூடாது என்ற நோக்கத்தில் அவனையும், அவனது மாவு முடிச்சையும் காப்பாற்ற, சட்டென்று குளத்தில் குதித்தான்.

ஆனால் பரிதாபம் பொன்னனுக்கும் நீச்சல் தெரியாது.

ஒரு பிடி மாவுக்காக மதியிழந்த அவர்கள் இருவரும் நீரில் மூழ்கி இறந்தனர்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.04.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 85
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 82

பரிசுக்குரியவர்
சோ. பரணிதரன்
கமு/உ...வெஸ்லி உயர்தரப் பாடசாலை-கல்முனை.

### பாராட்டுக்குரியவர்கள்

முஸ்றிஹா முபாரக் பா.ம.மகா வித்தியாலயம் புத்தளம்.

ராஜீந்த் தேவதாசன் கொழும்பு இந்துக்கல்லூரி-இரத்மலானை.

செல்வி.எல்.வசந்தமலர்-மா/பலாபத்வெல த.வி.-மாத்தளை.


ஜே.எம்.றம்ஸி
அக்குறணை ஸாஹிரா மத்தி கல்லூரி, புளுகஹதென்ன.

கே.எல்.எஸ். உமைறா
மட்/அலிஹார் வித்தியாலயம் பாலமுனை-காத்தான்குடி.

## அறிவோம் மனதில் பதிவோம்

மாவீரன் அலெக்சாண்டர் எதிரிகள் முகாமில் பெரிய தலைக் கவசங்களை விட்டு வைப்பார். அவரது படையில் மிகப் பெரிய ராட்சத மனிதர்கள் உள்ளனர் என எதிரிகள் நினைத்துப் பயப்படுவார்கள் என்பது அவரது கணிப்பு.





உலகின் முதல் விமான விபத்து 1908ம் ஆண்டு செப்டம்பர் 17ம் திகதி ஏற்பட்டது. விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்களும் மற்றொரு இராணுவ வீரரும் அந்த விமானத்தில் இருந்தனர்.

விமானம் கட்டுப்பாடின்றிப் பறந்து தரையில் மோதியதில் இராணுவ வீரர் இறந்தார். ரைட் சகோதரர்கள் படுகாயமடைந்தனர். அதன் பிறகு தான் சிறந்த விமானம் ஒன்றைத் தயாரித்து வெற்றி கண்டனர்.

சுரினாம் நாட்டில் உள்ள தேரைகள் தட்டையாக விநோதமான உருவத்துடன் காணப்படும். அவற்றுக்கு நாக்கு, பல் எதுவும் கிடையாது. கண்கள் சிறியதாக இருக்கும். பெண் தேரை, தான் இடும் முட்டைகளை தனது முதுகின் மீது சுமந்து திரியும். 10 வாரங்களுக்குப் பிறகு இவற்றிலிருந்து தேரைக் குஞ்சுகள் வெளிவரும்.



பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப் படுகின்றன. ஆக்கங்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:
பாப்பாமுரசு
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வாரம் ஒரு நாடு

### ஆஸ்திரியா



**அமைவிடம்:** மேற்குஐரோப்பா, ஜேர்மனி, செக்கோஸ்லாவாக்கியா, ஹங்கேரி மற்றும் சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளின் நடுவே அமைந்துள்ளது.
**ஆட்சி முறை:** 1918லிருந்து குடியரசு நாடாக இருந்துவருகிறது.
**பரப்பு:** 83,850 சது.கி.மீட்டர் (32.374 சதுரமைல்)
**மக்கள் தொகை:** 7,600,000
**தலை நகரம்:** வியன்னா (மக்கள்:1,600,000)
**மொழி:** ஜேர்மன் மொழி (டொச்), சிறிதளவு ஆங்கிலம்
**மதம்:** உரோமன் கத்தோலிக்கம், சிறிதளவு புரொடஸ்தாந்து மதத்தினரும் உள்ளனர்.
**தேசிய தினம்:** அக்டோபர் 26.
**பொதுக் குறிப்பு:** ஆஸ்திரியாவின் தலை நகரமான வியன்னாவில் ஐ.நா.வுடன் தொடர்புடைய சில நிறுவனங்களின் தலைமைப் பீடங்கள் அமைந்துள்ளன. சீதோஷ்ண நிலைமைகளும் சீராக இருப்பதனால் பல சர்வதேச மாநாடுகள் இங்கு நடைபெறுகின்றன.
இரும்புத்தாது, எண்ணெய் வளம், பழுப்பு நிலக்கரி, மக்னசைட், ஈயம் மற்றும் செம்பு ஆகியவையும் இங்குள்ள இயற்கை வளங்கள்.
**பார்க்கவேண்டிய இடங்கள்:** ஐரோப்பிய வரலாற்றில் முக்கியமான இடத்தை ஆஸ்திரியா பெற்றுள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான இடங்கள் ஆஸ்திரியாவில் காணப்படுகின்றன. வியன்னாவில் உற்பத்தி செய்யப்படும் பளிங்குப் பொருட்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. கம்பளி ஆடை தயாரிப்பும் இங்கு சிறப்பிடம் வகிக்கிறது. வரலாற்றுப் பெருமை வாய்ந்த கட்டிடங்கள் தலை நகர் வியன்னாவிலும், பழமை தழுவிய நகரமாகவே இன்றுவரை திகழும் சால்ஸ்பேர்க் நகரிலும் உண்டு. பண்டையப் பெருமை வாய்ந்த சிற்ப-சித்திரக் கலை மேம்பாடுகளைக் கொண்ட தேவாலயங்கள், அரண்மனைகள், கோட்டைகள் இவ்விரு நகரங்களிலும் உள்ளன. வியன்னாவிலுள்ள ஸ்பானிய குதிரைச்சவாரி பயிற்சிப்பள்ளி அவசியம் பார்க்கவேண்டிய இடங்களில் ஒன்றாகும். தேசிய வரலாற்று நூதன சாலைகளும் இசை அரங்குகளும் இங்குள்ளன. இந்நகரத்தில் இசை அரங்குகள் மிகச்சிறப்பாக விளங்குவதற்குக் காரணம், **மேலைத்தேய இசைத்துறையின் மாமேதையாகக் கொண்டாடப்படும் உவொல்காங் அமாடியஸ் மோஸார்ட் ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்தவர் என்பத லாகும்.** இசை மேதை மோஸார்ட் பிறந்த நகரமான சால்ஸ்பேர்க், உலக இசைக் கலாவிற்பந்நகர்களின் யாத்திரைத்தலமாக விளங்குகிறது.

## விடுகதைகளும் விடைகளும்

01. நீர் ஓடி நிலம் பிழந்து நிலவாழை குருதிதெறியும் காரோடிய கருமணலிலே கருவில்லா முட்டை! அது என்ன?
02. ஒரு பிடி மாவு எடுத்து ஊருக்கெல்லாம் கலியாண விருந்து. அது என்ன?
03. மலைக்குள் மறைந்துபோய் திரையுள்ளிருந்து வெளிவரும் தின ஜாலக்காரன். அவன் யார்?
04. ஒரே ஒரு சிப்பிக்குள் ஒரு நூறு முத்துக்கள். அது என்ன?
05. ஒப்பாரிவைப்பான்; ஊரைக்கூட்டுவான்; தனக்குக் கிடைத்ததை தானமும் செய்வான். யார் அவன்?
06. இருளிலே திரிந்து, இரகசியம் பேசி, இரத்தமே குடிக்கும் பேய்! அது எது?
07. சாக்கடையில் ஜனித்த குழந்தை சந்தனத் தொட்டிலிலும் தவழும்; தங்கத் தாம்பாளத்திலும் பருகும். அது யார்?
08. அழிவுப் பணி செய்யும் ஆயுதமணியா படை வீரர்கள்! யார் அவர்கள்?
09. கோபக்காரக் கணவனுக்கு குளுமையான மனையாட்டி! யார் அவர்கள்?
10. அடுத்து வாழ்ந்து, அடுத்தவர் உழைப்பைச் சுரண்டும் அழைப்பற்ற விருந்தாளி! யார் அவர்?

**விடைகள்:**

01. காளான் 02. நிலவு. 03. சூரியன்
04. மாதுளங்கனி. 05. காக்கை.
06. நுளம்பு. 07. ஈ (இலையான்)
08. கறையான். 09. வெய்யோன், தண்மதி
10. மூட்டைப் பூச்சி.

எம்.எஸ்.எம்.றியாஸி-புல்மோட்டை-02.



# 15

# மகா சூலம்

சிவசங்கரன் நம்பூதிரி நடுக்கம் கொண்டார். எதிரில் நிற்பது மனித உருவில்லாத ஓர் உருவம்.

தொங்கும் நாக்கு.... எட்டுக்கைகள்... கோபக்கனல் வீசும் கண்கள்....

எப்போதோ யாரோ சொன்ன தூர்க்கையின் வடிவம்.

நிஜமா...? பிரமையா?

நிதானிப்பதற்குள்ளாக அந்தத் தீக்கண்கள் தன்னையே நெருங்கி வருவதைப் போலிருந்தன!

வெளியிலேயும் இருட்டா? அல்லது உள்ளே மட்டும்தானா?

மனசுக்குள் சுத்தமான பிறகும் இப்படி ஒரு தோற்றம் தன்முன் வந்து மிரட்டுவானேன்? கைகால்களை முடக்குவானேன்?

திடீரென்று ஒரு சுழல்காற்று! முகத்தின் மீது மோதிஅடித்தது.

என்ன நடக்கப் போகிறது என்று அவருக்குப் புரியவில்லை. தன்னால் அடியெடுத்து வைக்க முடியாது!

ஆனால் மனசுக்குள் பரிசீலனை நடக்கிறது.

இதே இடத்தில் தானே ஒரு நாள் நானும் அந்தத் தப்பைச் செய்தேன்'?

நினைவுக்கு வருகிறது...

'அதற்குப் பிராயச்சித்தம் செய்யத் தானே நான் இங்கே வந்தது?'

ஆனால்.....

பின்னால் தள்ளப்படுவதை உணரும் திருமேனி..இனிப் படிகள் இல்லை என்பதை உணர்ந்ததுமே தடுமாற ஆரம்பித்தார்! முன்னால் பயமுறுத்தும் கோர சொரூபம். பின்னால் தண்ணீர்!

திக்குமுக்காடிப் போனார் சிவசங்கரன் நம்பூதிரி.

எதிரில் நிற்கிற உருவம் ஆக்ரோஷத்தோடு திருமேனி மீது கையை நீட்டியது.

நீண்டு வளர்ந்த நகங்கள் சூலத்தின் முனைகளைப் போல்.

தன்னையுமறியாமல் தனது உடல் பின்னுக்கு வளைந்தது அவருக்கு, உடனே குளத்தில் சரிந்தார் அவர்.

கையும் காலும் இயக்கமில்லை.

எனவே விழுந்த மறு கணமே நீராழத்துக்குத் தன்னையாரோ இழுத்துப் போகிறார்ப்போல் அமிழ்ந்து கொண்டே போனார் திருமேனி.

திமிறமுடியவில்லை நிமிர முடியவில்லை. மூச்சு முட்டியது. மேலே எழும்பி வரவும் இயல வில்லை!

அப்படியே...அப்படியே....குளத்துக்குள் அவருடைய மூச்சும் அடங்கிப் போயிற்று!

பூஜை அறையிலிருந்து வெளியே வந்தாள் பத்ரா. அவளுடைய உதட்டில் மந்தகாசச் சிரிப்பு.

எதையோ மறுபடியும் மறுபடியும் நினைத்துக் கொண்டு வெடித்துச் சிரித்தாள் பத்ரா.

நங்கை திடுக்கிட்டாள்!

'என்னாச்சு இவளுக்கு....?, என்கிற பார்வை!

ஆத்மார்த்தமாக ஒரு சின்ன புன்னகையைக் கூட இதுவரை பத்ராவின் முகத்தில் பார்த்தறியாத நங்கைக்கு ஆச்சரியமாயிருந்தது. இப்போது மகள் வெடித்துச் சிரிக்கிறாள்!- என்ன குழப்பம் இது?

நங்கை, மகளை ஏறிட்டுப் பார்த்தாள்.

"என்னம்மா ஆச்சு உனக்கு?" -கேட்டாள் நங்கை.

பத்ரா தாயாரை உற்றுப் பார்த்தாள்: "அம்மா! உனக்குத் தெரியுமா ஒரு விஷயம்?"

"என்னது?"

"சிவசங்கரன் திருமேனி மறுபடியும் இங்கே வந்தது சாகிறதுக்குத்தான்!"

கேட்டதுமே பதறிப் போனாள் நங்கை. அதை மகள் மிகமிக ரசித்தாள்.

"....ஆமாம்மா..! இது நான் செஞ்ச தியானத்துக்குக் கிடைத்த முதல் வெற்றி. இனி எனக்கு யாரையும் பார்த்து அச்சப்படத் தேவையே இல்லம்மா! இந்த நாற்பது நாள்லே எனக்கு எல்லாமே வசமாயிடுச்சு!

-புரியவில்லை. நங்கை திருதிருவென்று விழித்தாள்.

உள்ளத்துக்குள் ஓர் உதறல்.

பத்ரா பிறகு தான் விவரித்துச் சொன்னாள்: "எனக்கு அவர் மேல ஒரு பகையுமில்லம்மா! ஆனா அந்த ஆள் என்னைப் பழிதீர்த்துட்டான்: அதனால தான் அவனை நானும் பழிக்குப் பழி வாங்கிட்டேன்."

அதைச் சொல்லும்போது மகளின் கண்களில் ஏதோ ஒருவித அருள் சுரந்து தெரிவதைப் போலிருந்தது. என்றாலும் நங்கையின் அடி மனசில்....ஒரு நிரடல்.!

அதையும் விளக்கிச் சொன்னாள் பத்ரா.

அப்போது....இடுப்பின் மேல் துண்டையும் இணைத்துக் கட்டியபடி அங்கே ஓடோடி வந்தான் இல்லத்து வேலைகளில் சிவசங்கரனுக்கு உதவி செய்து கொண்டிருந்த உள்ளூர் விவசாயத் தொழிலாளி மாது!

பத்ரா அவனைப் பார்த்தாள்: "வா மாது! நல்ல நேரத்துக்கு நீ வந்தே...."

"அம்மா! நம்ம சிவசங்கரன் திருமேனி செத்துட்டார்னு யாரோ வந்து இப்பதான் சொன்னாங்க! எங்கேம்மா அவர் உயிர் போச்சு?"

நங்கையின் கண்களில் நீரரும்பியது!

"ஊர்லேயே போயிட்டாரா? எப்ப தகவல் வந்தது?"

"உனக்கு யார் வந்து சொன்னாங்க?" கேட்டாள் நங்கை.

அவன் விவரித்தான். "யார்னு தெரியலேம்மா! இப்பதான் வேலை முடிஞ்சு வந்தேன். யாரோ வாசல்லே நின்னு என்பேர் சொல்லிக் கூப்பிட்டு விவரம் சொன்னாங்க! அவர் தான் எப்பவோ ஊருக்குப் போயிட்டாரே...செத்திருந்தா ஊர்ல தான் செத்திருக்கணும்னு துக்கம் கேட்கத் தான் வந்தேன்."

பத்ரா புன்னகைத்தாள்: "துக்கம் மட்டுமில்லே: அவர் செத்ததை அவரு சொந்தக்காரங்களுக்கெல்லாம் போய்ச் சொல்ல வேண்டியதே உன் பொறுப்பு தான்! அப்படியே கிராம அதிகாரிக்கும் சொல்லீடு மாது! திருமேனி இல்லத்துக் குளத்திலே விழுந்து செத்துட்டாரு! கால்தவறிப் போச்சு!"

நங்கை கூவி அழுதாள்.

"எப்போ....? எப்போ....? இவ்வளவு நேரமும் திண்ணையிலே தானே உட்கார்ந்திருந்தாரு! நீ என்னம்மா சொல்லறே? நீ எப்ப பார்த்தே?"

"மாது! நீ போய்ப் பாரு அவர் பொணத்தை உரியவங்க கிட்டே ஒப்படைக்க வேண்டியது உன் பொறுப்பு! அம்மாவுக்கு நான் சொன்னா விளங்காது."

சொல்லி விட்டு விருட்டென்று உள்ளே போய் விட்டாள் பத்ரா.

விலைமதிப்புள்ள கைப்பொம்மையை இழந்து விட்ட சிறு குழந்தையைப் போல், நங்கையின் மனசு கேவுவதைப் புரிந்து கொண்டபிறகும்.....துளிகூட சவு இரக்கமில்லாமல் பேசி விட்டுப் போன பத்ராவின் பின்னாலேயே ஓடினாள் நங்கை!

மாது ஊருக்குள் போய் விவரம் சொன்னபோது சிவசங்கரனின் சாவுக்குப் பின்னால் ஏதேதோ காரணங்கள் இருக்கலாம் என்று ஊர் மக்களில் பலரும் உள்ளே அர்த்தம் வைத்துப்பேச ஆரம்பித்து விட்டார்கள்!

கிராமத்து அதிகாரியின் முன்னிலையில் சிவசங்கரனின் சவம் எடுக்கப்பட்டபோது தலைக்குத் தலை ஒவ்வொரு கதைகளைச் சொல்லிக் கொண்டார்கள். நங்கையின் கணவர் செத்த கையோடு இல்லத்துச் சொத்தைத் தனதாக்கிக் கொள்ள நினைத்த பக்கத்து மனைக்காரர் இந்தச் சாக்கில் நங்கையின் இரகசிய வாழ்க்கையை அம்பலப்படுத்தவும் செய்தார்.

"சிவசங்கரன், குளத்திலே தவறி விழுந்து செத்ததா இருக்காது!

"அம்மா அந்த ஆளை வெச்சிருந்த விஷயம் தெரிஞ்சு மகள்தான் அவரை அடிச்சுக் கொன்னிருக்கணும்!"-கிழித்துப் போட்டார் கிருஷ்ணன் நம்பியார்.

போதாதா இது? பஞ்சில் பட்ட தீபோல் பரவி விட்டது சங்கதி!

"நாராயணன் திருமேனி போனப்புறம் வடக்குத்தரை இல்லமே நாசமாயிடுச்சு! அம்மா அசிங்கமா நடந்தா! மக கொலைகாரியாயிட்டா! இனி அந்தப் பிசாசுக்கும் அம்மாவுக்கும் சண்டை வராம இருக்குமா? ஏற்கெனவே களறி படிச்சவ. எச்சுத்துப்பிலே தாயாரைக் கொலை பண்ணினாலும் பண்ணுவா! பாவம்-அந்தச் சிவசங்கரன். மாடுமாதிரிப் பாடுபட்டாரய்யா!"

பிணத்தை எடுக்க சிவசங்கரனின் உறவினர்கள் வரும்வரை இப்படியே கதைக்குக் கண்ணும் காதும் மூக்கும் வைத்து அலங்கரிக்கப்பட்டது! கிருஷ்ணன் நம்பியார் தான் தலைப்பாகை கட்டிக் கொண்டு நின்றார். நங்கையை இந்த வார்த்தைகளே சிறுகச் சிறுகக் கொன்று கொண்டிருப்பதைப் போலிருந்தது! கூனிக் குறுகிப் போனாள் அவள்.

சிவசங்கரனின் பிணத்தை எடுத்துப் போன மூன்றாவது நாள்.....

வெள்ளிக்கிழமை-அம்மாவும் தனது அறைக்குள் செத்துக்கிடந்ததைப் பார்த்தாள் பத்ரா! அவளுக்குத் துளி கூடக் கண்ணீர் வரவில்லை!

இந்தச் செய்தி ஊருக்குள் யாருக்குமே தெரியாது!

கிருஷ்ணன் நம்பியாருக்குத் தெரிந்தால் அல்லவா நங்கையின் சாவு காட்டுத் தீ போல் அந்த ஊர் முழுவதும் பரவுவதற்கு? அவரை இப்போது அடித்திருக்கிற 'கிலி' சாதாரணமானது அல்ல! பத்ரா அவரைச் சும்மா ஒரு மிரட்டு மிரட்டி விட வேண்டும் என்று மட்டும் தான் நினைத்தாள்! ஆனால்....

மனிதர் நடுநடுங்கிப் போய் இறுகி, நட்டநடு வீட்டுக்குள்ளேயே பேச்சு மூச்சில்லாத பிரேதம் போலாகி விட்டார்!

காரணம் வேறொன்றுமில்லை!

அம்மாவையும் தன்னையும் அசிங்கமாகப் பேசியது, சிவசங்கரன் திருமேனியின் பிணத்தை ஊருக்குத் தூக்கும் போது பத்ராவின் காதுக்கும் கேட்டது! உடனே பூஜையறைக்குப் போனாள்.

ஒரு நாளிகை கண்களை மூடி அமர்ந்தாள்!

விளைவு....?

சாவுத் தீட்டுப்போக கிருஷ்ணன் நம்பியார் குளத்துக்குப் போய்க் குளித்து விட்டு வரும்வழியில்....

எதிரில் சிவசங்கரன் திருமேனி!

"என்னய்யா நம்பியார்? இந்த நேரத்திலே போய் எதுக்குக் குளிச்சுட்டி வரே?" என்று கேட்டுக்கொண்டு நின்றிருந்தார்.

அவ்வளவு தான்!

குளிர்ந்து கிடந்த உடம்பு மொத்தமும் வியர்வை அரும்பி வெடவெடவென்று நடுங்கிப் போயிற்று. ஓடிப் பதறி வீட்டுக்கு வந்தவர் தான்! உடுத்திருந்த ஈரத்துணியை மாற்றுவதற்கு முன் உடம்பு முழுவதையும் அனிச்சையாகத் துடைத்தார். வேறு துணி எடுக்க அறைக்குள் போனார். பெட்டியைத் திறந்தார். உள்ளே சிவசங்கரனின் தலைமட்டும் நிமிர்ந்து பார்த்தது.

பத்ரா பூஜை அறையிலிருந்து புன்னகை பூத்தாள்!

மாதுவை யாரோ கூப்பிடுவதைப் போலிருந்தது. சடவு முறித்து எழுந்து வீட்டுக்கு வெளியே தலையை நீட்டியதுமே தூக்கிவாரிப் போட்டது!

வடக்குத் தரை இல்லத்தின் இளைய தம்புராட்டி!

"அம்மா...நீங்க எங்கே.....இங்கே?" குழறினான். பத்ரா தலையை ஆட்டினாள். பட்டுப்பாவாடை, பளிங்கு மேனியை இறுக்கியிருந்த பட்டு ரவிக்கை, பின்னிப்போட்டிருந்த இரட்டைச் சடை! சந்தன நிறம்.....குங்குமநெற்றி.....மல்லிகை மணம்!

"ஆமா மாது! நானே தான்! ஒரு அவசியம்னா சொல்லி அனுப்ப வீட்லே வேறெ யாரிருக்கா? நீ இன்னிக்கு வேறெ வேலை எதுக்கும் போக வேண்டாம்! இல்லத்துக்கு வா....உனக்கு ஏராளமான வேலையிருக்கு!"

அவள் சொன்ன மறு நொடியில்-

உள்ளே ஓடிப்போய் வேறு வேட்டி கட்டிக் கொண்டு வெளியே வந்தான் மாது. இளைய தம்புராட்டியைக் காண வில்லை! உடனே வடக்குத்தரை இல்லத்துக்கு ஓடோடி வந்தான். அங்கே முற்றத்தில் தன்னந்தனியாக நின்று கொண்டிருந்தாள் பத்ரா.

ஈரத்தலை...வெறும் நெற்றி... மார்புவரை ஏற்றிக்கட்டியிருந்த புடவை...! மாதுவைப் பார்த்ததுமே விவரம் சொன்னாள் பத்ரா." மறுபடியும் உனக்கு ஒரு மகானத்து வேலை! உடனே போய் ஊருக்குள்ளே சொல்லணும். அந்திமச் சடங்குகளுக்கு ஆட்களை வருவிக்கணும் மாது! அம்மா செத்துட்டாங்க!"

"தம்புராட்டி!"

"உள்ளே தான் கட்டில்லே கெடக்கறாங்க. இப்பதான் எனக்கே தெரியும்! போய்ப்பாரு!"

இல்லத்துக்குள் பிறஜாதிக்காரர்கள் எவரையும் நுழைய விடாத நம்பூதிரிப் பாரம்பரியம்....தனக்கு முதன் முதலாக ஒரு அனுமதி கொடுத்ததைக் கேட்டதுமே மாது தயங்கி நின்றான்.

"போய்ப்பாரு மாது!"

போனான் அவன். பார்த்தான். இல்லத்தின் அந்தர்ஜனம் கட்டிலில் சுருங்கிப் போய்க் கிடந்தது! திரும்பினான்...

"இவளை எங்கப்பாவோ இல்லே சிவசங்கரன் நம்பூதிரியோ சீக்கிரம் வாடின்னு கூப்பிட்டுட்டாங்க மாது! அதான் போயிட்டா. நீ எல்லாருக்கும் போய்ச் சொல்லு! ஆத்மா போனப்புறம் உடம்பை அதிக நேரம் போட்டு வைக்கக் கூடாது."

வெகு அமைதியாகச் சொல்லிவிட்டுப் பூஜை அறைக்குள் நுழைந்த பத்ரா.... மாதுவுக்கு அப்போது ஓர் ஆச்சரியமாக மட்டுமில்லை; அற்புதமாகவும் தெரிந்தாள்.

தம்புராட்டியின் மரணத்தைப் பற்றி மகளுக்குத் துளி கூட கவலையோ வருத்தமோ இல்லையா? கண்களில் ஒருசொட்டுக் கண்ணீரும் வரவில்லையா? ? மாதுவுக்குக் குழப்பமாக இருந்தது.

இந்தக் குழப்பம் அவனுக்கு இல்லத்துக்கு வரும்போதே ஆரம்பம்.

ஏனென்றால் இல்லத்துப் பெண்கள் எப்போதுமே வெளியே வந்ததில்லை, வந்தாலும் ஓலைக்குடை பிடித்தபடி கோவிலுக்குப் போகிற வரவு மட்டும் தான்! ஒருவர் முகத்தையும் பார்க்க மாட்டார்கள்! அவர்கள் முகமும் அடுத்தவர்களுக்குத் தெரியாது!

ஆனால் தன் வீட்டுக்கு அலங்காரமாக பூஜிதையாக இளையதம்புராட்டி வந்து நிற்கிறாள்! அதுமட்டுமில்லை; அவன் அவள் பின்னால் ஓடோடி வருவதற்குள் தோற்றமே மாறித் தெரிகிறாள்; முற்றத்தில் நிற்கிறாள்! தன்னையும் இல்லத்தக்குள் போய் செத்துப்போன அம்மாவைப் பார்க்கும்படி சொல்கிறாள்!

எல்லாமே வித்தியாசமாக இருந்தது மாதுவுக்கு. நம்பூதிரியின் காலத்திலும் சிவங்கரன் இருந்தகாலத்திலும் அடிக்கடி மாது இந்த இல்லத்துக்கு வேலைக்காக வருவான். அப்போதெல்லாம் பத்ரா களறிப் பயிற்சிக்கு போவதைப் பார்த்ததுண்டு. போகும்போது கூட குடையைப் பிடித்தபடி முகம் தெரியாமல் தான் போவாள்.

நம்பூதிரி வீட்டு வேலைக்குப் போகாத நாட்களில் மாதுவிடம் உடன் வேலை பார்க்கிறவர்கள் குத்தலாகக் கேட்பதுண்டு.

"ஏண்டா மாது? சிவசங்கரன் நம்பூதிரி எப்பவும் உன்னோடதான் இருப்பாரா..... இல்லே.... அந்தர் ஜனத்துக்கு ஏதாவது வேலைகள் பார்ப்பாரா?"

பொதுவாகக் கேட்கறபோது ஒரு அர்த்தமும் பூடகமாகும்போது வேறு அர்த்தமும் தொனிக்கிற கேள்வியிது. அவனைப் பொறுத்தமட்டில் தெரிந்த உண்மை சிவசங்கரன் நம்பூதிரியும் தன்னைப் போலவே கடின உழைப்பாளி என்பது! ஆனால் அவர் இறந்த அன்று கதைவேறு தினுசாக ஊருக்குள் பரவியிருந்தது.

வீடுவீடாகப் போய் நங்கை அந்தர்ஜனம் செத்துப்போன கதவலை இப்போது மாது சொன்னபோதும் கேட்டவர்கள் வேறுதினுசாகத் தான் விசாரணை நடத்தினார்கள். பலரும் நினைத்தது மக்கள் பத்ரா தாயையே கொன்று போட்டிருக்க வேண்டும் என்று தான்!

ஆனால் முன்பு அபாண்டமும், அசிங்கமுமாகப் பழித்தவர்கள் அத்தனை பேருக்கும் இப்போது நங்கையின் மீது அனுதாபம் இழைந்தது! மரணத்தின் மகத்துவமே இதுதான், எவ்வளவு பெரிய எதிரியாக இருந்தாலும் சாவு, மனிதனை அனுதாபப்படுத்திவிடும்.

கடைசி கடைசியாக ஒருபார்வை அந்த முகத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று தகவலறிந்தவர்கள் எல்லோரும் இல்லத்தில் வந்து குழுமினார்கள். பகலின் வேகம் குறைந்து கொண்டிருந்தது. எரிப்பதற்கான விறகுகளும் கட்டைகளும் எடுத்துக் கொண்டு ஒருவண்டி முதலில் போயிற்று.

மேற்கு வானத்தில் சூரியன் எரிந்து அடங்கும்போது நங்கையின் சடலம் தீ நாக்கு விட்டு எரிய ஆரம்பித்தது.

எல்லாரும் சடங்குகள் முடித்து விட்டு அவரவர்கள் வீட்டுக்கு புறப்பட்டபிறகு-

பத்ரா மட்டும் தனியானாள்.

அவளை விசாரிக்கவோ அவளுக்காக அனுதாபப் பட்டு உதவவோ யாருமே அந்த இல்லத்தின் பக்கம் வரவில்லை. எல்லாருடைய எண்ணத்திலும் பத்ரா ஒரு கொலைகாரியாகப் பதிந்துபோயிருந்தாள். நங்கை செத்தது சிவசங்கரனின் மரணத்தால் ஏற்பட்ட கவலையால் தான் என்பதை யாருமே நம்பவில்லை. ஒருவாரம் உருண்டு ஓடியது.

எப்போதும் பூஜை அறையே புகலிடமாயிருந்தது பத்ராவுக்கு! எட்டாவது நாள். அன்றும் ஒரு வெள்ளிக்கிழமை தான் பூஜையறையிலிருந்தாள் பத்ரா. வெளியே மழைமேகம் சூழ்ந்திருந்தது. இல்லத்தின் வழியாக நடந்துபோன ஒரு இளைஞன் குடிவெறியில் தட்டுத்தடுமாறித் திரும்பிப்பார்த்தான்! பிறகு? வெகு தைரியமாக பத்ரா இருந்த அறைக்கு நடந்தான்.

(இன்னும் வரும்)

## எழுதுவது யார்?


தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது!

வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்!

கண்டுபிடிக்கும் வாசகர்களில் பத்து அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசுகள் காத்திருக்கின்றன.

தொடர்ந்து வாசியுங்கள் நாம் கேட்கும் போது விடையை எழுதி அனுப்பினால் போதும்.

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஜி. சேகர்
வயது: 22
முகவரி: 41, கடியனலேன பசார், கெட்டப்புல.
பொழுபோக்கு: பத்திரிகை வாசித்தல்



பெயர்: ந. கோமளா
வயது: 18
முகவரி: சின்னத்தட்டுமுனை, வாகரை.
பொழுதுபோக்கு: வழமையானவை



பெயர்: பாத்திமா சுமைரா
வயது: 12
முகவரி: 1, பெனிதுடு முல்ல வீதி, நாவலப்பிட்டிய.
பொழுதுபோக்கு: பத்திரிகை, டி.வி.



பெயர்: முஹமட் நவாஸ்
வயது: 20
முகவரி: கனேவல்பொல, கெக்கிறாவ.
பொழுதுபோக்கு: பேனாநட்பு, சினிமா, கிரிக்கெட்



பெயர்: எஸ். பிரகாஷ்
முகவரி: P.O. BOX. 2174 DOHA, QATAR, A.G.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம் வாசித்தல், கால்பந்து, கரம் விளையாடுதல்



பெயர்: எம். சக்கீர்
வயது: 24
முகவரி: P.O.BOX-10260 JEDDAH.27433 K.S.A.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம் வாசித்தல்.

பெயர்: இ. சுரேந்திரன்
வயது: 31
முகவரி: F.S.G. NO. 1 57036. P. AZZURRO LIVORNO. (LI) ITALY.
பொழுதுபோக்கு: பத்திரிகை மற்றும் முத்திரை, தொலைபேசி காட் சேகரித்தல்.


பெயர்: முஹமட் ஸஜாக்
வயது: 17
முகவரி: 58, அரபிக் கல்லூரி வீதி காத்தான்குடி - 4.
பொ.போ: கிரிக்கெட் விளையாடுதல் பத்திரிகை வாசித்தல்.

பெயர்: கே.ராஜசேகரன்
வயது: 21
முகவரி: 10/2, எஸ்,கே, பிளாசா, தெகிவளை வீதி, மகரகம
பொழுதுபோக்கு: பேனாநட்பு, வானொலி, பத்திரிகை

பெயர்: எம். முன்ஷிர்
வயது: 17
முகவரி: கெக்குண கொல்ல, குருநாகல்.
பொ.போ: பத்திரிகை, உதைபந்து

பெயர்: எஸ். ஜெயராஜேஸ்கண்ணா
வயது: 14
முகவரி: 1094, பாலையூற்று, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, மீன் வளர்ப்பு

பெயர்: எச். ஹசன் சாஜஹான்
வயது: 19
முகவரி: 177, முல்லேகம, அபத்தன்னை.
பொ.போ: நாவல்கள், சினிமா.




# மக்சீம் கார்க்கி

## 19

"போய்வா, பாஷா. உனக்கு வேண்டியதையெல்லாம் எடுத்துக் கொண்டாயா?"

"ஆமாம்; நீ தனியாயிருந்து கவலைப் படாதே!"

"கடவுள் உனக்கு அருள் செய்யட்டும்......"

அவர்கள் அவனை அழைத்துச் சென்ற பின்னர், அவள் அப்படியே பெஞ்சின் மீது சரிந்து சாய்ந்து உட்கார்ந்தாள்; அமைதியாகக் கண்ணீர் பெருக்கினாள். அவளது கணவன் வழக்கமாகச் சாய்ந்திருக்கும் நிலையிலேயே, அவளும் அந்தச் சுவரோடு சாய்ந்து, சோகம் நிறைந்த உள்ளத்தோடு, நிராதரவான தன் நிலையைப்பற்றிய பிரக்ஞை உணர்ச்சியின் வேதனையோடு அப்படியே இருந்தாள். தலையைப் பின்னால் பட்டென்று மோதிச் திட்டினார்கள்; ஆனால், எனக்கு அவை ஒன்றும் உறைக்கவே இல்லை. அவர்கள் பாவெலைக் கொண்டுபோய் விட்டார்கள். இல்லையா? அந்த மனேஜர் கண்ணைக் காட்டவேண்டியது; பொலிஸ் தலையை ஆட்ட வேண்டியது; அப்புறம் ஒரு மனிதனைக் கொண்டுபோய் விடவேண்டியது! அவர்கள் இருவரும் அழகாகத்தான் ஒத்துழைக் கிறார்கள். ஒருவன் கொம்பைப் பிடித்துக் கொள்கிறான். மற்றவன் பால் கறக்கிறான். இவ்வாறு மக்களைக் கறந்து தீர்க்கிறார்கள்...."

"பாவெலுக்காகக் கிளர்ச்சி செய்ய வேண்டும்!" என்று எழுந்துநின்று சத்தமிட்டாள் தாய்: "எல்லோருக்காகவும் தானே அவன் வேலை செய்தான்."

"யார் செய்கிறது?"

"ஒவ்வொருவரும்!"

"ஹூம், நீ அப்படியா நினைக்கிறாய்? உஹூம்! அது மட்டும் நடக்காத காரியம்!"

சாய்ந்தவாறே அவள் அழுங்கிய, ஒலியற்ற குரலில் அழுதாள்; அந்த அழுகுரலில் அவளது புண்பட்ட இதயத்தின் வேதனை முழுவதும் பொங்கி வழிந்தது.

ஆனால் அவளது மனக்கண் முன்னே அந்த அசைவற்ற மஞ்சள் மூஞ்சி அதிகாரியின் மெல்லிய மீசையும், களிதுள்ளும் குறுகிய பார்வைகொண்ட கண்களுமே நிழலாடிக் கொண்டிருந்தன.

நியாயத்துக்காகப் போராடும் ஒரே காரணத்துக்காகத் தாய்மார்களிடமிருந்து பிள்ளைகளைப் பறித்துச் செல்லும் அந்த மனிதர்களின் மீது ஏற்படும் கசப்புணர்ச்சியும் பகையுணர்ச்சியும் கார்மேகம்போல் கவிந்து படர்ந்தது.

நல்ல குளிர்; வெளியிலே பெய்யும் மழை ஜன்னல்களின் மீது படபடத்து விழுந்தது. நெடிய கைகளும் கண்களே இல்லாத சிவந்த முகங்களும் கொண்ட சாம்பல் நிற உருவங்கள் அந்த அர்த்த ஜாமத்தில் தன் வீட்டைச் சுற்றிச்சுற்றிப் பாராக்கொடுப்பது போலவும், அவர்களது பூட்ஸ் லாடங்கள் மங்கி ஒலித்துக் கொண்டிருப்பது போலவும் அவளுக்குத் தோன்றியது.

"அவர்கள் என்னையும் கொண்டு போயிருந்தால்?" என்று நினைத்தாள் அவள்.

ஆலைச்சங்கு அலறி, தொழிலாளர்களை வேலைக்கு அழைத்தது; அந்த அதிகாலை வேளையில் அந்தச் சங்கு தாழ்ந்தும் கரகரத்தும் நிதானமற்று ஒலித்தது. கதவைத் திறந்து கொண்டு ரீபின் உள்ளே வந்தான். தாடியிலிருந்து வழிந்தொழுகும் மழை நீரைத் துடைத்து விட்டுக் கொண்டு அவள் முன் வந்து நின்று கேட்டான்:

"அவர்கள் அவனைக் கொண்டுபோய் விட்டார்களா?"

"ஆமாம். அவர்கள் நாசமாய்ப் போக!" என்று பெருமூச்சுடன் பதில் சொன்னாள் அவள்.

"எதிர்பார்த்த விஷயம்தான்!" என்று கூறி லேசாகச் சிரித்தான்: "அவர்கள் என் வீட்டையும்தான் சோதனை போட்டார்கள்; ஒன்றும் பாக்கியில்லை. எல்லாவற்றையும் உருட்டிப் புரட்டிப் பார்த்தார்கள். என்னை வாய்க்கு வந்தபடி சிரித்துக்கொண்டே அவன் வெளியே நழுவி விட்டான். அவனது நம்பிக்கையற்ற வார்த்தைகள் அவளது பரிதாப நிலையை மேலும் மோசமாக்கியது.

"அவனை அவர்கள் அடித்தால், சித்ரவதை செய்தால்....."

தன் மகனது உடம்பெல்லாம் அடிபட்டுப் பிய்ந்துபோய், இரத்தம் ஒழுகிக் கொண்டிருக்கும் காட்சியைக் கற்பனை பண்ணிப் பார்த்தாள்; அதை நினைத்தவுடனேயே அவளது உள்ளத்தில் ஒரு நடுக்கமும் பயமும் குளிர்ந்தோடிக் குத்தியது. அவளது கண்கள் குத்தலெடுத்தன.

அன்று முழுவதும் அவள் அடுப்பு மூட்டவில்லை; சாப்பிடவுமில்லை. தேநீர்கூட அருந்தவில்லை. இருட்டி வெகுநேரம் கழிந்த பிறகுதான் ஒரு துண்டு ரொட்டியைக் கடித்துத்தின்றாள். அன்றிரவு அவள் படுக்கச் சென்றபோது அவளது வாழ்க்கையில் இதுவரை இந்தமாதிரியான சூனிய உணர்ச்சியும் தனிமை உணர்ச்சியும் என்றுமே இருந்ததில்லை என்பதை அவள் உணர்ந்தாள். கடந்த சில வருஷங்களாகவே அவள் ஏதோ ஒரு முக்கியமான, நன்மைதரும் விஷயத்தையே எப்போதும் எதிர்பார்த்து எதிர்பார்த்துப் பழகிப்போய் விட்டாள். அவளைச் சுற்றிலும் உற்சாகமும் உவகையும் நிறைந்த இளைஞர்களின் கலகலப்பு நிறைந்திருந்தது; அந்த நன்மைக்கெல்லாம், எனினும் ஆபத்தான வாழ்க்கைக்கெல்லாம் தூண்டுகோலாயிருந்த தன் மகனது முகத்தையே அவளுக்குப் பார்த்துப் பார்த்துப் பழக்கமாகியிருந்தது. இன்றோ, அவன் போய்விட்டான்; அவன் மட்டுமா? எல்லாமே போய் விட்டன!

அன்றைய பகலும், அந்த நாள் இரவும் மெதுவாகக் கழிந்தன. இதையும் விட மெதுவாக நகர்ந்தது அடுத்த நாள். யாராவது வருவார்கள் என்று அவள் எதிர்பார்த்தாள்; யாருமே வரவில்லை. மாலை வந்தது. கருக்கிருளும் சூழ்ந்தது. குளிர் படிந்த மழை பெருமூச்செறிந்து கொண்டே சுவர்களிலும் சலசலத்துப் பெய்தது; புகைக் கூண்டுவழியாக ஊதைக்காற்று ஊளையிட்டு அலறிற்று. தரைக்கடியிலே ஏதோ ஓடுவது போலிருந்தது. கூரைச்சரிவிலிருந்து மழைத் துளிகள் சொட்டின; அவை சொட்டிச் சொட்டி விழும் ஓசையும், கடிகாரத்தின் பெண்டுல ஓசையும் ஒன்றோடு ஒன்றாய் முயங்கிக் கலந்து ஒலித்தன; அந்த வீடுமுழுவதுமே லேசாகத் தலையசைத்து ஆடுவது போலத் தோன்றியது. மனத்திலே கவிந்திருந்த சோக உணர்ச்சியால் சுற்றுப்புறத்தில் இருந்து பழகிப்போன பொருள்கள் அனைத்தும் உயிரற்றனவாகவும், அன்னியமாகவும் தோற்றம் அளித்தன.

ஜன்னல் கதவில் யாரோ தட்டுகின்ற ஓசை கேட்டது. ஒரு தடவை, இரண்டு தடவை. அவளுக்கு அந்த மாதிரி ஓசை பழகிப்போனதுதான், எனவே அவள் அதைக் கேட்டுப் பயப்படுவதில்லை. ஆனால் அன்று அந்த ஓசையைக் கேட்டதும் இதயத்தில் இன்ப வேதனை சில்லிட்டுக் குளிர, அவள் துள்ளி எழுந்தாள். தெளிவற்ற நம்பிக்கைகள் அவளை உடனே எழுந்து நிற்கச் செய்தன. தன் தோள் மீது ஒரு போர்வையை இழுத்துப் போட்டுக்கொண்டு அவள் கதவைத் திறந்தாள்.

சமோய்லவ் உள்ளே வந்தான்; அவனைத் தொடர்ந்து இன்னொருவனும் வந்தான். அவன் தன் தொப்பியை நெற்றி வரையிலும் இழுத்து விட்டிருந்தான்; கோட்டுக் கொலரை மேல்நோக்கித் திருப்பி மடித்துக் கழுத்தையும் முகத்தையும் மூடியிருந்தான்.

"உங்களை எழுப்பிவிட்டோமா நாங்கள்?" என்று வணக்கம் கூடச் சொல்லாமல் கேட்டான் சமோய்லவ்; வழக்கத்துக்கு மாறாக அன்று அவனது குரலில் ஆர்வமும் சோகமும் கலந்து தொனித்தன.



"நான் தூங்கவே இல்லை" என்று பதிலளித்துவிட்டு, அவர்களது பேச்சையே எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள்.

சமோய்லவின் கூட்டாளி தனது தொப்பியை அகற்றி விட்டு, கரகரத்துச் சுவாசித்தான்; தனது தடித்த கரத்தை நீட்டினான்.

"வணக்கம், அம்மா! என்னைத் தெரியவில்லையா?" என்று ஒரு பழைய நண்பனைப்போல் உரிமையோடு கேட்டான்.

"நீங்களா?" என்று காரணகாரியம் தெரியாது திடீரென எழுந்த உவப்போடு கேட்டாள் பெலகேயா; "இகோர் இவானவிச்சா?"

"அவனேதான்!" என்று பதிலளித்துவிட்டு அவன் தேவாலயப் பாடகர்களின் முடியைப்போல் வளர்ந்து இருந்த அவனது நீண்ட மயிர் நிறைந்த தலையைத் தாழ்த்தி வணங்கினான். அவனது முகத்தில் புன்னகை தவழ்ந்தது; அவனது சிறிய சாம்பல் நிறக் கண்கள் தாயைப் பரிவுடன் நோக்கின. அவன் ஒரு தேநீர் பாத்திரத்தைப்போல் உருண்டையாகவும் சிறிதாகவும் தடித்த கழுத்தும் குட்டைக் கைகளும் உடையவனாகவும் இருந்தான். அவனது முகம் பிரகாசித்தது; நெஞ்சுக்குள்ளே ஏதோ கரகரத்து உறுமுவதுபோல அவன் ஓசையெழும்பச் சுவாசித்தான்.

"நீங்கள் அறைக்குள் போங்கள். நான் உடை மாற்றிக் கொண்டு வருகிறேன்" என்றாள் தாய்.

"நாங்கள் ஒன்று கேட்க வந்திருக்கிறோம்" என்று அக்கறையோடு சொல்லிக் கொண்டே, புருவங்களுக்கு மேலாக அவளை ஒரு பார்வை பார்த்தான் சமோய்லவ்.

இகோர் இவானவிச் அடுத்த அறைக்குள் சென்று அங்கிருந்தே பேசத் தொடங்கினான்.

"இன்று காலை நிகலாய் இவானவிச்-அவனை உங்களுக்குத் தெரியுமல்லவா-அவன் சிறையிலிருந்து இன்று காலையில் வெளிவந்து விட்டான், அம்மா..." என்று ஆரம்பித்தான் அவன்.

"அவன் சிறையிலிருந்ததே எனக்குத் தெரியாது" என்றாள் தாய்.

"இரண்டு மாதமும் பதினொரு நாளும் ஆகிறது. அவன் அங்கே அந்த ஹஹோலைப் பார்த்தானாம். ஹஹோல் உங்களுக்குத் தன் வந்தனங்களைத் தெரிவிக்கச் சொன்னானாம். பாவெலும் சொல்லியனுப்பியிருக்கிறான். நீங்கள் வீணாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறான். அவன் தேர்ந்தெடுத்த மார்க்கத்தை வேறு யார் யார் தேர்ந்தெடுத்தாலும் அவர்களுக்குச் சிறையிலே சில காலம் ஓய்வுபெறும் ஆனந்தம் கிட்டும் என்பதையும் அவன் உங்களிடம் சொல்லச் சொல்லியிருக்கிறான். நம்முடைய முதலாளிகளின் தயவால் ஆனந்தம் கிட்டுவது நிச்சயமாம்! சரி நான் வந்த விஷயத்தைக் கவனிக்கிறேன், அம்மா. நேற்று மொத்தம் எத்தனை பேரைக் கைது செய்தார்கள், தெரியுமா?"

"ஏன்? பாவெலைத் தவிர, வேறு யாராவது உண்டா?" என்று கேட்டாள் தாய்.

"அவன் நாற்பத்தொன்பதாவது நபர்" என்று அமைதியாய்க் குறுக்கிட்டுப்பேசினான் இகோர் இவானவிச்; "தொழிற்சாலை நிர்வாகம் இன்னும் குறைந்த பட்சம் ஒரு டஜன் ஆட்களையாவது உள்ளே தள்ளும்! இதோ இந்த இளைஞனைக்கூட!"

"ஆமாம். என்னைக் கூடத்தான்" என்று சோர்ந்து போய்ச் சொன்னான் சமோய்லவ்.

பெலகேயாவுக்கு என்ன காரணத்தாலோ முன்னைவிடச் சுலபமாகச் சுவாசிக்க முடிந்தது.

"நல்ல வேளை. அவன் மட்டும் அங்கு தனியாகத் தவிக்க மாட்டான்" என்ற எண்ணம் அவள் மனத்தில் மின்னிட்டு மறைந்தது.

உடை உடுத்தி முடிந்தவுடன், அவர்களோடு கலந்து கொண்டாள் அவள்.

"இத்தனை பேரைக் கொண்டு போனால், அவர்களை அதிக நாள் உள்ளே வைத்திருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறேன்."

"நீங்கள் சொல்வது ரொம்ப சரி" என்றான் இகோர் இவானவிச். "இந்த மாதிரியாக அவர்கள் கெடுபிடி செய்வதை மட்டும் தகர்த்து விட்டால், அப்புறம் அவர்கள் தங்கள் வாலைச் சுருட்டிக் கொண்டு ஓட வேண்டியதுதான், ஆமாம். நாம் மாத்திரம் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதை நிறுத்திவிட்டால், பொலிஸ்காரர்கள் இதுதான் சாக்கு என்று பாவெலையும் அவனோடு சிறையில் தவிக்கும் தோழர்களையும் தாக்க முனைவார்கள்."

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று பதறிப்போய்க் கேட்டாள் தாய்.

"சின்ன விஷயம் தான்!" என்று பதிலளித்தான் இகோர் இவானவிச். "சமயங்களில் பொலிஸ்காரர்கள்கூட தர்க்கரீதியாகச் சிந்திக்கிறார்கள். நீங்களே நினைத்துப்பாருங்களேன். பாவெல் இருந்தான்-துண்டுப் பிரசுரங்களும் அறிக்கைகளும் பரவிக்கொண்டிருந்தன. பாவெல் இல்லை-துண்டுப் பிரசுரமும் அறிக்கைகளும் இல்லை. எனவே அவன்தான் அவற்றைப் பரப்பினான், இல்லையா? அவர்கள் ஒவ்வொருவரையும் கடித்துக் குதறித் தீர்க்க முனைவார்கள். பொலிஸ்காரர்கள் ஒருவனைச் சின்னாபின்னமாக்குவதென்றால், அந்த மனிதன் இருந்த இடம் தெரியாமல் செய்து விடுவார்கள். அதுதான் அவர்கள் வழக்கம்!"

"எனக்குப் புரிகிறது" என்று துக்கம் தோய்ந்த குரலில் சொன்னாள் தாய். "அட கடவுளே! நாம் இப்போது என்ன செய்வது?"

"அவர்கள் அநேகமாக எல்லோரையுமே பிடித்துவிட்டார்கள். அவர்கள் நாசமாய்ப் போக!" என்று சமையலறையிலிருந்து சமோய்லவின் குரல் ஒலித்தது. "நாம் நமது வேலையைத் தொடர்ந்து நடத்த வேண்டியதுதான். இது நாம் கைகொண்டுள்ள லட்சியத்துக்காக மட்டும் அல்ல; நமது தோழர்களைக் காப்பாற்றுவதற்கும் கூடத்தான்!"

"ஆனால் வேலை செய்வதற்குத்தான் ஆளில்லை" என்று சிறு சிரிப்புடன் கூறினான் இகோர். "என்னிடம் அருமையான முதல்தரமான பிரசுரங்கள் எல்லாம் இருக்கின்றன; எல்லாம் என் கைப்பட எழுதியவை. ஆனால் அவற்றை எப்படித் தொழிற்சாலைக்குள்ளே கொண்டு செல்வது-அதுதான் இன்னும் தீராத பிரச்சனை!"

"அவர்கள் தொழிற்சாலை வாசலில் ஒவ்வொருவரையும் சோதனை போட்டுத்தான் உள்ளே விடுகிறார்கள்" என்றான் சமோய்லவ்.

அவர்கள் தன்னிடமிருந்து ஏதோ பதிலை எதிர்பார்ப்பதாகத் தாய்க்குத் தோன்றியது.

"எப்படி இதைச் செய்ய முடியும்? எப்படிச் செய்வது?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள் அவள்.

சமோய்லவ் வாசல் நடைக்கு வந்தான்.

"பெலகயா நீலவ்னா, உணவு விற்கிறாளே, மரியா கோர்சுனவா அவளை உங்களுக்குத் தெரியும் அல்லவா?"

"ஆமாம். அதற்கென்ன?"

"அவளோடு பேசிப்பாருங்கள். ஒருவேளை அவள் அவற்றை உள்ளே கொண்டுபோகக்கூடும்."

ஒப்புக்கொள்ளாத பாவனையில் தாய் தலையை ஆட்டினாள்.

"இல்லையில்லை. அவள் ஒரு வாயாடி, அவள் அந்தப்பிரசுரங்களை என்னிடமிருந்துதான் பெற்றாள் என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் அந்தப் பிரசுரங்கள் இந்த வீட்டிலிருந்து தான் வந்தன என்பது தெரிய நேர்ந்தால்-அது முடியவே முடியாது!"

பிறகு அவள் திடீரென்று ஏற்பட்ட உணர்ச்சி பரவசத்தோடு பேசினாள்:

"அவற்றை என்னிடம் கொடுங்கள்; கொடுங்கள் என்னிடம் நான் பார்த்துக் கொள்கிறேன். நான் ஒருவழி செய்கிறேன், மரியாவை என்னை ஒரு கையாள் மாதிரிக் கூட்டிக்கொண்டு போகும்படி கேட்கிறேன். எனக்கும் பிழைப்புக்கு ஒரு வழி வேண்டும் அல்லவா? எனவே நானும் தொழிற்சாலையில் சாப்பாடு விற்கச் செல்கிறேன். அப்போது நான் சமாளித்துக் கொள்கிறேன்."

(தொடர்ந்து வரும்)

## கடிதமாய் ஒருகதை



# வடக்கு நோக்கிய சிறகடிப்புகள்

### ஒட்டமாவடி - அறபாத்

அன்புள்ள வதனா வணக்கம்.

இவண் நலம். உன் நலம் நாடி ஜெபிக்கின்றேன்.

இன்றுதான் உனது கடிதம் பெற்றேன். வடக்கின் நெருக்குதல் சூழ்ந்த இயல்பையும் மீறி, உன் கடிதம் கிடைத்ததும் எப்படி ஆனந்தித்தேன் தெரியுமா? வதனா ஒரு முறை யாழ்ப்பாணம் வர ஆசையாய் உள்ளது. உனது அப்பா விமானத் தாக்குதலால் செத்ததும், உன் அண்ணாவை 'அவர்கள்' சுட்டதும், உன்னை எப்படி உசுப்பி இருக்குமென்று அறிவேன். கடைசியாக என் உறவினர்கள் தம் தாயகம் விட்டு பிரியும் போது அவர்களை அள்ளி மோந்து நீ கதறிய அந்த கொடூர நிமிடங்களை என்னிடம் கூறினார்கள். என்மீதும், என் குடும்பத்தினர்கள் மீதும் நீ வைத்துள்ள பாசமும் பிணைப்பும், ஆயுதங்களுக்கு விளங்கவா போகிறது?

வதனா! அங்கே வர வேண்டும் என்று என் மனம் பரபரக்கின்றது. அறிவு மணக்கும் அந்த வெண்மணலில் கால்கள் புதையப் புதைய நான் நடக்க வேண்டும். சேர்ந்து விழுந்து அந்த மண்ணில் புரண்டு மீண்டும் எழுந்து, ஒரு பனையின் கீழ் அமர்ந்து, என் ரணங்கள் ஆற சுவாசிக்க வேண்டும்.

நீ, உன் தோட்டத்துப் பனையில் நொங்கு இறக்கி இரண்டாய் பிழந்து கரண்டியால் சுரண்டி, என் உள்ளங்கையில் அள்ளி வைப்பாயே அந்த ஞாபகங்கள் உண்டா? அந்த பனைமரம் இப்போது இருக்கின்றதோ இல்லையோ?

உனது வீட்டு முற்றத்தில் ஒரு தோடமரம் முன்பெல்லாம் அலாதியாய் காய்க்கும் இல்லையா? என்னால் இன்னும் ஞாபகிக்கும் ஓர் உணவு நீ ஒரு நாள் தந்த சுட்ட மரவள்ளிக் கிழங்குதான். வதனா நீ திருமணம் முடித்து பிள்ளை குட்டிகளுடன் இருப்பாய் என்று நினைக்கின்றேன்.

நமது தேசத்தின் மீது வேகமாய் அழுத்தும் இனவாதமும், போர்ப்புயலும் என்றுதான் தீருமோ? முன்பு போல் சுதந்திரமாய் ஆடமுடியாது. ஒரு திருவிழாவிற்கோ, பொது விழாவிற்கோ செல்ல முடியாது. நமது இலட்சியக்கனவுகள், இனிமையான நினைவுகள், இறுக்கமான உறவுகள். இந்த அர்த்தமற்ற யுத்தத்தினால் கருகி சாம்பலாய்ப் போவதை ஆசுவாசமாய் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லையே!

நீ இப்போதும் கவிதை எழுதுகிறாயா? உனது கவிதைகளின் இயல்பு இன்றைய நிர்ப்பந்தத்தால் திசை மாறி இருக்கலாம். ஆனால் நீயொரு யதார்த்தவாதி என்பது நாறிந்த உண்மைதானே. வதனா ஒரு 'சரோஜினி'யை இழந்த பீதி இன்னும் அகலவில்லை. நீ அவதானமாய் நடந்து கொள். பாம்பு தின்னும் ஊரில் இருந்தால் நடுத்துண்டை விரும்பித்தான் ஆக வேண்டும். பொதுவாக உனது பகுதி இலக்கிய செய்திகள், சஞ்சிகைகள் இங்கு வருவதில்லை. கிழக்கின் சில படைப்புகள் உனக்கு கிடைத்திருக்கலாம் என எண்ணுகின்றேன்.

எமது பகுதி இலக்கியம் பற்றி கேட்டிருந்தாய். 'கவிஞர்கள், பிறக்கும் போதே அவன் கவிதை ஒன்று சொல்வானோ என்று ஐயப்படும் அளவிற்கு மலிந்து விட்டனர். உண்மையை கூறி காத்திரம் பேணி இலக்கியத்தரம் பற்றி விழிப்பூட்டினால் இன்றைய கவிஞர்களை 'சுடுவேன்' என்கிறார்கள். அடிப்பேன் என்று மிரட்டுகிறார்கள். "வாளைவிட வலிமையானது பேனா முனை' இங்கே இலக்கிய வியாபாரிகள் சிலருக்கு தவறுகளை இனங்காட்டக் கூடாதாம்.

வதனா உனது தேசத்து ஜனநாயகம்தான் இங்கேயும் சில நேரங்களில் தாண்டவமாடுகிறது. என்னை அன்பாக கவிஞ! என்று விழித்துள்ளாய். அந்த அடைமொழியை நான் என்றைக்கும் இட்டுக்கொள்ள, பிறர் பெயராகச் சூட்ட விரும்புவதில்லை. உனக்கு ஒன்றை சுவாரஸ்யமாய் கூறுகின்றேன். என்னுடன் முன்பெல்லாம் முகம் நிறைய புன்னகையாய் பேசியவர்கள் நான் அடிக்கடி எழுதத் தொடங்கியதிலிருந்து பேசுவதே கிடையாது. ஒதுங்கிப் போய், முகம் இறுக்கி பார்க்கிறார்கள். நீ சொல்வாயே 'காழ்ப்புணர்ச்சி' என்று அதுவாகத்தான் இருக்கும்.

வதனா! யாழ்ப்பாணம் இப்போது எப்படி இருக்கிறது? எனது கற்பனையில் அது ஒரு சுடலைப் பிரதேசமாய் இருக்குது. நீ எப்படி வாழ்கிறாயோ. இடிபாடும், இடிமுழக்கமும்-உனது பொறுமை எல்லையற்றது. வாழ்க்கைக்காக நீங்கள் உயிரைக்கூட தியாகம் பண்ணத் தெரிந்தவர்கள். துயரங்களை ஜீரணிக்கத் தெரிந்தவர்கள். நிம்மதி என்ற மங்கலான வெளிச்சத்தை நோக்கி சமாதானப் புறா பறக்காதா என்ற ஆவலும் ஆதங்கமும் எப்போதும் எனக்குள் கிளர்ந்தெழுகிறது.

வதனா, அண்மையில் உன்னை பாதித்தது பாரிசில் நடந்த சபாலிங்கத்தின் கொலை என்று குறிப்பெழுதியிருந்தாய். உனக்கு மட்டுமா-சமாதான விரும்பிகள் சுதந்திரவாதிகள் அனைவரையும் விசனப்படுத்திய ஈனச்செயல் அது.

இன்னும் நம் மண்ணின் நிம்மதிக்காய், இறப்புகள் காத்திருக்கலாம். உன் அம்மாவை அன்புடன் விசாரித்ததாகச் சொல். நமது நண்பர்கள், குறிப்பாக, கமலன், விசாலி, தேவி, சரோஜா இவர்களை நான் ஞாபகப்படுத்தியதாய்க் கூறு. உன் மறுமடலை எதிர்பார்த்து இங்கே நான்....!

பிரியமுடம்-
யார் என்று தெரியும் தானே.

# அவளும் அப்படித்தான்



என். உதயகுமார்

சிறுகதை

**1995** இல்......

"பெண்ணை எங்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது........"

ஐந்து லட்சம் காசும் இருபத்தைந்து பவுண் நகையும் போட சம்மதித்தீர்கள் என்றால் கல்யாணத் திகதியை நிச்சயித்திடலாம்..."

ராஜாலட்சுமி தனக்கே உரிய மிடுக்கான தொனியில் கூறிமுடித்தாள். அவளது பேச்சு பெண் பகுதியினருக்கு திருப்தியை ஏற்படுத்தவில்லையோ அல்லது அதிர்ச்சியைக் கொடுத்ததோ என்னவோ அவர்களிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. மௌனம் தான் அங்கே நிலவியது. செல்லத்துரைக்கு அவர்களது முகத்தில் தென்பட்ட ஏமாற்றத்தைப் பார்த்தபோது பரிதாபமாய்த் தானிருந்தது.

மனைவி ராஜாலட்சுமியை 'நீ பேசியது சற்று அதிகம்' என்பது போல் ஒரு பார்வை பார்த்தார் அவர். ஆனால் அடுத்த வினாடியே 'நீங்கள் பேசாமலிருங்கள் எல்லாம் எனக்குத்தெரியும் என்பது போல் மறு பார்வை வீசிய ராஜாலட்சுமியின் பக்கமிருந்து அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

"உங்களுக்கு ஒரே தரத்தில் கொடுக்க முடியாவிட்டால் பரவாயில்லை,.... தவணை முறையில் கொடுத்துவிட்டீர்கள் என்றால் போதும். ஆனால் எவ்வளவு காலத்துக்குள் என்பதை மட்டும் எழுதிக் கைச்சாத்திட்டு தந்தீர்களென்றால் நல்லது...

உங்களுடைய மகளுக்குத்தானே கொடுக்கப்போகின்றீர்கள்...."

சிரித்துக்கொண்டு கூறினாள் ராஜலட்சுமி.

'இதென்ன 'வட்டிக்கு' கொடுத்து வாங்கும் வியாபாரம் என்று திருமணத்தையும் நினைத்துவிட்டாள்..... தவணை முறையில் வசூலிக்கப் போகிறாளாமே..... அதுவும் எழுதி வாங்கிக் கொண்டு.....'

செல்லத்துரை அவளது பேச்சைக்கேட்டு மனசுக்குள் பொருமிக் கொண்டார். "நாங்கள் எத்தனையோ இடத்தில் பெண் பார்த்து விட்டோம். ஆனால் எங்கள் மகனுக்கு உங்களது மகள் காயத்திரியைத்தான் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதுதான் நாங்கள் இவ்வளவு விட்டுக்கொடுத்து வருகின்றோம்...." தொடர்ந்து கூறினாள் ராஜலட்சுமி.

'பொய்! அப்பட்டமான பொய் சொல்லுகின்றாளே இவள்! எத்தனை நல்ல இடங்கள் பொருந்தி வந்தும் இவளது அதிகப்படியான சீதனத்தாலே தானே எல்லாமே கை நழுவிப் போனது!' செல்லத்துரை மனசுக்குள் அவளை நினைத்துக் கண்டித்துக்கொண்டார்.

"நல்லா யோசித்து ஒரு முடிவுக்கு வாங்க. எங்களுடைய மகன் ரவிக்கு எந்தக் குறையுமில்ல. அழகு இருக்கு, படிப்பு இருக்கு எந்தக் கெட்டபழக்கமும் அவனுக்குக் கிடையாது. இதைவிட்டால் உங்களுடைய மகள் காயத்திரிக்கு நல்ல மாப்பிள்ளை கிடைக்க மாட்டான்."

ராஜலட்சுமி எவ்வளவு கூறியும் பெண் பகுதியினரிடத்தில் மௌனமே நிலவியது. எதிர்காலக் கனவுகளுடனும் ஆசைகளுடனும் நிறைந்த மனசுடன் வந்து நின்ற அவர்களது பெண் காயத்திரியின் முகத்தில் இப்போது, எங்கே அவையாவும் கனவுகளாகவே போய்விடுமோ என்ற கவலையின் ரேகை ஓடிக்கொண்டிருந்ததைப் பார்த்த செல்லத்துரைக்கு மனதிற்கு மிகவும் வேதனையாக இருந்தது.

"ராஜலட்சுமி! ஏன் இப்படி கொஞ்சம்கூட மனிதத்தன்மையேயில்லாமல் நடந்து கொள்கிறாய்? உன்னால் எப்படி இப்படியெல்லாம் பேசமுடிகிறது....? கடந்த காலத்தை உன் மனசு கொஞ்சமும் நினைத்துப்பார்ப்பதில்லையா....?"

"உன் கழுத்தில் எந்த சூழ்நிலையில் தாலி ஏறியது என்பது உனக்கு மறந்து போய்விட்டதா ராஜலட்சுமி?

"அதை நான் இன்னும் மறந்துவிடவில்லை."

**1965** இல்....

"பெண் பெயருக்கு ஏற்றதைப்போல் மகாலட்சுமியாய்த் தானிருக்கிறாள்... எங்களுக்கு உங்கள் மகளைப் பிடித்துவிட்டது..."

அறைக்குள் படித்துக்கொண்டிருந்த செல்லத்துரையின் காதுகளில் இந்தப் பேச்சு விழுந்ததும் அவன் மனம் சந்தோசப்பட்டுக் கொண்டது.

'பாவம் ராஜலட்சுமி. எத்தனை இடத்திலிருந்து வந்து பெண் பார்த்துவிட்டுப் போயிருப்பார்கள்? இந்தத் தடவையாவது திருமணம் நிச்சயமாகிவிட வேணும்...' அவன் மனம் ராஜலட்சுமிக்காக கடவுளிடம் வேண்டிக்கொண்டது.

"இனி மற்ற விசயங்களைப் பற்றி பேசினால் நல்லது தானே...."

"............."

"பத்துப் பவுண் நகையும் இருக்கிறதுக்கு ஒரு வீடும் கட்டிக்கொடுத்தீர்களென்றால் போதும்..." இந்தப்பேச்சைக் கேட்டதும் செல்லத்துரையால் தொடர்ந்து பாடப்புத்தகத்தில் கவனத்தை செலுத்தமுடியாமலிருந்தது. அவன் மனம் வேதனைப்படத் துவங்கியது.

"இதுவே மிகவும் குறைந்த தொகைதான். இதைவிட ஒன்றும் குறைக்க முடியாது." இம்முறை கேட்ட பேச்சுக்குரலில் சற்றுக் கண்டிப்புத் தெரிந்தது. தொடர்ந்து ராஜலட்சுமியின் அப்பா கெஞ்சும் குரலில் பேசுவது கேட்டது. செல்லத்துரையால் மேலும் அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்க முடியவில்லை. உணர்ச்சி வேகத்தால் தள்ளப்பட்டு அவர்கள் முன் நின்றான்.

"ஐயா நீங்கள் பெரியவர்கள். இப்படி பெண்ணை வைத்துக்கொண்டு பேரம் பேசுவது உங்களுக்கே நியாயமாய்த் தோன்றுகிறதா?" இத்தனை நாளாய் வந்து போனவர்களிடம் கேட்கத் துடித்த கேள்வியை இன்று இவர்களிடம் கேட்டுத்தீர்த்துக் கொண்டான்.

"தம்பி......"

...."செல்லத்துரை. எங்கள் வீட்டில் ரூம் வாடகைக்கு எடுத்துப் படித்தக்கொண்டிருக்கிறார். மிகவும் நல்ல பிள்ளை" ராஜலட்சுமியின் அப்பா அவனை அறிமுகப் படுத்தினார்.

"ஐயா தயவு செய்து இந்தப் பெண்ணின் மனதைக் கொஞ்சம் நினைத்துப்பாருங்கள்"

"இந்தப் பெண்ணுக்காக வருத்தப்பட்டால் எங்கள் மகனின் நிலமை என்னவாகிறது?" அவரது பேச்சு செல்லத்துரைக்கு எரிச்சலை ஏற்படுத்தவே,

"மகாலட்சுமி என்று சொல்லிவிட்டு இப்படிச் சொல்லுகிறீர்களே" என்றான்.

"ஓஹோ, அப்படியென்றால் மகாலட்சுமியைப் போலிருக்கும் இந்த ராஜலட்சுமியை நீயே கல்யாணம் செய்து கொள்ளலாமே? உனக்கும் எனது மகனின் வயது தானே இருக்கும். எனக்கு நியாயம் கற்பிக்க வந்திட்டியே! உன்னால் முடியுமா தம்பி?"

அவரது பேச்சு செல்லத்துரைக்கு மட்டுமல்ல அனைவருக்குமே அதிர்ச்சியைக் கொடுத்தது. ராஜலட்சுமி அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"மிகவும் நன்றி ஐயா. இத்தனை நாள் என் மனதில் உதிக்காத இந்த எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தியதற்கு. ராஜலட்சுமியை நானே கல்யாணம் செய்து கொள்கின்றேன்."

செல்லத்துரையிடமிருந்து இப்படியொரு வார்த்தை வெளிப்படுமென்று எதிர்பாராததால் வந்தவர்கள் மௌனமாக வெளியேறினார்கள்.

"இரண்டு மாதங்களுக்குப் பின் என் படிப்பு முடிந்து விடும். அதன் பிறகு முறைப்படி என் பெற்றோரை அழைத்து வந்து ராஜலட்சுமி கழுத்தில் தாலி கட்டுகிறேன்....."

"ராஜலட்சுமி ஏன் உனக்கு இன்று இதை நினைத்துப்பார்க்க தோன்றவில்லை? அந்தப் பெண்ணின் மனம்படும் வேதனையை புரிந்து கொள்ளத்தெரியவில்லை? பணம், அந்தஸ்து என்று வசதிகள் வந்தவுடன் அவை உன் கண்ணை மறைத்துவிட்டதா...?" செல்லத்துரை, இனியும் தான் வாய்திறக்காமலிருந்தால் அன்று அவர் செய்த 'புரட்'சிக்கு அர்த்தமில்லாமல் போய்விடும் என்று தோன்றவே, அங்கு நிலவிய மௌனத்தை அவர் கலைத்தார்.

"பரவாயில்லை. உங்கள் வசதிப்படி செய்து பெண்ணை அனுப்பிவைத்தால் போதும். சந்தோசமாக நாங்கள் ஏற்றுக் கொள்வோம்....." திடீரென்று அவரது பேச்சு பெண்பகுதியினரிடத்தே மறுபடியும் முகமலர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் ராஜலட்சுமியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"என்ன பேசுகிறீர்கள்!" என்றாள்...

"ராஜலட்சுமி, உன் கழுத்தில் தாலி ஏறியதைக் கொஞ்சம் நினைத்துப்பார்" என்ற செல்லத்துரையின் ஒரு வார்த்தையில் அவள் அடங்கிப்போனாள். அதன் பின்பு அவள் வாயே திறக்கவில்லை.

தட்டுகள் மாற்றிக் கொள்ளப்பட்டன.

**2020** இல்......

"பெண்ணை எங்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது. எங்களுடைய மகன் உங்களது மகளுக்குத் தான்....

ஐம்பது பவுண் நகையும் இருபத்தி ஐந்து லட்சமும் கொடுத்தீர்களென்றால் போதும்...."

காயத்திரி தனக்கேயுரிய மிடுக்கான தோரணையில் கூறிமுடித்தாள்...

---

**"எனக்குத் தேவை - பணத்தையும் பகட்டையும் புறக்கணித்து மனித நேயத்தை விரும்பும் மனைவி"**

# அவளுக்காக

-அம்தரவல்ல நிலாவாசன்-

**"நிலா**
**சோகங்கள்தான்**
**சொந்தங்கள் என்று**
**சொல்லியனுப்பாதே.**
**நான்**
**சோர்ந்து போகின்றேன்...."** என்று படிக்கிறான் நிலாம். அவனை வியப்போடு பார்க்கிறான், கவிதையே புரியாத ஷாஜஹான். "என்ன சொல்கிறாய்...?" என்று வியப்புடன் கேட்கிறான்.

"என்ன சொன்னேனா?" படித்தது கவிதை என்று கோபப்பட்ட நிலாம் "மெமொரியல் சேர்விஸஸ்" என்னும் பொதுநல அமைப்பின் பணிப்பாளன். தொழிலால் அவன் ஒரு கம்பனியின் நிர்வாகப் பணியில் இருப்பவன்.

"சரி....சரி...விபரம் கூறு" என்கிறான் சரித்திரப் பெயர்கொண்ட ஷாஜஹான். நிலாமின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளவன். பொதுத் துறைக்கும் தொழிற் துறைக்கும் சம்பந்தமில்லை... என்று செயற்படுபவன். நிலாமின் திட்டுக்குப் பயந்து அவனை அனுசரித்துப் போகிறவன்.

நிலாம் சொல்கிறான். "இது பியாஸா வுடைய கவிதை."

"பியாஸாவா? கேள்விப்பட்ட பெயராக இருக்கிறதே.." என்று கன்னத்தில் கை வைத்து சிந்திக்கிற சாட்டில் சிரிக்கிறான் ஷாஜஹான்.

"மறதிப் பையா, மண்டு! பியாஸா உன் சிநேகிதி அல்ல சகோதரி."

"ஆமாமா, அவ ஹொஸ்டலில் தங்கி படித்துக்கொண்டிருக்கிறா.. என்று நினைக்கிறேன்."

"நினைக்கிறாயா.." என்று கை ஓங்குகிறான் நிலாம். சிரித்துக்கொண்டே விலகும் ஷாஜஹான் "என் தங்கச்சி அதுவும் நிலா என்று உன்னை விளித்து உனக்கு கவிதை எழுதியிருக்கிறா..என்ன அர்த்தம்?"

சத்தியமாக ஷாஜஹான் முகத்தில் கோபம் இல்லை. கிண்டல்தான் நிறைந்திருக்கிறது. நிலாம் புன்னகைத்தவாறே சொல்கிறான்.

"அவள் என்னை அழைப்பது அவ்விதம் தான். டன்டன்டன்."

"அதென்ன டன்டன்டன்?"

"பக்க வாத்தியம்."

"நீ கிழிக்கிற கிழிக்கு இது வேறயா?"

"அறைந்தால் முப்பத்திரெண்டும் கொட்டும் ராஸ்கல்."

"உண்மைய சொன்னா பொத்துக் கொண்டு வருதா?"

"விளையாடுறியா, விஷயத்தக் கேளு."

"கேட்கிறதுக்கு என்ன இருக்கு? அண்ணனைவிட அந்நியனோடதான் அவளுக்கு ஒட்டுதல் அதிகம்."

"நான் என்ன அந்நியனா...?ஃபூல்."

"அப்ப... அனியனா..?"

"நான் வெங்காயமாவா தெரியிறேன்? பரவாயில்லை. என் எதிர்கால மச்சான் என்பதால் பொறுத்துக்கொள்கிறேன்.

"நிலாம்..!" என்கிறான் ஷாஜஹான். அந்த விளிப்பில் புரியாமை இருக்கிறது. கண்களில் வியப்பும் அதிர்ச்சியும் இருக்கிறது. கேளிக்கை தகர்ந்து ஒரு புரியாக் கேள்வி தொற்றி நிற்கிறது.

"ஏன்...ஏன்..."

"நிலாம் நீ சொல்றது விளையாட்டுத் தானே...?"

நிலாம் புன்னகைக்கிறான். அதன் அர்த்தம் பொய்யல்ல என்பதை உணர்த்துகிறது ஷாஜஹானுக்கு.

"ஷாஜஹான் நான் சீரியஸாகத்தான் சொல்கிறேன். ஏன் நீ விரும்பவில்லையா..?"

"அது வந்து..."

"சொல்லு, உன் விருப்பம் என்னான்னு நானும் தெரிஞ்சிக்கணும்."

"சொல்றேன்னு தப்பா நினைக்காதே, உன் செல்வமும் செல்வாக்கும் என் தங்கச்சிய ஏற்றுக் கொள்ளுமா?"

"அந்த செல்வாக்கு உன் ஃபேமிலிக்கு இல்லையா?"

"செல்வாக்கு இருக்கு. ஆனா உனக்குப் பொருந்துகிற மாதிரி..."

"என்னடா சொல்ற..?"

"லுக் நிலாம். இந்த சம்பந்தத்தில அர்த்தம் இல்ல. என் தங்கச்சிக்கு இந்த அளவு உசத்தி வேணாம். ஒரு சாதாரண வாழ்க்கை. அது போதும்... ஏன்னா.."

"ஏன்னா...என்ன, அவ ஒரு ஊமை. இல்லையா? பேச முடியாதவ. இல்லையா? அந்த உடற் குறை என் உயர்ந்த அந்தஸ்த்துக்கு ஏற்றமா இருக்காது. அப்படித்தானே? ஃபூல் ஏண்டா இப்படி என்னை ஒரு மூன்றாம் மனிசனாக்கிப் பேசுற...?"

நிலாமின் வார்த்தைகள் கோபத்தைக் கொட்ட அதை ஒரு புன்னகையுடன் ஆதரித்துவிட்டுச் சொல்கிறான் ஷாஜஹான்.

"நீ பேசுறது கேட்க நல்லாத்தான் இருக்கு. யோசிச்சுப்பாரு. உன் ஃபேமிலி



இமயத்தில இருந்து கொண்டு வானத்தத் தொடத் துடிக்கிறவங்க. அடுத்து உனக்குப் பெண் தர ஆயிரம் பேர் இருப்பாங்க. இதெல்லாத்தையும் புறக்கணிச்சு என் தங்கச்சிய நீ மெரி பண்ணினேன்னு வெச்சுக்கோ...நாளைக்கு எல்லோரும் என்னைத்தான் குற்றம் சொல்வாங்க."

நிலாம் வாய்விட்டுச் சிரித்தான்.

"எனக்குப் பெண் தரப் போறியா? இல்ல என் கௌரவத்துக்கும் அந்தஸ்த்துக்கும் பெண் தரப் போறியா?"

"பியாஸா எனக்குத்தான் தேவ. அதப் புரிஞ்சுக்கோ. என் செல்வமும் செல்வாக்கும் என் சேவைகளுக்கு ஆயுதமே தவிர பகட்டுக்கும் பணக்கார வாழ்க்கைக்கும் அல்ல."

"சோகங்களை சொல்லி அனுப்பாதே நான் சோர்ந்து போகிறேன்னு தங்கச்சி எழுதியிருக்கா. என் சொத்துக்களவிட சோகங்கள விசாரிக்கிறதிலதான் அவவுக்கு ஈடுபாடு இருக்கு. அதனாலதான் சோர்ந்து போகிற அளவுக்கு யோசிக்கிறா. என் சாதனைகளையும் வெற்றிகளையும் விவாதிக்கிறதில அவவுக்கு விருப்பம் இருக்கு. தெரியுமா உனக்கு?"

"உன் தங்கச்சிங்கிறதுக்காக நான் அவவை விரும்பல்ல. ஊமைப் பொண்ணாச் சேன்னு அவமீது ஏற்பட்ட அனுதாபத்துக்காக அவவைத் திருமணம் செய்ய நினைக்கிறதாகவும் நீ எண்ணக்கூடாது. ஊமையாப் போனாலும் அடிச்சுப் போடுகிற அழகும் அறிவும் அவவிடம் நிறைஞ்சிருக்கு.

"யோசிச்சுப்பாரு. ஊனம் ஒரு குறையல்ல...ன்னு உலகத்துக்குக் காட்ட நான் அவவ மெரி பண்றதில என்ன தப்பு? அது உலகத்துக்கு ஒரு பாடம். உடற் குறையுள்ள பெண்கள் உதவாக்கரைகள் என்று நினைக்கிற இளைஞர் சமுதாயத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு.

"எனக்குத் தேவை பகட்டையும் பணத்தையும் புறக்கணிச்சு மனித நேயத்தை விரும்பும் ஒரு நல்ல மனைவி. அந்தஸ்த்து கௌரவம் என்று இந்த சமூகம் நினைக்கிற சாக்கடைத் தத்துவங்களில் இருந்து தவிர்ந்து கொள்கிற பெண். அதுக்கு பியாஸா எந்த வகையிலும் குறைந்தவ இல்ல.

"நாளைக்கென்றாலும் அவவை நான் 'மெரி' பண்ணத் தயாரா இருக்கேன். நீ சரின்னு சொல்லு. இன்றைக்கே நகைகள் வாங்கலாம். இன்றைக்கே ஒரு நல்ல வீடு பார்க்கலாம். உன் தங்கச்சியா இருந்தாலும் அவ ஊமைத் தன்மய காரணம் காட்டி இளக்காரமா பேசாதே."

மிக நீண்ட நேரம் பேசி மூச்சு வாங்கிய நிலாமை நிதானமாகப் பார்க்கிறான் ஷாஜஹான். கண்களில் மிகைத்த நீர் இமைகளைத் தாண்டிச் சரிகிறது. புதிய உலகமும் புதிய நம்பிக்கையும் உள்ளத்தை கொஞ்சம் கொஞ்சமாய் ஆக்கிரமித்து நிற்க நிலாமைக் கட்டிக்கொள்கிறான்.

"நிலாம் நீ... நீ இமயமேதான். அறிவின் தாற்பரியம் உன்னிடம் மட்டும்தான் அப்படியே இருக்கு."

சொன்ன ஷாஜஹான் விழி நீரைத் துடைத்துக்கொள்கிறான். திரண்டிருந்த கவலையை இடித்துச் சரித்துவிட்டு பழைய கிண்டல் பக்கங்களைப் புரட்டுகிறான்.

"சேர் உங்களுக்குக் கீழ் வேலை செய்கிறவன் என்றாலும் ஆரம்பத்தில் உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படியத் தயங்கியதற்கு மன்னிக்கவும். இன்றைக்கே என் தங்கை பியாஸாவுக்கு அவ ஃபிரெண்ட் யெஸ்மினா மூலம் தகவல் அனுப்பி அழைத்து வந்து ஒரு நாள் குறிக்கிறேன்.

"அப்படியே ஆகட்டும்..." என்ற நிலாமின் சிந்தனைகள் சிறகடித்துப் பறக்க ஷாஜஹானின் இமைகளில் ஆனந்த ஈரம் பளபளக்கிறது. அவனைப் புன்னகையோடு பார்க்கும் நிலாமின் உள்ளத்தில் பியாஸா என்றைக்கோ அவனுக்கு எழுதிய பிறந்த நாள் கவியொன்று ஞாபகத்திற்கு வருகிறது.

**"நிலா.....**
**பொழுதுகளை**
**சந்தோஷமாக்கிக்கொள்.**
**உன் சந்தோஷங்களே**
**எனக்கு சங்கீதம்.**
**சோகங்களுக்குச் சமாதி கட்டிவிட்டு**
**சுகமாக இரு.**
**நீ**
**ஆரோக்கியமாய் இருந்தால்தான்**
**என் அயுள் அதிகரிக்கும்."**

நிலாமின் உள்ளம் நிறைந்து போகிறது.

# எதிரொலியால் இன்பம்!



தருவது ரசிகன்

## இலக்கிய நயம்

"வேகமாய் செலுத்தப்பா" என்றான்.

"வேகமாய்த்தான் செலுத்துகிறேன்"

என்றான் தேர்பாகன்.

பாவம், அவன் என்ன செய்வான். தேரில் அமர்ந்திருக்கும் உப சேனாதிபதியின் மன வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாதே.

இல்லாள், இனியாள், இதழ் தேன் எழிலாள் காத்திருப்பாள். வழி பார்த்திருப்பாள். வண்ண இதழ் மலர வரவேற்கத்துடித்திருப்பாள் என்று நினைத்து உப சேனாதிபதி பறக்க நினைக்கிறான்.

தேருக்கு சிறகுகள் இல்லையே. போருக்கு சென்றவனை விரைவாய் மானுக்கு நிகரானவளிடம் கொண்டு செல்ல.

பாகன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"என்னப்பா சிரிக்கிறாயா? உனக்கும் ஒருத்தி வாய்த்தால்தான் வதை தெரியும். இடையிலே பிரிந்திருக்கும் வலி தெரியும்"

என்றான் உப சேனாதிபதி. பாகன் பதிலேதும் சொல்லவில்லை.

"நீ யாரையாவது காதலித்திருக்கிறாயா? அல்லது காதலிக்கலாம் என்றாவது நினைத்திருக்கிறாயா?"

உப சேனாதிபதி கேட்டான்.

"இல்லை பிரபு."

"கொடுத்து வைத்தவன் நீ."

"ஏன் பிரபு?"

"சொல்லிப் புரியாது காதலின் வேதனை."

"காதல் அத்தனை கொடியதா பிரபு?"

"இனிதான கொடுமையப்பா காதல். இன்ப நினைவுகளே இதயத்தை வதைக்கும். கனவுகளே தினமும் உறக்கத்தைப் பறிக்கும். புரண்டு புரண்டு படுத்தாலும் எதிரிப்படைகள் போல கற்கண்டு நினைவுகள் திரண்டு திரண்டு வந்து சீண்டும்."

பெருமூச்சு விட்டான் உபசேனாதிபதி. பாகனுக்குத்தான் ஒன்றும் புரியவில்லை.

'இன்ப நினைவுகளை இவர் கொடுமை என்கிறாரே. இது என்ன புதிர்.'

என்று நினைத்துக் கொண்டான். உப சேனாதிபதியோ பாகனுடன் பேச்சுக் கொடுத்தால் தூரம் போவது தெரியாது, நேரம் விரைவாய்-போய்விடும் என்று நினைத்தான்.

"படைத்தவன் மீதுதான் எனக்கு கோபம் வருகிறதப்பா!"

"ஏன் பிரபு?"

"அவன் ஏன் பெண்ணைப் படைத்தான்?"

பாகனுக்குள் உரத்த சிரிப்பு உற்பத்தியாகி, மரியாதை காரணமாக உள்ளேயே அடங்கிவிட்டது.

"என்னப்பா பதிலைக் காணோம்."

கேட்டுவிட்டு உரத்துச் சிரித்தான் உப சேனாதிபதி.

"வந்துவிட்டது பிரபு!"

"என்ன விடைதானே!-நல்லது சொல்லப்பா. கேட்கிறேன்."

"தங்கள் இல்லம் வந்து விட்டது பிரபு."

தேர் தரித்து நிற்க முன்பே துள்ளிக் குதித்து இறங்கினான் உப சேனாதிபதி.

□□

இல்லவாயில் கதவு திறந்தது. உள்ளே வண்ண நிலவு தெரிந்தது.

"வாருங்கள் அத்தான்"

"தாருங்கள் என்று கேள்"

தாவியணைத்து அவள் இதழ்களை தன் உதடுகளால் சிறைப் பிடித்தான்.

அவள் விடுவித்துக் கொண்டு,

"கதவு திறந்திருக்கிறது"

"இதழ் கதவுதானே!"

"சீ...இல்லக் கதவு."

சட்டென்று திரும்பி காலால் எட்டி உதைத்து கதவு மூடவைத்தான்.

அவன் வேகம் கண்டு அவளுக்குள் ஆசை பாதி-அச்சம் மீதி.

கதவு மூடப்பட்டவுடன் தன்னை நோக்கி சரிய வந்தவன் மார்பில் கைவைத்து அவள் சொன்னாள்:

"முதலில் உணவு."

"எத்தனை நாள் கனவு. தடுக்காதே. என் கனவை உடைக்காதே!"

"முடியாது!"

மறுத்தாள் விழிகளில் குறும்பு. இதழ்களில் புன் சிரிப்பு.

பணிந்தான். நீராடி, உடைமாற்றி வேகம் வேகமாய் உண்டான்.

மஞ்சத்தில் தூவியிருந்த மல்லிகை, முல்லை பூக்கள் மீது அவன். மனிதப் பூங்கொத்தாய் அவன் மார்பில் அவள்.

இரு கனிகள் அழுத்தும் வண்ணம் இறுகணைத்தான். அவள் தன் இதழ்கள் அவன் காதருகே கொண்டு சென்று,

"இத்தனை நாள் எப்படித்தான் பொறுத்திருந்தீர்கள் அத்தான்."

என்று கேட்டாள்.

"கட்டுண்டேன் கடமையாலே! அப்போதும் வெட்டுண்டேன் உன் நினைவினாலே. பத்திரமாய் சேர்த்துவைத்தேன் ஆசைகளை!"

"எங்கே சேர்த்து வைத்தீர்களாம்?"

"இங்கேதான்."

தன் மார்பில் கைவைத்துக் காட்டினான். அவள் குனிந்து தன் இதழ்களால் அவன் மார்பில் ஒத்தடம் கொடுத்தாள்.

அவன் உள்ளே இன்பநாதம். அம்மாடி அது என்ன உணர்ச்சி வெள்ளம்.

அவன் மார்பில் இதழ்களால் இன்பக் கதை எழுதியவள் நிமிர்ந்து உயர்ந்து வந்து அவன் உதடுகளை தன் பவள இதழ்களால் பத்திரமாய் வாங்கிக் கொண்டாள்.

தந்தக் கால்கள் இரண்டும் அவன் கால்களை அழுத்திக் கொண்டன. சுழியோ என்று வியக்கும் தொப்புள் அவன் வயிற்றில் பதிந்து கொண்டது. அவன் மார்பை ஊடுருவி மறைந்தனவோ இரு மாங்கனிகள்?

மஞ்சத்து மல்லிகையும், முல்லையும் என்ன பாவம் செய்தவையோ?

பூவையை சுமந்தவனுக்கு பாரமில்லை. பூவையையும், காளையையும் சுமந்த பூக்கள்தான் பாவம்.

மூச்சுக்கள் பரிமாறி, உயிருக்குள் உயிராக, உணர்வுகள் ஒன்றாக, உடலுக்குள் உடலாக, கடலுக்குள் மறைந்து போகும் உப்புத் துண்டாக ஒருவருக்குள் ஒருவர் காணாமல் போயினர் மஞ்சத்து போர் களத்தில்.

யாருக்கு ஆசை அதிகம்? மனம் கலந்த இல்லறத்தில் கண்டறிய முடியாத புதிர் அதுவன்றோ.

போர் இன்ப நடுவினிலே அவன் நினைத்தான் திரு வள்ளுவரின் குறள் ஒன்றை.

**'துனியும் புலவியு மில்லாயிற் காமங்**
**கனியுங் கருக்காயு மற்று'**

பிரிவினால் பெருகும் வேதனையும், கூடலின் முன் நேரும் ஊடலும் இல்லாவிட்டால் காமம் இனிக்கும் பதமான கனியாக இருக்காது. சுவையில்லா, பிஞ்சைப் போல் மாறிவிடும். குறளின் அர்த்தம் முற்றிலும் மெய் என்றுணர்ந்தான்.



கனிச்சுவையை அனுபவித்தான். காரியமே கண்ணாயினான். மஞ்சத்து பூக்கள் மேலும் நசிந்தன. காதல் நெஞ்சத்து பூவையோ சளைத்தாளில்லை.

அது ஏன்? அதையும் வள்ளுவரே சொல்லுகிறார்.

உருவத்தை பிரதிபலிக்கும் நல்ல தண்ணீர். அதுபோல ஒத்த விருப்பத்தை ஒருவருக் கொருவர் எதிரொலிக்கும் காதலர்கள் மத்தியிலே கூடல் இன்பம் தழைத் தோங்கும்.

**"நீரு நிழல தினிதே புலவியும்**
**வீழு நர் கண்ணே யினிது."**

அதிகாரம்- 131.
குறள்- 1310

## குறுக்கெழுத்துப் போட்டி இல—95

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | ■ | 2 | 3 | 4 | |
| 5 | | | ■ | | | ■ |
| | ■ | 6 | | | | |
| | ■ | | ■ | | | ■ |
| ■ | 7 | | 8 | | ■ | 9 |
| ■ | | ■ | | ■ | 10 | |
| 11 | | | | ■ | | ■ |

### இடமிருந்து வலம்

01. தமிழ் மாதங்களில் ஒன்று.
02. பணியாளுக்கு ஒத்த சொல்.
05. நிறைய இருந்தால் செல்வம்தான்.
06. நாடு முன்னேற இது அவசியம்.
07. இது ராசிகளில் ஒன்று.
11. தீர்ப்பு இவர் கையில்.

### மேலிருந்து கீழ்

01. ஜோதிடம் என்றுதான் பரவலாகச் சொல்லப்படும்.
03. சிலர் மனதில் இது உண்டு.
04. இது நோய்க்கும் மருந்தாகும்.
06. தீர அறிந்து இதனைத் தீர்க்க வேண்டும்.
07. மானிடர் மோதலில் இது கொட்டும்.
08. அடியார்களிடம் நிரம்பியிருப்பது.
09. அம்மா கொஞ்சுவார்.
10. முகத்திலே பயிர்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 08.04.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-95
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-93ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வா | க் | 2 கு | ■ | 3 பூ | ங் | 4 கா |
| லி | ■ | ம | ■ | மி | ■ | ல |
| 5 ப | க | ட் | டு | ■ | 6 மா | டி |
| ம் | ■ | ட | ■ | 7 இ | லை | ■ |
| ■ | 8 அ | ல் | ல | ல் | ■ | 9 கு |
| 10 கு | ரு | ■ | ■ | 11 ல | ட் | டு |
| ■ | 12 வி | யூ | க | ம் | ■ | மி |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.93இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. எம். ரெஜினோல்ட், கொட்டாஞ்சேனை.
2. செல்வி.எஸ். கவிதா, அப்புத்தளை.
3. கே. ஜெயந்தன், மூதூர்.
4. எம். நாசித், நிட்டம்புவ.
5, செல்வி.ஏ. முர்ஷிதா, காத்தான்குடி-06.
6. திருமதி.ஆர். சுப்புலக்ஷ்மி, மஸ்கெலியா.
7. சி. யோகநாதன், வரக்காப்பொல.
8. பி. பூபதி, தெலிகம.
9. செல்வி. சியாமா ஹுசைன், கெக்குனகொல்ல.
10. செல்வன். ஏ. ருக்ஷான், கண்டி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



காதலில் தோல்வியுறுவது ஆண்களா? பெண்களா?

ஆ.சிவகுமார்-கம்பளையூரான்.

இரு தரப்பிலும் ஏமாற்றப்படுவோர்.

□□

பிரேமானந்தா மாட்டிக்கொண்டது மகிழ்ச்சி தானே?

மா.வாகீசன்-கொழும்பு-06.

பாதி மகிழ்ச்சி மட்டும். இன்னமும் சில பிரேமானந்தாக்கள் வெளியில் இருக்கிறார்களே.

□□

காமத்தில் இருந்து காதல் தோன்றுவதா? காதலில் இருந்து காமம் தோன்றுவதா?

எம்.என்.எம்.லாபீர்-புல்மோட்டை.

இரண்டும் ஒன்றோடு ஒன்று சேர்ந்தது.

□□

சந்திரிக்கா- பிரபாகரன் பேச்சுவார்த்தை பற்றி உங்கள் கருத்து?

நஸ்லிஹா பரக்கத்துல்லாஹ்-எருக்கலம்பிட்டி-03.

இருவரும் இன்னும் பேசவேயில்லையே. கடிதங்கள் மட்டுமே பரிமாறப்பட்டுள்ளன.

□□

இன்றைய தமிழ் சினிமாவில் ஆள் பாதி ஆடை பாதி என்கிறார்களே?

ஏ.சிறீதர்-தெமோதர.

ஆடை பாதி என்பவர்கள் சமீபத்தில் வந்த சில சினிமாக்களை பார்க்கவில்லை என்று நினைக்கிறேன்.

□□

இந்திய அரசியலில் சோனியாவின் தலையீடு தாமதமாவதற்கான காரணம் என்ன?

ரூபி திருவெங்கடம்-மஸ்கெலியா.

ஓடு மீன் ஓடி உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு.

□□

உண்மையான பெண் சுதந்திரம் எதில் இருப்பதாக நினைக்கிறீர்கள்?

எம.எச. நிஸாம-நுகஹகெதர.

சமத்துவமான மனுஷியாக நடத்தப்படுவதில்! அவள் உணர்வுகள் கௌரவிக்கப் படுதலில்.

□□

டியர் சிந்தியா! வாழ்க்கையில் உண்மையான வெற்றி எது?

என்.எல்.முஸம்மில்-புதிய காத்தான்குடி-06.

நிம்மதியாக தூங்கி எழக் கூடியதாக இருப்பது.

□□

தான் பெற்ற பிள்ளை தகரமானாலும் தங்கம் என்று சொல்லும் தாய் பற்றி?

ஏ.எல்.முகமது பளீல்-காத்தான்குடி.

அவள்தான் தாய்! "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு"

□□

உண்மை- நடிப்பு இவ்விரண்டில் எதனால் உயரலாம்?

பிறேமலதன்-அக்கரைப்பற்று.

காலத்தில் சபை ஏறுகிறது. என்றாலும் அது தற்காலிகம்.

□□

உலகில் வானம் பெரிதா? மானம் பெரிதா?

யோ.விஜேந்திரன்-மட்/மண்டபத்தடி.

பெரிதுமில்லை, சிறிதுமில்லை, மானம் உயிருக்கு சமன்.

□□

காதல் தோல்வியில் துயர் மாறுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?

எஸ்.ரகுநாதன்-பூண்டுலோயா.

உள்ளத்தின் வெப்ப, தட்ப நிலையைப் பொறுத்த சமாச்சாரம் அது. சிலருக்கு ஆயுள்காலம் முழுக்க எடுக்கும் தெரியுமா!

□□

படித்தவர்களே சீதனத்தை எதிர்பார்க்கிறார்களே. அவர்கள் பற்றிக் கூறுங்களேன்?

எம்.மர்சூக்-தி/தோப்பூர்.

படிக்க செலவிட்ட பணத்தை வசூலிக்கும் புத்திசாலிகள்.

□□

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்று கூறிவிட்டு பேச்சுவார்த்தையில் அதனை கைவிடலாமா?

இ.இராசதுரை-கல்லடி.

கைவிட்டதாக யார் உங்களுக்கு சொன்னது இராசதுரை.

□□

ஆபத்தான மனிதர்கள் யார்?

என்.லதா-ஆரையம்பதி.

உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுவோர்.

□□

மாணவப் பருவத்தில் காதலிப்பது தவறா?

வி.பி.வினித்தா-மட்டுநகர்.

தவறு என்று சொன்னல் உங்களுக்கு கோபம் வரும். சரி-என்று சொன்னால் உங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு கோபம் வரும். வம்பு வேண்டாமே.

□□

**இவ்வாரம் (02.04.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

# மகாபாரதம்

**அங்கம் 74**

-காலத்தின் குரல்-

"மானிடனே இந்த மாய நிலை உலகை
மாதவத்தால் வெல்லும் மாண்பினை உடையவன் நீ!
உன்னுள்ளே சமுதாய முண்டென்று தானுணர்ந்து
பின்னமடையாதே. இப்பதியினிலே நீயுமொன்று!
போர்புரிதலேயுந்தன் பேரான பெருங்கடனாம் ;
ஆர்வமுடன் போராடி அதன் பலனை எந்தனிடம்
அர்ப்பணித்தா லுந்தன் அவலமெல்லாம் தீர்ந்து விடும்;
பேர் புகழும் பெரு வாழ்வும் பெறற்கரிய கீர்த்திகளும்
பெற்றுய்வாய் பார்த்தனே நின் போர்ச் செயலை
தாற்றிசையும் நலம் செழிக்க-நன்மை பெற நிலை நாட்டு"
பார்த்தனவன் சாரதியாய் வாய்த்த பரந்தாமனவன்
போர்க்களத்தின் நடுவினிலே பார்த்தனுக்குத் தானுரைத்தான்!

-காட்சி தொடக்கம்-

குருச்சேத்திரம்- அர்ச்சுனனுக்கு கிருஷ்ணர் உபதேசிக்கிறார்.

**கிருஷ்:** பார்த்தனே! பாபக்கடலைக் கடப்பதற்கு பகுத்தறிவே பிரதானம்! தீயானது எதையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கும் சக்தி வாய்ந்தது. கருமத்திற்குரிய பலனைப் பெறமுடியாது தடுக்கும் கோபம் மற்றும் பந்தபாசம் ஆகியவற்றை அறிவெனும் தீ சுட்டெரித்து விடுகிறது. அறிவினைப்போல் பவித்திரமானது வேறொன்றுமில்லை என்பதை மறந்து விடாதே! மேலான அறிவினைப் பெறாதவர்கள் - நம்பிக்கை அற்றவர்கள் எதற்கும் சந்தேகப்படுபவர்கள் அழிவுக்குரியவர்களே! அவர்கள் வாழ்ந்தாலும் இவ்வுலகில் மட்டுமல்லாமல் ஏனைய பிறவிகளிலும் மகிழ்ச்சியடைய முடியாதவர்களே! ஆகவே, பாரத சிரோமணியே! சந்தேகங்களைத் தவிர்த்து உன்னிடமுள்ள ஞானத்துக்கு வழிவிடு! அறிவின் எல்லையே அறிவுதான்!

**அர்ச்:** கேசவா! செயலின் பெருமையைப் பற்றிக் கூறுகின்றீர்கள், அதே செயலைத் துறந்து விடுமாறும் கூறுகின்றீர்கள். இவை இரண்டையும் எவ்வாறு இணைக்க முடிகிறது?

**கிருஷ்:** பொறாமை மற்றும் ஆசை போன்றவற்றை நீக்கி எவனொருவன் செயல் புரிகிறானோ அவன் நிரந்தர தவசியாகிறான். உலக பந்தங்களிலிருந்து அவன் விடுபடுகிறான். செயலினை எவன் வேள்வியாகக் கருதுகிறானோ அவன் தன்னலத்தையே மறந்து விடுகிறான். பஞ்சேந்திரியங்களின் செயற்பாட்டை உணர்ந்து இவற்றை மக்கள் நலனுக்காக செயற்படவைப்பவன் உயர் நிலை அடைகிறான். நீரில் பிறக்கும் தாமரை நீரோடு ஒட்டாமல் இருப்பதுபோல் அவன் பாபங்களிலிருந்து விலகி விடுகிறான்.

தனஞ்சயனே! கர்மயோகியானவன் தனது செயல்களனைத்தையும்-அதன் பலாபலன்களையும் தியாகம் செய்பவனாகி முழுமையான சக்தியைப் பெற்றுவிட்டால் ஒன்பது வாயில்களையுடைய இந்தக் கூட்டிலேயே பேரானந்தமடைகிறான்.

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை-

**திருத:** சஞ்சயா! இந்த உடலுக்கு ஒன்பது வாயில்கள் எப்படி வந்தன?

**சஞ்ச:** இரு கண்கள், இருகாதுகள், மூக்குத்துவாரங்கள், இரண்டு வாய் ஆகியவற்றுடன் மலவாயில், இனவிருத்திக்கான அவயவம் ஆகியவற்றை ஒன்று சேர்த்துத்தான் வாசுதேவன் இவ்வுடலை ஒன்பது வாயில் கொண்ட வீடு என்கிறார். தன்னலம் எனும் அழுக்கால் அசுத்தமடையாத வீட்டில்தான் ஆத்மா மகிழ்ச்சியுடன் இருக்க முடியும் என்கிறார். மனிதன் திசைமாறிப் போவதனால்தான் கிருஷ்ணர் இவற்றை இன்று கூறுகிறார்.

**திருத:** ஒன்பது வாயில் வீட்டை விட்டு அப்பால் செல்லுவோம்!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்-

**கிருஷ்:** அஞ்ஞான இருளால் ஞானம் மறைக்கப்பட்டுள்ளமையினால் மனிதன் நிலை தடுமாறுகிறான். சுய ஞானத்தால் அஞ்ஞானத்தை அகற்றினால் மனித வாழ்வு சாஸ்வதமானதல்ல என்ற உண்மை கதிரவனின் ஒளிபோல் பிரகாசிக்கிறது. அவர்கள் பிறப்பும் இறப்பும் அற்றவர்களாகி இந்தப் பிறவியிலேயே முக்தியடைந்து விடுகின்றனர். இந்தப் பிறவி நிரந்தரமல்ல என்பதனை உணர்ந்து, இப்பிறவியைப் பயனுள்ளதாக்குவது-சமூகத்துக்கு உரிய நன்மை புரிவதே அர்த்தமானதாகும். ஒளியாகிய ஞானத்தைப் பெற்று, இன்று நீ சிக்கியிருக்கும் மாயையிலிருந்து விடுபடுவாயாக! உண்மையான அமைதியை அடைவாயாக!

அமைதிக்கான நேரடிப் பாதையாக நானே விளங்குகிறேன்! யாகத்தின் முடிவு என்னிடமே சேர்கிறது என்பதனை எவன் அறிகிறானோ, ஒவ்வொரு மனிதனின் நலத்தைப் பேணுபவனும் யானே என்றும் உலகங்களின் நாயகன் யானே என்றும் எவன் உணர்கின்றானோ அவன் அமைதி அடைகிறான். உன் நன்மையைக் கருதுபவன் யான் என்பதனை நீ நம்புவாயானால் உன் கடமையாகிய போரில் ஈடுபடு! உனது கடமையிலிருந்து நழுவினால் நீ அமைதி காணவே முடியாது. பலனை எதிர்பாராமல் உன் கடமையைச் செய்! யார் இறப்பார்-யார் வாழ்வார் என்பது உன் பிரச்சனையல்ல. மனிதனே அவனின் நண்பன்; அவனே அவனுடைய சத்துருவும்! நட்புக்கும் விரோதத்துக்கும், குளிர்காலத்துக்கும் சூடான காலத்துக்கும், மரியாதைக்கும் அவமரியாதைக்கும், மகிழ்ச்சிக்கும் துக்கத்துக்கும் வளைந்து கொடுக்காமல்-நிலை தளம்பாமலிருப்பவன் சமநிலையினை எய்துகிறான். இவற்றை வெல்பவன் இறைவனிடம் ஐக்கியமாகி விடுகிறான். உணவு கொள்ளுதல், உறங்குதல் ஆகியவற்றில் சமநிலை பேணுபவன் வாழ்க்கையிலும் சமநிலை அடைகிறான். பந்த பாசங்களிலிருந்து விடுபடுபவன், காற்றினால் சீராக எரிய முடியாமல் தளம்பும் தீப ஒளியைப் போல் அல்லாமல், காற்றால் அலைக்கழிக்கப் படாமல் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நிலையான தீபத்தைப் போன்றவன். பார்த்தா! என்னைப் பார்! பார்க்கும் அனைத்திலும் என்னையே காண்பவன் கலங்கமாட்டான். என்னையே என்றும் சிந்தித்திருப்பவனை நான் என்றும் மறக்க மாட்டேன். உலகத்தில் அவன் வாழ்ந்தாலும் அவன் எப்போதும் என்னுடனேயே இருப்பான். தன்னைச் சுற்றியுள்ளவர்களின் சுக துக்கங்களை தன்னுடையதாகக் கருதுபவன் மிக உயர்ந்த நிலை அடைகிறான்.

**அர்ச்:** இம்மார்க்கத்தைக் கடைப்பிடித்தாலும் மனம் அலைகிறதே கண்ணா? கடவுளை அடைய எடுக்கும் முயற்சியில் மனம் அலைவதனால் பலன் கிடைக்குமா? மேகங்கள் கலைவதுபோல் அவனுடைய சிந்தனை சிதைகிறதே!

**கிருஷ்:** நற்பணிகள் எவ்வுலகிலும்-என்றும் பயனற்றுப் போவதில்லை. குந்தி



திருதராட்டிரரும் சஞ்சயனும்

மைந்தனே! நானே உண்மையின் முழு உரு! என்னைத் தியானித்து பலன்களை என்பால் ஒடுக்கு! சந்தேகமற்ற முழுமையான ஞானத்தையும் பெறுவாய். இயற்கையின் சகல அம்சங்களும் நானாகிய கயிற்றில்தான் தொங்குகின்றன. நீரிலுள்ள பதார்த்தமும் நானே! சூரிய சந்திரர்களின் ஒளியும் நானே! வேதங்களில் ஓம்காரம் நானே! விண்ணின் ஒலியாக, மண்ணின் வாசனையாக, தீயின் ஜுவாலையாக, வாழ்வனவற்றின் தவமாக, தோற்றத்தின் மூலக்கருவாக, ஞானியின் ஞானமாக, பலத்தின் உறுதியாக, ஜீவராசிகள் தர்மத்தைத் தவிர்த்து விடும்போது தடுத்தாட்கொள்பவனாக நானே விளங்குகிறேன். ஒவ்வொருவரிலும் நான் இருந்த போதிலும் ஒவ்வொருவரிடத்திலிருந்தும் வேறுபட்டே நிற்கிறேன். நேற்று வாழ்ந்தவர்களையும் நான் அறிவேன்; இன்றிருப்போரையும் அறிவேன்; இனிமேல் பிறக்கவிருப்பவர்களையும் நான் அறிவேன்! ஆனால் எவரும் என்னைப் பூரணமாக அறிந்து கொள்வதில்லை. தந்தையாகவும் தாயாகவும் தக்க போஷகனாகவும் நானே இருக்கின்றேன். இருக்கு வேத, சாம வேதங்கள் ஆகியவையும் நானே! ஆக்குவோனும் நானே; அழிப்போனும் நானே! நானே எல்லாமாகவுள்ளேன். வெப்பமாகவும் குளிராகவும்: காற்றாகவும் மழையாகவும்: வெய்யிலாகவும் இயங்கு பவனும் நானே! இத்தரணியின் சிதைக்க முடியாத மூலமும் நானே! எல்லோரையும் நான் நேசிக்கிறேன்! எவரையும் நான் வெறுப்பதில்லை. என்மீது நம்பிக்கை வைத்து பூஜிப்பவர்களிடம் நான் என்றும் இருப்பேன்!

**அர்ச்:** ஓ கிருஷ்ணா! ஆதி அந்தமில்லா ஆண்டவன் நீயே! சகலவற்றையும் படைத்தவனும் நீயே! நீயே அழிவற்ற முழுமுதல்! இறைவன் நீயே! யோகீஸ்வரா! ஞானமூர்த்தி! நான் எவ்வாறு தங்களை அறிந்து கொள்ள முடியும்? எவ்வாறு அடையாளம் காண்பேன்? மாதவனே எனக்குத் தெளிவாகக் கூறுங்கள்!

**கிருஷ்:** வர்ணிப்புக்கோர் எல்லையே இல்லை பார்த்தனே! உயிருள்ளவற்றின் உயிராயுள்ளேன்! தொடக்கமாகவும் இடைநடுவாகவும் அந்தமாகவும் உள்ளவன் நானே! ஆதியில் விஷ்ணுவாகவும் ஒளியில் சூரியனாகவும் உபகிரணங்களில் சந்திரனாகவும், வேதங்களில் சாமவேதமாகவும், தேவர்களில் இந்திரனாகவும், உருத்திரர்களில் சங்கரனாகவும் சிறு தெய்வங்களில் குபேரனாகவும் வசுக்களில் அக்னியாகவும், வேதியர்களில் பிரகஸ்பதியாகவும், சேனாதிபதிகளில் கார்த்திகேயனாகவும், நீர் நிலைகளில் சமுத்திரமாகவும், முனிசிரேஷ்டர்களில் புருகுமுனிவராகவும், வார்த்தைகளில் ஓம்காரமாகவும், யாகங்களில் ஐய்யாகமாகவும் பர்வதங்களில் இமயமாகவும், விருட்சங்களில் அரசாகவும், தேவரிஷிகளில் நாரதராகவும், கந்தர்வர்களில் சித்தார்த்தராகவும், வாரணங்களில் ஐராவதமாகவும் மனிதர்களில் நரபதியாகவும், ஆயுதங்களில் வஜ்ராயுதமாகவும், பசுக்களில் காமதேனுவாகவும், சர்ப்பங்களில் ஆதிசேஷனாகவும், அசுரர்களில் பிரகலாதனாகவும் வியாபித்திருக்கிறேன்! விஷ்ணுவின் வாகனமான கருடனும் நானே! இராமனும் நானே! இறப்பும் நானே பிறப்பும் நானே! பாண்டவர்களில் அர்ச்சுனனும் நானே! ரிஷிகளில் வியாசரும் நானே! புலவர்களுள் சங்கராச்சாரியாரும் நானே!

பார்த்தா எதுவும் என்னை தவிர்த்து வாழ முடியாது!

உயிர்வாழ்வனவற்றின் சுவாசமாகவும் நானுள்ளேன்!

**அர்ச்:** தாமரைக் கண்ணனே! என்கண்களைத் திறந்து விட்டீர், என்னைச் சுற்றியிருந்த மாய இருளை அகற்றி விட்டீர்! தாங்கள் கூறிய அனைத்தும் உண்மையே! ஓ பரம்பொருளே! தங்கள் முழுமையான தோற்றத்தை தரிசிக்க ஆசைப் படுகிறேன்.

**கிருஷ்:** உன்னுடைய ஊனக் கண்களால் என்னைக்காண முடியாது அர்ச்சுனா! அதற்கு தெய்வீகம் பொருந்திய ஞானக் கண்கள் வேண்டும்!

**கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு ஞான திருஷ்டியினை அளிக்கிறார். முதலில் எங்கும் நிறைந்த ஓம்காரம் உருவாகிறது. தொடர்ந்து மும்மூர்த்திகளின் உருவங்கள் தோன்றுகின்றன. கிருஷ்ணரின் திறந்த வாயினுள் அண்டசராசரங்களையும் அர்ச்சுனன் காண்கிறான். அர்ச்சுனன் வணங்கியபின் பழைய வடிவினை எடுக்கும்படி கிருஷ்ணரை வேண்டுகிறான்.**

**அர்ச்:** பரந்தாமா! தங்கள் விஸ்வரூபதரிசனம் கண்டு பரமானந்தமடைந்தேன். எங்கும் நிறைந்தவனே! தங்கள் உருவத்தைக் குறுக்கி பழைய உருக்கொள்ளுமாறு பணிவாக வேண்டுகிறேன்!

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை.

**திருத:** சஞ்சயா... அதென்ன உருவம் சஞ்சயா?

**சஞ்ச:** அந்தப் பிரமாண்டமான சொரூபத்தை என்னால் வர்ணிக்க முடியவில்லை மகாராஜா! தெய்வீகக் கண்களால் காண வேண்டிய காட்சி அது. வியாச மாமுனிவர் தங்களுக்கு அளிக்கவிருந்த ஞானதிருஷ்டியினை தாங்கள் பெற்றிருந்தால் அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டிருக்கலாமே!

**திருத:** எனது துர்ப்பாக்கிய நிலையினை சுட்டிக்காட்டுவதை விடுத்து அங்கு என்ன நடைபெறுகிறது என்பதனைக் கூறு சஞ்சயா!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்.

**அர்ச்:** பகவானே! என்னை மன்னியுங்கள்! நண்பனை நண்பன் மன்னிப்பது போல; தந்தை மகனை மன்னிப்பது போல, பகவான் பக்தனை மன்னிப்பது போல என்னை மன்னித்தருள வேண்டுகிறேன்.

**கிருஷ்:** உறவு,அன்பு, நம்பிக்கை ஆகியவற்றால் இணைக்கப்பட்டுள்ள எமக்கிடையில் மன்னிப்பு என்ற வார்த்தைக்கே இடமில்லை! என்மீது புலன்களைச் செலுத்தி, என்னுடன் இரண்டறக்கலந்து முழு நம்பிக்கையுடன் என்னைத் துதிப்பவனே சிறந்த யோகியாவான். என்னுடைய பக்தன் எப்போதும் உலகத்தில் தடுமாற மாட்டான். உலகம் அரசமரத்தைப் போன்றது. அதன் வேர்கள் பூமியின் மேலேயே படரும்; அதன் கிளைகள் அடியில் பரவும். அதன் இலைகள் வேதங்களைக் குறிக்கும். இதனை உணர்ந்தவர்கள் வேதத்தையும் புரிந்து கொள்வார்கள். தூய்மை மற்றும் நன்மை ஆகியவற்றின் தன்மைகளைக் கொண்ட சற்குணம், உயர்வுடைய சௌகரியமான படாடோபங்களைக் கொண்ட ரஜகுணம், இருளையும் அறியாமையையும் கொண்ட தபோகுணம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய நான்கு திசைகளிலும் அதன் கிளைகள் பரந்துள்ளன. அதன் ஆணிவேர், மனித சமூகத்தில் மிக ஆழமாகச் சென்று அதன் சுயஉருவத்தைக் காண முடியாதபடி புதைந்து உள்ளது. ஆகவே இதன் ஆதியையும் அந்தத்தையும் ஒரே நிலையில் காண்பது கடினம். இம்மூன்று குணங்களை உள்ளடக்கிய உலக பந்தங்களை, வைராக்கியம் என்னும் கோடரியால் வெட்டி வீழ்த்தக் கூடிய ஒருவன் மிகவும் உச்ச நிலையினை அடைகிறான். அந்நிலையிலிருந்து அவன் கீழே விழவே மாட்டான். உன் சிந்தனைகளை என்னை நோக்கித்திருப்பிக்கொள்! வணங்க வேண்டுமானால் என்னையே வணங்கு! வில்லுக்கு வீரனான விஜயனே! உன்னை என்னிடமே அர்ப்பணித்துவிடு! எனது அரவணைப்பில் ஒதுங்கிவிடு! பாவங்களெதுவுமற்றவனாக உன்னை நான் ஆக்கிவிடுகிறேன்! என் பக்தனாகி, எனக்கே மரியாதை செலுத்துவாயாக. இவற்றை நீ செய்வாயானால் என்னை முழுமையாக நீ அடைந்து விடுவாய்! உன் சகல கடமைகளையும் எனக்கே அர்ப்பணம் செய்! நீ என்னுடைய பாதுகாப்பினைப் பெறுவாய்! ஆகவே கலக்கம் தவிர்! அன்புக்குரிய என் பக்தனே!! அந்தத்தின் முனையாக விளங்கும் நானே கர்மாவாகிய செயல்களின் இலக்காகவும் இருக்கிறேன்! யோகம், பக்தி, ஞானம் ஆகிய சகலவற்றின் இலக்கும் நான்தான் என்பதை அறிந்து கொள்! ஆகவே ஒரு யோகியைப்போல் பற்றற்ற நிலையில் உன்கடமையைச் செய்! கலக்கமோ கவலையோ அடையாமல் என்னைப் பூரணமாக நம்பு! காண்டீபனே! கை நழுவவிட்ட காண்டீபத்தை எடு! பாணங்களைத் தொடு- போருக்குப் புறப்படு!

**கிருஷ்ணரின் பாதங்களைத் தொட்டு வணங்கிய பார்த்தன் காண்டீபத்தையும் கணைகளையும் கையில் எடுக்கிறான்.**

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரர் அரண்மனை.

**சஞ்ச:** குந்தி மகன் அர்ச்சுனன் காண்டீபத்தையும் கணைகளையும் கையில் எடுத்து விட்டான் பிரபு!

**திருத:** இனிமேல் போர் தவிர்க்க முடியாததொன்றாகி விட்டது. சஞ்சயா! போரின் முடிவு எதுவாக இருக்கும் என்பதனை நான் அறிந்து கொண்டேன்; எனக்கு இரதம் இனிமேல் தேவைப்படாது. ஆகவே சஞ்சயா! நீ வேண்டுமானால் என்னை விட்டுப் போய் விடலாம்.

**சஞ்ச:** மகாராஜாவின் கட்டளை இதுவானால் நான் கட்டுப்பட சித்தமாயுள்ளேன்! ஆனால் நான் தங்களை விட்டுப் பிரியப் போவதில்லை.

**திருத:** பலனைப் பற்றிக் கவலைகொள்ளாமல் தொடர்ந்து என்னுடன் இருக்கவே விரும்பினால்... இரு! அர்ச்சுனனின் முதற் கணை எவரை வீழ்த்துகிறது...? என் புதல்வர்கள் எவ்வாறு வீரமரணமடைகிறார்கள் என்பவற்றை எடுத்துக் கூறு. எனது மகன் துரியோதனன் போர் தொடங்கவில்லையே என்று அமைதியிழந்தவனாக இருப்பானே!

**சஞ்ச:** ஆமாம்! போர் எவ்வாறு முடியும் என்று இளவரசர் அறிய மாட்டார்! அதனால் தான் அவர் அமைதியிழந்தவரானார்.

**திருத:** இல்லை சஞ்சயா! வீர சத்திரியர்கள் ஒரு போதும் போரின் முடிவு எத்தகையதாக இருந்தாலும் அதற்காகக் கவலைப்பட மாட்டார்கள்!

**சஞ்ச:** தாங்கள் பார்வையற்றவராக இல்லாதிருந்தால் தாங்களும் போர்க்களம் சென்றிருப்பீர்களோ பிரபு!

**திருத:** இக்கொடிய வினாவை என்னிடம் கேட்டிருக்கலாகாது நீ! துரியோதனன் என்முழு அபிலாசைகளின் முழு வடிவம்! போர் தவிர்க்கப்பட நேர்ந்தாலும் நானே பாண்டவர்களை போருக்கு வரும்படி முயற்சிகள் செய்திருப்பேன்! சஞ்சயா! இந்தப் போர் தம்பி பாண்டு மன்னனின் புதல்வர்களுக்கும் என் புதல்வர்களுக்குமிடையில் நடைபெறும் போரென தவறாகக் கருதிவிடாதே! இது உண்மையில் வாசுதேவ கிருஷ்ணனுக்கும் எனக்குமிடையே நடைபெறும் யுத்தம்!

**சஞ்ச:** இது தெரிந்திருந்தும் தாங்கள் ஏன் யுத்தத்தை தடுக்க வில்லை!

**திருத:** நான் ஒரு சத்திரியவீரன். போர் முனையில் புறமுதுகு காட்டி என்னால் ஓட முடியாது. ஒரு முற்றுமுழுதான முடிவினை தீர்மானிக்கும் யுத்தமிது- போர் நடக்கத்தான் வேண்டும்!

**சஞ்ச:** அஸ்தினாபுரத்தைப் பற்றி கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் மன்னவரே!

**சஞ்ச:** அஸ்தினாபுரி பற்றி நான் ஏன் நினைக்க வேண்டும்? இந்த நாடு எனக்கென்ன செய்திருக்கிறது? நானே முடிக்குரியவனாக இருந்தும் என்னை அரசனாக்காமல் எனக்கு அவமானம் இழைக்கப்பட்டபோதும் பார்த்துக் கொண்டிருந்தது இந்த நாடு. நான் ஆட்சி செலுத்த முடியவில்லை; என் தம்பியின் பிரதிநிதியாகத்தான் இன்று அரியணையில் அமர்ந்திருக்கிறேன். இத்தகைய கொடுமை வேறு எங்காவது நடந்திருக்கிறதா? எனக்கிழைக்கப்பட்ட அநீதிக்கு உடந்தையாக இருந்த அஸ்தினாபுரமும் தண்டிக்கப்பட வேண்டியதே! இது எல்லோருக்கும் பேரிழப்பாகத்தானிருக்கும்! எனக்கும் தான், அந்த வாசுதேவ கிருஷ்ணனுக்கும் பேரிழப்பு ஏற்படத்தான் போகிறது. பாண்டவர்கள் போரில் காயப்பட்டால் அதனால் கிருஷ்ணனும் பாதிப்படைவான். இப் பொழுது விதுரர் இங்கிருந்தாலும் சில அரசியல் கணைகளை என்மீது பொழிந்திருப்பார்! சஞ்சயா! போர் தொடங்குவதில் இன்னும் தாமதம் என்ன?

**சஞ்ச:** இளவரசர் துரியோதனரும் இதே கேள்வியைத்தான் கங்கையின் மைந்தரிடம் இதோ கேட்டுக்கொண்டிருக்கிறார்.

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்-

**துரி:** போர் தொடங்க இன்னும் ஏன் தாமதிக்க வேண்டும் பிதாமகரே! யாரையாவது எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறீர்களா? சங்கை ஊதித் தொடங்கலாமே!

**பீஷ்ம:** இரு படைகளும் எதிரெதிரே அணி வகுத்திருக்கும் போது போர் நிச்சயம் நடக்கும். சத்திரியர்கள் போர்முனை சென்றால் வெற்றி அல்லது வீரமரணம் தான் முடிவு! அதோ பார் அணிகளின் நடுவே-அந்தக் காட்சி கிடைத்தற்கரிய காட்சி! பார்த்தனுக்குச் சாரதியான அந்த பரந்தாமன் கூறியவற்றைக் கேட்க முடியாத துர்ப்பாக்கியசாலிகள் நாம். அவ்வார்த்தைகளில் ஒரு சிறிதளவேனும் வாயுதேவன் என் காதுகளில் கேட்க வைத்திருந்தால்: இதுவரை நான் செய்த நற்பலன்களின் பேறுகளை அந்த வாயுவுக்கு அளித்திருப்பேன்! கங்கையின் மைந்தன்-பீஷ்மனாகப் பிறந்ததினால் இன்று உண்மையில் நான் துயரடைகிறேன்! "அந்த குந்தி மைந்தன் அர்ச்சுனனாக நான் பிறந்திருக்கலாகாதா" என்று படைத்தவனிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

**துரி:** பிதாமகரே! அந்த இடையன் முட்டாள் அல்ல! தங்கள் தலைமையில் அணிவகுத்திருக்கும் இந்த சேனா சமுத்திரத்துடன் மோத அவர்களால் முடியாது; பின்வாங்கிவிடச் சொல்லியிருப்பான். அவனை என்னுடன் உணவருந்த அழைத்தபோது மறுத்து, என்னை அவமானப்படுத்தினான் அந்த வாசுதேவன்! அதனை நான் என்றும் மறக்க மாட்டேன்! அதோ அவர்களுடைய இரதம் அவர்களுடைய அணி நோக்கித் திரும்புகிறது. எங்கே சங்கை ஊதி-ஒலி எழுப்பி போரைத் தொடங்குங்கள்!

**பீஷ்ம:** நான் ஒருவருக்காகக் காத்திருக்கிறேன்.

**துரி:** யார் அது....?

**பீஷ்ம:** நான் எனக்காகவே காத்துக் கொண்டிருக்கிறேன்! இந்த யுத்தம் என்னை இருதலைக் கொள்ளி எறும்பாக்கியுள்ளது. ஆகவே உரிய வேளை வரும் வரை காத்திருக்கிறேன் மகனே!

**துரி:** போர் தொடங்க நல்ல சகுனத்தைக் காத்திருக்கிறீர்கள் என்று கூறுங்களேன்.

**பீஷ்ம:** நான் நிற்குமிடத்தைப் பொறுத்தவரை உரிய நல்ல நேரம் வரவில்லை என்பது உண்மை தான்.

<u>பின்னணிப் பாடல்:</u>

**பாரதப் போர்ப் படையின் இடையினிலே
பார்த்தனுக்கு அந்தப் பரந்தாமன் அருளியதோர்
கீர்த்தி நிறைந்த அந்த கீதையின் பேரொலியே
ஆர்த்தெழுந்திந்த அவனியை அணைக்கிறதே!**

**தந்தையின் வெறிதனைத் தீர்த்திட நினைத்தன்று
விந்தைமிகுவாக்களித்த பீஷ்மரும் அன்று அரும்
சொந்த நலன்களைத் துறந்திடத் துணிந்தார்; இன்று
வஞ்சகப் படையின் தலைமையையும் ஏற்றனரே!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரீவி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

# அருள் ஜுவலர்ஸ்



436331

வண்ண நகைகளின் கூடம்

எண்ணம் முழுதும் அதை நாடி

3 SEA STREET, COLOMBO 11

3 செட்டியார் தெரு, கொழும்பு 11


# கலக்குது பார் இதன் கலரு!



1947 இல் ஆரம்பித்து இன்று வரை விளையாட்டுத்துறையைக் கலக்கி வரும் 'நாஸ்கார்' சாம்பியன்ஷிப்புக்களை கார்தான் இது. இந்தக் காரோட்டம் 200 பந்தயங்களில் அமெரிக்காவிற்கு ரிச்சார்ட் பெற்றி (வயது 58) வெற்றி கொண்டார். 1958-92 இடைப்பட்ட காலப்பகுதிக்குள் 1152 பந்தயங்களில் இடம் பெற்றிருந்தன. 1967 இல் 27 பந்தயங்களில் வென்றிருந்தார் 'பெற்றி' அவரது கார்தான் இங்குள்ளது.


# Kala



JEWELLERY


புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

433686

61 SEA STREET, COLOMBO 11


61 செட்டியார் தெரு, கொழும்பு 11


# என்ன இது நல்லாப் பாருங்களேன் கொஞ்சம்



[illegible] வரை இதய [illegible] பேசிப் பழகின் [illegible] காதலியோ-காதலனோ இருப்பதெல்லாம் [illegible] சாமாசாரம். இதயத் [illegible] இடது புறத்தை மட்டும் [illegible] படத்தில் [illegible] இருப்பது இருதயத்தின் இடது புறத்தில் [illegible] புறப்படும் இரத்தக் குழாய் [illegible] உடலில் உள்ள இரத்தக் குழாய்களில் இதுதான் மிகப் பெரிய [illegible] என்று சொல்வார்கள். படத்தில் இடது [illegible] இருதயத்தைச் [illegible] 1 செ.மீ. விட்டம் [illegible] இரத்தத்தை இருதயத்திலிருந்து உடலின் பல பாகங்[illegible] இரத்தக்குழாய்களுக்குள் [illegible] 'விஸ்னர்' இல் பிடிபட்டு விட்டார் இந்த [illegible]

# அன்புள்ள அப்பா



இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் அசாருதீன். அமைதியானவர் அடக்கமானவர். திறமையானவர்.

இந்தி நடிகை சங்கீதாவோடு கிசு-கிசுக்கப்பட்டாலும் அதனை அசாருதீனின் மனைவி நஸ்ரின் நம்பவே இல்லை. "அவரை எனக்குத் தெரியும்." என்கிறார் ஒரே வார்த்தையில்.

அசாருதீனுக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டு பேருமே ஆண் பிள்ளைகள். ஒருவர் அப்பாஸ் மற்றது அசீர்.

இந்திய கிரிக்கெட் கப்டனுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் அப்பாஸ் மீது அபாரமான பிரியம். அதன் காரணமாகத்தான் தனது மகனுக்கு அப்பாஸ் என்று பெயர் வைத்துவிட்டார்.

படத்தில் அப்பாசோடு அசாருதீன். குழந்தையோடு விளையாடும் அசாரும் உள்ளத்தில் குழந்தைதான்.

மகன் அப்பாஸ் இப்போதே கிரிக்கெட் மட்டையோடு அலைகிறானாம். ஒரு வாரிசு உருவாகிறது.

தினமுரசு வாரமலர்

# விளையாட்டுக் காதல் அல்ல









ஜெர்மன் டென்னிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராப். வயது 26. கவர்ச்சியான இந்த வீராங்கனை காதலில் வீழ்ந்தபோது பத்திரிகைகள் அதனை மோப்பம் பிடித்துச் சொல்லிவிட்டன. ஸ்டெபி அதனை மறுத்துப் பேசினார்.

மறுத்தால் விடுவார்களா ரோசமுள்ள பத்திரகையாளர்கள். கமராவோடு ஸ்டெபியின் பின்னால் [illegible].

ஒரு இதமான மாலை நேரத்தில் ஸ்டெபியும் அவரது காதலர் மைக்கல் பார்டெஸ்னும் பாரிஸ் [illegible] ஜாலியாக நடந்து சென்றனர். ஸ்டெபியின் இடையில் கைவைத்து அணைத்தபடி மைக்கல் குசியாகச் சென்ற[illegible] கிளிக்... கிளிக்...

பத்திரிகைகளில் புகைப்படங்கள் பளிச்... பளிச்...!

ஸ்டெபி இறுதியாக பணிந்தார்.

காதல் உண்மைதான் என்று ஒப்புக்கொண்டார்.

இப்போது ஸ்டெபி-மைக்கல் பகிரங்கமாகவே சுற்றுகிறார்கள்.

காதலுக்கு 'ஜே' என்ற போதும் ஸ்டெபி கிராப் டென்னிஸ் வீராங்கனை [illegible] யலில் முதலிடத்தை இழந்து[illegible] என்றாலும் கோடி கோடியாக சம்பாதித்து வைத்திருக்கிறா[illegible]

மீண்டும் முதலிடத்தைப் பிடிக்க ஸ்டெபி களத்தில் அ[illegible] காட்ட வேண்டும் என்பது [illegible] ரசிகர்களது பலத்த எதிர்பார்ப்பு.

தருவது வியோ லெ